# தொடக்கக்கல்வி ஆசிரியப் பட்டயக் கல்வி

## DIPLOMA IN ELEMENTARY EDUCATION D.El.Ed.

பருவம் - 1

தாள் -108
கலையும் கல்வியும், செயல்வழிக் கல்வியும்

தாள் - 109
உடல்நல, உடற்பயிற்சிக் கல்வி

கேரள அரசு
பொதுக் கல்வித்துறை

மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்
**2019**

**State Council of Educational Research and Training (SCERT)**
Poojappura, Thiruvananthapuram 695012, Kerala
*Website* : www.scertkerala.gov.in, *e-mail* : scertkerala@gmail.com
Phone : 0471 - 2341883, Fax : 0471 - 2341869
Typesetting and Layout : SCERT

©
Department of Education
Government of Kerala

# முகவுரை

# உள்ளடக்கம்


**பருவம் – 1**

**தாள்–108 கலையும் கல்வியும், செயல்வழிக் கல்வியும்**

**பகுதி -1 கலைக்கல்வி**

அலகு 1 - கலையும் கல்வியும்

அலகு 2 - நாடகம் – நடனம்

**பகுதி -2 செயல்வழிக் கல்வி**

அலகு 1 - உழைப்பும் மனித முன்னேற்றமும்

அலகு 2 - செயற்கல்வி முக்கியத்துவமும் நோக்கங்களும்

அலகு 3 - செயல்வழிக் கல்வி – கருத்துமண்டலங்கள்

**தாள்–109 உடல்நல, உடற்பயிற்சிக் கல்வி**

அலகு 1 - உடல்நல, உடற்பயிற்சிக் கல்வியின் சிறிப்பியல்பும் முக்கியத்துவமும்

அலகு 2 - உடல்நலப் பழக்கங்களும் உணவு முறைகளும்

அலகு 3 - எனது பள்ளிக்கூடம்

# தொடக்கக் கல்வி ஆசிரியப் பட்டயக் கல்வி

## DIPLOMA IN ELEMENTARY EDUCATION D.El.Ed.

பருவம் - 1

தாள் -108

பகுதி - 1

கலையும் கல்வியும்

கேரள அரசு

பொதுக் கல்வித்துறை

மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்

2019

## அலகு - 1

# கலையும் கல்வியும்

### முன்னுரை

மனித வாழ்க்கை பிற உயிரினங்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாகும். மனிதன் அல்லாத பிற உயிரினங்கள் அனைத்தும் பிறவியினால் உள்ள தூண்டுதலினால் மட்டுமே வாழ்க்கை நடத்துகிறது. வாழ்க்கைச் சூழல்களை மாற்றியமைத்தும், படைப்பாற்றலுடன் ஈடுபட்டு நவீனப் படுத்தியும் மனிதன் முன்னேற்றத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறான். வாழ்க்கைக்கு மெருகூட்டுகின்ற இக்கட்டுகளை எதிர்கொள்வதற்கு உதவுகின்ற கவலைகளைப் படைப்பாற்றலாக வெளியிடுகின்ற ஏராளமான கலைவடிவங்கள் உருவாயின. இந்தியக் கலைஞர்கள் கலைகளை 64 - ஆக வகைப்படுத்தினர். அவற்றுள் சில அழகுக்கலைகள் எனவும் பிற அன்றாட வாழ்க்கைக்கு தேவையானவற்றை நிறைவு செய்யும் கலைகள் எனவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. கலை கலைக்காகவா, வாழ்க்கைக்காகவா என்ற விவாதங்கள் உலகெங்கும் இருந்தன. பண்டைக் காலத்தில் கலை வாழ்க்கையிலிருந்து வேறுபட்டு நிற்கவில்லை என்று கூறலாம். நாட்டுப்புறக் கலைகள் அளிக்கின்ற குறிப்பும் அதுவே தான். ஆனால் கலைகளை இரசித்தல் ஒய்வு நேர பொழுதுபோக்காகப் பிற்காலத்தில் மாறியது. ஒவ்வொரு கலையும் கூடுதல் நுட்பக் கூறுகளை உட்கொண்டு தனித்துவத்துடன் வளர்ந்ததைப் பார்க்கலாம். கலைஞர்கள் சிறந்த திறனுடையவர்களாகவும், படைப்பாற்றல் திறனில் வாழ்த்தப் பட்டவர்களாகவும் கருதப்பட்டனர். கலையில் மட்டுமல்ல எல்லாத் துறைகளிலும் படைப்பற்றலுக்கு இடம் உண்டு என்பது இப்போது பொதுவாக அங்கீகரிக்கப்படுகிறது.

உணவும் உடையும் பிற வாழ்க்கை வசதிகளும் மட்டுமல்ல கலை இரசனைகளும் நிகழ்த்துதல்களும் இணைந்ததே மனித வாழ்க்கை. கல்வியானது சமுகத்தில் வாழ்வதற்கான எல்லா திறன்களையும், அறிவையும், பெறுவதற்காகவே உருவாக்கப்பட்டதாகும். எனவே கலை இரசனைகளும் நிகழ்த்துதல்களும் இல்லாத பாட ஏற்பாட்டைக் கற்பனை செய்ய இயலாது. இதனை மனதிற்கொண்டு தான் உலகெங்குமுள்ள பாட ஏற்பாட்டில் கலையின் முக்கியத்துவத்தை உணர்ந்தே கலை உட்படுத்தப் பட்டுள்ளது.

ஆசிரிய மாணவர்கள் கலைக்கல்வியின் உள்ளடக்கம், கற்பித்தல் முறை ஆகியவற்றைக்குறித்த அறிவைப் பெறவேண்டும். வட்டார அறிவு, நிபுணர்களின் சேவை இவை தேவையாக இருந்தாலும் பிற பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் கலைக்கல்வியை அறிந்து கொள்ள வேண்டும். சில வகுப்புகளைக் கையாண்டு பயிற்சி பெறவும் வேண்டும். அதற்கு உதவும் வகையிலேயே கலைக்கல்வி பாட ஏற்பாடு உருவாக்கப்பட்டுள்ளது. ஓவியம், நாடகம், நடனம், திரைப்படம் ஆகியவை பாட ஏற்பாட்டில் உட்படுத்தப்பட்டுள்ளன.

### கற்றல் அடைவு - 1

அன்றாட வாழ்வில் கலையின் முக்கியத்துவத்தை விளக்குகின்றனர்.

நீங்கள் எப்போது உங்களிடமே வினாக்களை எழுப்பியிருக்கிறீர்கள்? வாழ்வில் சில முக்கியப் பிரச்சினைகளைச் சந்திக்கின்ற சூழல்களில் அல்லவா, இத்தகைய சுயவினாக்களை நாம் எழுப்புகிறோம். நீங்கள் உங்களுக்குள்ளே எழுப்பிய சில வினாக்களை நினைவு கூருவதாக இருந்தால் அத்தகைய வினாக்கள் எவை?

•

- 
- 

எல்லா வினாக்களுக்கும் விடையோ தீர்வோ கண்டுபிடிக்க இயலாது எனினும் வாழ்க்கை ஒரு நதியைப் போன்று முன்னோக்கி ஓடிக்கொண்டேயிருக்கிறது அல்லவா? இத்தகைய வினாக்களை எழுப்பி முன்னேற இயல்கின்ற மனிதரின் சிந்தையின் சிறப்பே வாழ்க்கையையும் உலகத்தையும் நவீனப்படுத்திக் கொண்டிருக்கிறது. சிந்தனையில் புதுமையும் அதன் பகுதியாக எழும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளும் பெறுவது மனிதனின் படைப்பாற்றல் திறனினால் ஆகும். வாழ்க்கையை ஆக்கப்பூர்வமாக மனிதன் மாற்றுவதற்கான திறன்பெறுவதும் இந்தப் படைப்பாற்றல் திறனினாலாகும்.

அன்றாட வாழ்க்கையில் எத்தகைய சூழல்களில் கலைசார்ந்து நாம் செயலாற்றுகிறோம்? தனி வாழ்க்கையில், குடும்ப வாழ்க்கையில், சமூக வாழ்க்கையில் என வேறுபடுத்திப் பார்க்கும் போது கலை சார்ந்து நாம் செயலாற்றும் செயல்பாடுகள் எந்த மண்டலங்களில் உட்படுகின்றன?

- வாழ்விடம்
- உணவு
- உடை
- தொழில்
- கேளிக்கைகள்
- கொண்டாட்டங்கள்

வேறு உங்களுக்கு உட்படுத்த இயல்வன எவை?

- 
- 
- 

தூக்கணாங் குருவியின் கூட்டை நீங்கள் பார்த்திருக்கிறீர்கள் அல்லவா? மிகக் கலை நுணுக்கத்துடன் கூடு அமைக்க தூக்கணாங் குருவிகளுக்குக் கற்பித்தது யார்?

குருவிக் குஞ்சுகளுக்கும் இது இயலும் அல்லவா?

இதற்குப் பின்னால் உள்ள இரகசியம் என்ன? பிறப்பிலேயே உள்ள சிறப்பியல்புகளே கலைநயம் மிக்கப் படைப்புகளின் பின்னணியில் உள்ள ஆக்கச்சக்தி.

வேறு எந்த உயிர்கள் கலைநயத்துடன் வாழ்விடங்களை அமைக்கின்றன.

மனிதன் அவனுடைய வாழ்விடமாகிய வீட்டை உருவாக்குவதில் எத்தகைய கலை நயம் சார்ந்த சிறப்பியல்புகளைக் கருத்தில் கொள்கிறான்.

- வடிவமைப்பு - வடிவங்கள் வரைந்து கருத்தைத் திட்டமிடுதல்
- கட்டுமானம் - வேறுபட்ட பொருட்களைத் தேர்வு செய்தல்
- உட்பக்கம் தயாராக்குதல் - ஒவ்வொரு அறையையும் உரிய கருவிகளைப் பயன்படுத்தி ஒழுங்குபடுத்துதல்.

- பல்வேறு வடிவங்களில் நிலம் பிரித்தமைத்தல்
- நிறம் அளித்தல் - வேறுபட்ட நிறங்கள் கலந்து அழகுப்படுத்துதல்.

மனிதனின் அழகுணர்வே கலைநயத்துடன் வீடுகளை வாஸ்து சிற்பங்களாக மாற்றுகின்றன. அவை உறங்குவதற்கு உரிய ஓரிடம் என்பதன் அப்பால் அழகு மிக்கக் கற்பனைகளின் தோற்றங்களாக மாறுகின்றன.

■ உணவுப் பழக்கத்திலும் கலையுணர்வு நம்மை ஆழமாக ஆட்கொள்கிறது.

- சுவை மாற்றங்களில், சமையல் செய்யும் கலையில்
- நிறம், மணம் என்பன கவனித்து ஈர்க்கும் சமையல்
- ஈர்ப்புத்தன்மையுடனும் வேறுபட்ட முறைகளிலும் சமையல் செய்யும் முறைகள்
- சமையல் செய்த உணவை ஒழுங்குபடுத்துதல்.

மனிதனின் அழகுணர்வின் வெளியீடாகச் சமையல் மாறிய போது அந்தச் செயலும் செயல்பாடுகளும் சமையற் கலையாக மாறியது.

ஆடை தயாரித்தலிலும் பயன்பாட்டிலும் கலைநயம் சார்ந்த எத்தகைய சிறப்புகளை நாம் கருத்தில் கொண்டுள்ளோம்.

- வடிவமைப்பில்
- நிறவேறுபாட்டில்
- ஆடை அணியும் முறையில்

இனி எவற்றை இதில் உட்படுத்தமுடியும்.

தொழில் சார்ந்துள்ள காரியங்களில் கலைநயத் திறன்கள் எங்கெல்லாம் வெளிப்படுகின்றன?

- பரம்பரைத் தொழில்களில்
- நகை உருவாக்குதல்
- கருவி உருவாக்குதல்
- கைவினைப் பொருட்கள்
- வேளாண் நிலம் சீர்ப்படுத்துதல்
- மண்பாத்திரம் தயாரித்தல்
- சிற்பம் உருவாக்குதல்.

மேலும் எவற்றையெல்லாம் உங்களால் கூற முடியும்? கொண்டாட்டங்களிலும் கேளிக்கைகளிலும் படைப்பாற்றல்களின் வெளிப்பாடுகளே நடைபெறுகின்றன.

திருமணம், பிறந்தநாள் போன்ற நிகழ்வுகளுக்கு மேடை அமைத்தல், பாடல்கள் பாடுதல், நடன நிகழ்ச்சிகள் போன்ற செயல்பாடுகளிலும், பொழுதுபோக்குச் சூழல்களில் நடிப்பு வடிவங்களையும் கலை நயத்துடன் வெளிப்படுத்துகின்றனர்.

மனிதனின் வெளியீட்டு திறனும் இரசனைத் திறனும் ஒன்றிணைந்து கலையுணர்வைப் படைக்கும் போதே கலையின் ஒவ்வொரு கூறினையும் இணைத்து வாழ்க்கையை நாம் புதுமைப்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

- அன்றாட வாழ்க்கையில் கலையின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்ற கலந்துரையாடலில் நீங்கள் தெரிந்து கொண்டவற்றுள் எவற்றையெல்லாம் உட்படுத்துவீர்கள்?

## கற்றல் அடைவு: 2

கலையின் சிறு வரலாற்றுக்குப் பண்பாட்டுடன் உள்ள தொடர்பைப் பகுத்தறிதல்.

மனிதகுல வரலாற்றைப் போன்ற பழமை கலை வரலாற்றுக்கும் உண்டு அல்லவா? இவை இரண்டும் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டுள்ளமை எதனால்?

மனிதனில் மட்டும் காணப்படும் ஒரு தனிப்பட்ட சிறப்பியல்பே பண்பாடு. வாழ்க்கை முறையிலும் பழக்க வழக்க முறைகளிலும் அது நிலைத்து நிற்கின்றது. மானிடப் பண்பாட்டின் பிரதிபலிப்புகள் அனைத்துமே வாழ்வின் அனைத்துச் செயல்பாடுகளிலும் காணமுடிகின்றன. வேளாண்மை, நம்பிக்கைகள், சடங்குகள், பழக்க வழக்கங்கள், அறச்செயல்கள் சட்டங்கள், மொழி, கலைப் படைப்புகள், நிறுவனங்கள், கருவிகள், தொழில்நுட்பங்கள், சிந்தனைகள், ஆகியவை பண்பாட்டின் சான்றுகள் ஆகும். இவற்றுடன் மனிதருக்குள்ள தொடர்பிலிருந்து உருவெடுத்த நுண் ஒளியே பண்பாடு. மனிதரைப் பிற உயிரினங்களிலிருந்து வேறுபடுத்துவதும் இந்தப் பண்பாட்டின் சிறப்பியல்பே ஆகும்.

மனிதகுல வரலாற்றைச் சோதித்துப் பார்க்கும் போது மனதில் தோன்றுபவை எவை?

கற்காலம், உலோகக்காலம் பற்றிய சிந்தனைகள் அல்லவா? ஆயுதங்களைப் பயன்படுத்தித் தேவைகளை நிறைவடையச் செய்ய தொடங்கியதோடு மானிட வரலாறு தீர்மானிக்கப்பட்டது. கூட்டமாக வாழ்ந்ததன் பலனாக மனிதனிடம் சமூக உணர்வு வளர்ந்தது. அது பண்பாட்டின் அடித்தளத்தை அமைத்தது. எல்லா உயிரினங்களும் சமூகமாக வாழ்கின்றன எனினும் மனிதனின் உணர்வு மண்டலம் சமூகத்தின் பகுதியான பண்பாட்டுச் சிறப்பியல்புகளை உருவாக்கியது. இதற்குத் தூண்டுதலாக அமைந்தது மனிதனின் படைப்பாற்றலாகும்.

காலத்தின் மாற்றத்திற்கு ஏற்ப முன்னேறுகின்ற ஓர் உயிரி மனிதன் மட்டுமே. உழைப்பின் புது முகங்கள் அவனின் ஆற்றல் மையங்கள் ஆகும். கிடைத்தவற்றால் பசியை அடக்கிய காலம், பின்னர் பூமியில் வியர்வை சிந்தி உயிர்வாழ அவன் முயற்சி செய்தான். மண்ணுடன் மனிதனுக்குள்ள உறவில்தான் மானிட வளர்ச்சியின் வேர்கள் ஆழமாகச் செல்கின்றன.

தனிப்பட்டு நடந்த ஆதி மனிதர்கள் இயற்கையின் வளங்களைக் கைகளில் பிடித்தனர். ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு பயணம் செய்தனர்.

எங்கேயும் வாழ்விடத்தை நிலையாக ஏற்றுக் கொள்ளவில்லை. இறுதியில் புவியின் செழிப்பு வியப்புணர்வாக உள்ளத்தில் நிறைந்த போது உழைப்பு பற்றிய ஊக்கவுணர்வு ஏற்பட்டது. இது மனிதர்கள் ஒருமிக்குமாறு வாய்ப்பினை உருவாக்கியது அத்துடன் கருத்துப் பரிமாற்றமும் உணர்வுப் பங்கீடுகளும் வாழ்க்கையின் தேவைகளாக மாறின. இத்தகைய இதய உணர்வின் இனிமையில் இரண்டறக் கலந்தே கலைகள் வளர்ந்தன. மேலும் மானிட வாழ்வைப் பொருளுடையதாகவும் விரிந்த பார்வையுடையதாகவும் அமைத்ததுடன் சுயநல உலகிலிருந்து பொதுவுடைமை உலகை நோக்கியுள்ள மாற்றமும் நிகழ்ந்தது.

இந்த மாற்றத்தின் கதையையே மானிடப் பண்பாட்டின் வரலாறு உட்கொண்டுள்ளது. சமூகச் சிந்தனையினுடையவும் சமத்துவ உணர்வினுடையவும் அடிப்படையில் மானிட வளர்ச்சியின் அழகான காட்சிகள் வெளிப்படுகின்றன.

கலைக்கும் பண்பாட்டிற்கும் உள்ள தொடர்பு விதையும் தாவரமும் போன்றது. விதையிலிருந்து தாவரமும் தாவரத்திலிருந்து விதையும் உருவாகிறது. மானிட வளர்ச்சியின் உருவாக்கமே கலை.

நீண்டகாலமாக மனிதன் அடைந்த வளர்ச்சியின் முழு ஒளியை அது உட்கொள்கிறது. அத்துடன் கலை மானிடப் பண்பாட்டின் படைப்பாளியும் ஆகும். தாளஉணர்வும் நாத அழகும் நிறங்களின் பொலிவும் பகுத்தறிய இயலாத மானிடம் ஒருபோதும் முன்னேற்றம் பெறுவதில்லை. காலத்தை வெல்கின்ற கருத்தாக்கம் பெறுவதற்கு உரிய தகுதியை மனிதச் சமூகத்திற்கு அளிப்பது கலையே ஆகும். கலையும் பண்பாடும் ஒன்றோடொன்று தொடர்புள்ள காரணிகளாக நிலைகொள்கின்றன. கலையைப் பற்றிய கல்வி மானிடப் பண்பாட்டின் ஒளி மையத்திற்கு நம்மைக் கொண்டு செல்கிறது. பண்பட்ட மனம் கலை அழகிற்காகக் கண்களைத் திறக்கவும் செய்கின்றது.

இயற்கை ஆற்றல்களை திருப்திபடுத்தவும் வனவிலங்குகளைப் பழக்கப்படுத்தவும் கலை பயன்பட்டது. இயற்கை நிகழ்வுகளில் மனிதன் கலையின் பல்வேறு தோற்றங்களைக் கண்டான். இவற்றிலிருந்து ஊக்கம் பெற்ற மனிதன் கால் பதிப்பதிலும், ஒலி எழுப்புவதிலும், ஓவியம் வரைவதிலுமாகக் கலையின் தொடக்க வடிவங்களுக்கு உருவம் கொடுத்தான்.

மனிதன் அவனுடைய மனமகிழ்ச்சிக்காகவே கலையைத் தோற்றுவித்தான். கற்பனை உலகின் உருவாக்கமே கலை எனக் கூறப்படினும் மனிதனின் வாழ்க்கை அனுபவத்தின் ஒருங்கிணைந்த வெளிப்படையான தோற்றமே கலைவடிவங்கள். மனித மனதில் பிறப்பிலேயே அமைந்திருக்கும் கலையுணர்வே பல்வேறு வடிவங்களிலும் பாவனைகளிலும் வெளிப்படுகின்றன. மகிழ்ச்சி வரும் போது துள்ளிக்குதிப்பதும் அழகான பொருட்களைக் காணும் போது மகிழ்ச்சி அடைவதும் இனிமையான பாடல்களைக் கேட்கும் போது ஆனந்தம் கொள்வதும் மனிதனுக்கு பிறப்பிலேயே கிடைத்துள்ள திறன் ஆகும். கலை என்ற சொல்லுக்கு ஆங்கிலத்தில் 'ஆர்ட்' என்று கூறப்படுகிறது. 'ஆர்ஸ்' என்ற இலத்தீன் சொல்லில் இருந்தே கலை என்ற பொருள் தரும் ஆர்ட் என்ற சொல் உருப்பெற்றது. வடமொழியில் கலைக்குச் சிற்பம் (சில்பம்) எனப் பொருள் கொடுக்கப்பட்டுள்ளதெனினும் ஆனந்தம் தருவது என்ற பொருளில் பயன்படுத்துகின்ற 'கம்லாதி' என்ற வடமொழிச் சொல்லிலிருந்தே கலை என்ற சொல் தோன்றியது

## கலையின் உற்பத்தி :

கற்கால மனிதர்கள் வாழ்க்கை வாழ்வதற்கே வேட்டையாடினர். வேட்டையாடிக் கிடைத்த விலங்குகளின் மாமிசத்தை உணவாகவும், தோலை உடையாகவும் பயன்படுத்தினர். வேட்டையாடலின் போது தங்களுக்கு ஏற்பட்ட வியப்பூட்டும் அனுபவங்களையும் வீர நிகழ்ச்சிகளையும் பிறரிடம் கூறுவதில் அவர்கள் மகிழ்ச்சி அனுபவித்தனர். இதற்காகவே விலங்குகளின் ஒலியை எழுப்பவும், கால்பதிக்கவும் உடற்பயிற்சிகள் செய்யவும் செய்தனர். வில்லில் அம்பு தொடுத்து எய்யும் முறையைப் பின்பற்றி, விலங்குகளின் எலும்புத் துண்டுகளை நாரினால் இழுத்துக் கட்டி வாத்தியக் கருவிகளை உருவாக்கினர். பரந்த இடத்தில் குழி தோண்டி அதன்மேல் தோல்களால் இழுத்துக்கட்டி தாளக்கருவிகள் உருவாக்கினர். இரவு நேரங்களில் நெருப்பு வளர்த்தி அதனைச் சுற்றிலும் நின்று பாதம் பதித்து ஆரவாரமாகக் கைகொட்டி ஆடவும் செய்தனர். சில சூழல்களில் கருத்துப் பரிமாற்றத்திற்காகப் படங்கள் வரைந்தும் காட்டினர். எழுத்துக்களும் வாசிப்பும் நடைமுறையில் இல்லாதிருந்த காலகட்டத்தில் தோன்றிய ஓவியக்கலையும் நடனக்கலையும் இசைக்கலையும் பண்படாத கலைவடிவங்களாகவே உருப்பெற்றன.

## கலையின் வளர்ச்சி - பாரதப் பின்னணி

சடங்குகள் - பழக்க வழக்கங்கள், கொண்டாட்டங்கள், சமூக நம்பிக்கைகள் ஆகிய மானிட வாழ்க்கையின் முக்கிய நிகழ்வுகளுடன் இணைந்தே பாரதத்தில் கலைகள் உருப்பெற்றன. சமயம், தேசியம், வட்டாரம் சமூகம் என்பனவற்றின் தாக்கங்களாலும் ஆட்சி அமைப்புகளின் ஈடுபாடுகளாலும் பல்வேறு நாடுகளுடன் உள்ள கொடுக்கல் வாங்கல்களாலும் அரசியல்

கண்ணோட்டங்களின் தாக்கங்களாலும் கலைகள் தொடர்ச்சியாக மாறிக் கொண்டிருக்கின்றன. கலைகளுக்குப் பாரதம் அளித்த முக்கியத்துவத்தின் சான்றே பரதமுனியின் நாட்டியச் சாத்திரம். இது ஐந்தாம் வேதமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. நாட்டியச் சாத்திரம் கலைகளை அறுபத்தி நான்காக வகைப்படுத்தியது. கோயில்களுடன் தொடர்புகொண்டும் வேதங்கள் உபநிடதங்கள், புராணங்கள், வேள்விகள், சடங்குகள் என்பனவற்றுடன் தொடர்பு கொண்டுமே பாரதத்தில் செவ்வியல்கலைகள் வடிவம் பெற்று வளர்ச்சி அடைந்தன. வட்டார அளவில் நிலைநின்ற கலைகள் வட்டாரக் கலைகள் என்றும் வரையறைகளுடன் உட்பட்ட கலைகள் செவ்வியல் கலைகள் என்றும் கால - நாட்டியச்சாத்திரத்தில் வகைப்படுத்தப்பட்டுள்ளது. காலகட்டங்களுக்கு ஏற்ப பண்டைய கலைகள் மறுமலர்ச்சிக் கலைகள், நவீனக்கலைகள் எனத் தற்போது வகைப்படுத்தப்பட்டுள்ளன. வட்டாரம், நாடோடி, செவ்வியல் நடனங்கள் எனப் பல்வேறு கலை வளம் கொண்டது பாரதம்.

## கேரளப் பின்னணி

சங்ககாலம் முதல் தமிழ்நாட்டின் பகுதி என்ற நிலையில் சுதந்திரமான நாட்டுப்புறக் கலைவடிவங்கள் ஏராளம் கேரளத்தில் இருந்தன. கேரளத்தில் செவ்வியல் கலைகள் உருப்பெற்றதும் வளர்ச்சியடைந்ததும் கோவில்களை மையமாகக் கொண்டாகும். கோவில் சடங்குகள், திருவிழாக்கள், நம்பிக்கைகள், என அனைத்துச் செயல்பாடுகளுக்கும் கலைவடிவங்கள் தேவைப்பட்டன. நூற்றாண்டுகளின் பழமையும் பாரம்பரியமும் மிக்கக் கலைகள் கேரளத்தில் உள்ள கோவில்களில் இன்றும் நடைமுறையில் உள்ளன. கோவில்களில் பல வடிவங்களில் அமைக்கப்பட்ட கல் மண்டபங்கள், மானிடப் பாவனையின் தோற்றங்களாகும். கதகளி, கூத்து, துள்ளல், கூடியாட்டம், திடம்பு நடனம் ஆகிய கோவில்கலைகளை மக்கள் அதிகம் இரசித்திருந்தனர்.

அதைப் போன்று ஆசாரக்கலை வடிவங்களான தெய்யம், திற, படயணி, கோலம் துள்ளல், சர்ப்பம் துள்ளல், காவடியாட்டம், கொட்டிப்பாடிசேவ, கருடநடனம், களம்பாட்டு என்பன இன்றும் கோவில்களிலும் காவுகளிலும் நடைமுறையில் உள்ளன. சமூகம் சார் கொண்டாட்டங்களில் இடம்பெற்றிருந்த கலைகளான ஒப்பனா, மார்கம்களி, திருவாதிரைக்களி என்பன இன்றும் பயன்பாட்டில் உள்ளன. வீரக் கலையான களரிப்பயற்று கேரளத்துக்கே உரிய கலைவடிவம் ஆகும். வேளாண்மையுடனும் பொழுதுபோக்கினோடும் தொடர்புடைய நாற்றுப்பாட்டு, குறத்திப்பாட்டு, கபடிவிளையாட்டு போன்றனவும் நடைமுறையில் இருந்தன.

## கலையின் வகைகள்

கலையின் வரலாற்றுடன் பண்பாடு சார்ந்த தொடர்பை நீங்கள் பகுப்பாய்வு செய்தீர்கள் அல்லவா? கலை வடிவங்களை விரிவாகத் தெரிந்து கொள்வதற்கும், அவைகளின் தன்மைகளைக் கூர்மையாக உற்றுநோக்கவும், கற்றலின் வாயிலாகச் சில கருத்துக்களைப் புரிந்து கொள்வதற்கும் இயன்றது அல்லவா. அதைப்போன்ற ஒரு தேடல் அவசியம் அல்லவா? கலையின் வகைப்பாட்டின் வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கலையின் பண்புகளையும் தனித்தன்மைகளையும் கண்டுபிடிக்க இயலும் அல்லவா?

மனிதனின் வாழ்க்கையோடு தொடர்புடைய கலை வடிவங்கள் நடைமுறை, பயன், அழகு, என்பனவற்றின் அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு பயனும் நடைமுறைத் தன்மையுமுள்ள கலைகள் பயன்பாட்டுக் கலைகள் எனவும் அழகுடன் இரசனை வாய்ப்புகள் உடைய கலைகள் மென் கலைகள் எனவும் பிரிக்கப்பட்டுள்ளன.

இவை முறையே பயன்பாட்டுக் கலைகள் (Applied Arts) எனவும் நுண்கலைகள் (Fine Arts) எனவும் அறியப்படுகின்றன. கலையின் இப்பிரிவுகளை வகைப்படுத்தியவர் பிரபல தத்துவமேதையான

அரிஸ்டாட்டில் ஆவார். முக்கியமான பயன்பாட்டுக் கலைகள் வீடுகட்டுதல், ஆடை அலங்காரம், ஆடை தயாரிப்பு, வீட்டு உபயோகப் பொருட்கள் தயாரித்தல், வீட்டை அலங்கரித்தல், சிற்பக் கலை, வாஸ்து கலை, போன்றவையாகும்.

பொழுதுபோக்கிற்காகவும் மனநிறைவிற்காகவும் நடத்தப்படும் கலைகள் நுண்கலைகள் எனப்படுகின்றன. இரசனைத் தன்மையே நுண்கலைகளின் உயிர்நாடி ஆகும். இசை, நடனம், நாடகம், இலக்கியம் போன்றவை நுண்கலைப் பிரிவில் உட்பட்டவை ஆகும். இவற்றுள் உள்வாங்கி வெளிப்படுத்தும் கலையான இசையும், நடிப்பிற்கு முக்கியத்துவம் கொடுக்கும் கலைகளான நாடகம், நடனம் போன்றவையும் கருத்து வெளியிடும் திறன் அதிகமாகத் தேவைப்படும் கலை இலக்கியமும் ஆகும்.

அமைப்பு முறையின் அடிப்படையில் கலைகளைச் செவ்வியல் (Classical), நாட்டுப்புறம் (Folk) என இரண்டாக வகைப்படுத்தியுள்ளனர். முறையானதும் அடிப்படையானதுமான கலைகள் செவ்வியல் கலைகள் ஆகும். கிராமீய முறையிலான சாதாரண மக்களும் இரசிக்கக்கூடிய கலைகள் நாட்டுப்புறக் கலைகள் ஆகும். இவற்றுள் முதலில் தோன்றிய கலைகள் நாட்டுப்புறக் கலைகள். இசை, நடனம், நாடகம், போன்ற கலைகளின் நாட்டுப்புற வடிவங்களும் செவ்வியல் வடிவங்களும் காணப்படுகின்றன.

## கண்நுகர் கலைகள், செவிநுகர் கலைகள், கண்-செவி நுகர் கலைகள்

கலை வடிவங்கள் அனைத்தும் மனித உள்ளங்களை ஆனந்தப்படுத்தும் ஊடகங்கள் ஆகும். அவை கண்நுகர் கலைகள், செவிநுகர் கலைகள், கண்-செவி நுகர் கலைகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன. சில கலை வடிவங்கள் காதுகளுக்கு இன்பம் அளித்து உள்ளத்திற்கு நிறைவையும் அளிக்கிறது. வேறு சில கலைகள் கண்ணிற்கு இன்பத்தையும் சில கலைகள் கண்ணிற்கும் காதிற்கும் இன்பத்தையும் அளிக்கின்றன.

### கண்நுகர் கலைகள்

காண்பதன் மூலம் உள்ளத்திற்கு மகிழ்ச்சி அளிக்கக் கூடிய கலைகள் கண்நுகர் கலைகள் ஆகும். ஓர் ஓவியத்தையோ, சிற்பத்தையோ காணும் போது ஏற்படுகின்ற உணர்வுகள் உடனடியாக வெளிப்படும். கண்நுகர் கலையில் கலைஞன் கதாபாத்திரத்தையோ, பொருளையோ, நிகழ்வையோ பார்வையாளர்களின் முன் வெளியிடுகிறான். ஓவியம் வரைதல், சிற்பக் கலை, கைவினைக்கலை, வாஸ்துக்கலை போன்றன கண்நுகர் கலைகளில் உட்படுகின்றன.

### செவி நுகர் கலைகள்

கேட்ட உடனேயே மனித மனதிற்கு இன்பத்தை அளிக்கக் கூடிய கலைவடிவங்கள் செவிநுகர் கலைகள் ஆகும். இனிய இசை காதிற்கும் மனதிற்கும் ஒரேபோல் இன்பத்தை அளிக்கிறது. கடின உழைப்பிற்கும், கவலைகளுக்கும் இடையே வாழ்கின்ற மனிதனுக்கு இசை மன மகிழ்ச்சியை அளிக்கிறது. மனித மனங்களைக் கட்டுப்படுத்துவதற்கும், பறவைகளும் விலங்குகளும் சுற்றுப்புறத்தை மறந்து மூழ்கி இருக்கச் செய்வதற்கும் உரிய மந்திர சக்தி இசைக்கு உண்டு. இசையின் மந்திரச்சக்தி இனிமையான பாடலிலும் இசைக்கருவிகளின் தாளத்திலும் வெளிப்படுகிறது.

### கண் - செவி நுகர் கலைகள்

கண் நுகர் கலைகள், செவி நுகர் கலைகள், போன்றவைகளின் ஒருங்கிணைப்பே கண் - செவி நுகர் கலைகள் ஆகும். ஒரே நேரத்தில் காணவும் கேட்கவும் இயல்கினற கண்- செவி நுகர் கலைகள் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற பாகுபாடின்றி அனைவரையும் இரசிக்க வைப்பதாகும். நடனங்கள், நாடகம், சர்க்கஸ், திரைப்படம் போன்ற கலை வடிவங்கள் கண்-செவி நுகர் கலைகள்

பிரிவில் உட்படுகின்றன.

ஒவ்வொரு பிரிவிலும் உள்ள எந்தெந்த கலைகளைப் பற்றிக் கண்டுபிடிக்க உங்களால் இயலும்? பிற பிரிவுகளுக்கு வாய்ப்பு உள்ளதா?

- நாட்டுப்புறக் கலைகள்
- செவ்வியல் கலைகள்
- சடங்கு சார்ந்த கலைகள்

இந்தப் பிரிவுகளின் சிறப்பியல்புகளும் இப்பிரிவில் உட்படுகின்ற கலைகளும் எவை?

**நாட்டுப்புறக் கலைகள்:** உழைக்கும் வேளைகளை உற்சாகப்படுத்தவும் கருத்துக்களைப் பரிமாற்றம் செய்யவும் கிராமப்புற மக்கள் கலைகளைத் தோற்றுவித்தனர். பருவகால மாற்றங்களைக் கொண்டாடுவதற்கும் இயற்கையை அடிப்படையாகக் கொள்வதற்கும் பலவகையான கலை வடிவங்களைக் கண்டுபிடித்தனர்.

இந்த நாட்டுப்புறக் கலைகள் பிற்காலத்தில் செவ்வியல் கலைகளுக்கும் நவீன கலைகளுக்கும் அடிப்படையாக அமைந்தன.

ஒழுங்கற்ற நடனங்களாகத் தோன்றிய ஆரம்பகால கலை வடிவங்கள் பிற்காலத்தில் ஓவியக் கலையாகவும், இசையாகவும், சிற்பக் கலையாகவும் மாறி பல்வேறு முறைகளில் உலகெங்கும் பரவின.

நாட்டுப்புறக் கலைகள் பொதுவாகச் சடங்கு சார்ந்தவை, தொழில் சார்ந்தவை, பொழுதுபோக்கு சார்ந்தவை, என வகைப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றுள் சடங்குகளோடு தொடர்புப்படுத்தி நடத்தப்படுபவை சடங்கு சார் கலைகளாகவும், அறுவடை, உழவர் பெருவிழாக்கள் போன்றவைகளுடன் தொடர்புடையன வேளாண் கலைகளாகவும், (தொழில் சார்ந்த) பொழுதுபோக்கு, மகிழ்ச்சி என்பன நோக்கமாகக் கொண்டவை பொழுதுபோக்குக் கலைகளாகவும் வடிவம் பெற்றன.

**நாட்டுப்புறப் பாடல்கள்:** சாதாரண மக்களின் வாழ்க்கையோடு தொடர்புடைய வட்டார இசையே நாட்டுப்புறப் பாடல்கள் ஆகும். நாட்டு வழக்கு, நாடு மொத்தமாக, நாடு முழுவதும் என்பதெல்லாம் இதன் பொருள்களாகும். செவ்வியல் விதிமுறைகளுக்குக் கட்டுப்படாத இந்நாட்டுப்புறப்பாடல்கள் எளிமையானவையும் இனிமையானவையும் ஆகும். இது கிராமீய இசையாகும். கிராமம் சார்ந்ததும் சாதாரண மக்கள் சார்ந்ததும் ஆகும். எழுத்தறிவு இல்லாத காலத்தில் தோன்றிய நாட்டுப்புறப் பாடல்களுக்குப் பொழுதுபோக்குடன் சமயம் சார்ந்த முக்கியத்துவமும் காணப்பட்டது. மக்களின் வாழ்க்கை நிகழ்வுகளையும், வழிபாட்டு முறைகளையும் அடிப்படையாகக் கொண்டவைகளே நாட்டுப்புறப் பாடல்கள். அந்தந்த தேசத்தின் இசைப் பெருமைகளை வெளிப்படுத்தும் நாட்டுப்புறப் பாடல்கள் சடங்கு, சமயம், தொழில் சார்ந்து மூன்று பிரிவுகளாகக் காணப்படுகின்றன.

**நாட்டுப்புற நடனம்:** தொழில் சார்ந்த நடனங்கள், அல்லது வேளாண் நடனங்கள் ஆகியவை முக்கியமான தொழிலுடன் தொடர்பு கொண்டு நடத்தப்படுபவை ஆகும். அறுவடை, வேளாண் விழாக்கள் போன்றவைகளோடு தொடர்பு கொண்டு நடத்தப்படுகின்ற வேளாண் நடனங்களை நம் நாடு முழுவதும் காண இயலும். ஓணம், விஷு, பொங்கல், ஹோலி, உகாடி போன்ற முக்கியமான வேளாண் விழாக்களில் நாட்டுப்புற நடனங்கள் நிகழ்த்தப்படுகின்றன. தானியக்கிடங்கு முழுமையாக நிரம்பியதன் மகிழ்ச்சிக் குறியீடுகளை நாட்டுப்புற நடனங்களில் காணலாம்.

கேரளத்தின் கிராமீய கலைகள் கேரளாவின் சமூகப் பண்பாட்டுப் பாரம்பரியத்தை விளக்குவதாக அமைந்துள்ளன. கிராமீயக் கலைகளை களி, துள்ளல், ஆட்டம், கூத்து, பாட்டு என வகைப்படுத்தலாம். திறயாட்டம், முடியாட்டம், தெய்யாட்டம், பூரம்களி, திருவாதிரைக்களி, கும்மாட்டிக்களி, கை கொட்டிக்களி, சர்ப்பம் துள்ளல், அய்யப்பன் பாட்டு, களம்பாட்டு, புள்ளுவன்பாட்டு, கூத்து, நிழல் கூத்து, பாவைக்கூத்து போன்ற பல்வேறு நாட்டுப்புறக் கலைகள் நடைமுறையில் உள்ளன.

நாட்டுப்புறக் கலைகளில் உட்படுத்த இயல்கின்ற ஏராளமான கலை வடிவங்கள் நம் சுற்று வட்டாரத்தில் உள்ளன. அவற்றுள் எவைகளைப் பற்றி உங்களால் கூற இயலும்?

**சடங்கு சார்ந்த கலைகள்:** பிற கருத்துக்களோடு தொடர்புப்படுத்தி நடத்தப்படுபவைகளே சடங்கு சார் கலைகள். பிறப்பு, திருமணம், போர், இறப்பு என மனித வாழ்க்கையோடு தொடர்புடைய நிகழ்வுகளுக்குப் பல்வேறு விதமான சடங்குகள் பின்பற்றப்பட்டிருந்தன. காவடியாட்டம், கரகாட்டம், நெருப்பு நடனம், சுவர் ஓவியம் வரைதல், கோலமிடுதல், களமெழுத்து என்பன முக்கியமானவைகள் ஆகும். கேரளாவில் தெய்யம், திறை, படயணி, முடியேற்று போன்ற சடங்குசார் கலைகள் ஏராளமாக காணப்படுகின்றன.

**செவ்வியல் கலைகள்:** நாட்டிய சாத்திரத்தின் படி ஒழுங்குபடுத்தப்பட்ட கலைகள் செவ்வியல் கலைகள் என்ற பிரிவில் உட்படுத்தப்பட்டுள்ளன. நெறிமுறைகளையும் சட்டங்களையும் பின்பற்றி முறையாகப் பயிற்சி பெற்று வெளிப்படுத்துகின்ற கலைகள் செவ்வியல் கலைகள் என அழைக்கப்படுகின்றன. கதகளி, மோகினியாட்டம், கூடியாட்டம், கர்நாடக இசை என்பன இப்பிரிவில் உட்படுகின்றன.

**மழலையர் கலைகள்:** குழந்தைகளுக்காக வடிவமைத்த கலைவடிவங்களே மழலையர் கலைகள் (Child Art) என அறியப்பட்டன. குழந்தைகளின் உடல், அறிவு, உள்ளம், உணர்வு சார் வளர்ச்சிக்கு உதவும் கலைவடிவமே மழலையர்கலை. ஒரு படம் வரையும் போதோ, கால் பதிக்கும் போதோ, பாட்டு பாடும் போதோ மழலையர் பள்ளிப் பாடல்கள் பாடும்போதோ கிடைக்கின்ற மகிழ்ச்சி அவர்களின் மொத்தமான வளர்ச்சியை விரைவுப்படுத்துகிறது. ஓவியக்கலை, சிற்பக்கலை, இசை, நாடகம், நடனம் என்பன மழலையர் கலைகளில் உட்படுகின்றன.

மழலையருக்கும் மாணவர்களுக்கும் கலைக்கல்வியை அளிக்கும் போது அவர்களின் நாட்டத்தையும் ஆர்வத்தையும் அறிந்திருக்க வேண்டும். எதில் நாட்டம் காண்பிக்கின்றனர் என்று அவர்கள் அறியாமலே புரிந்து கொண்டு அந்தத் துறையில் திறன்மிக்கவர்களாக உருவாக்குவதற்குப் பெற்றோரைப் போன்றே ஆசிரியர்களாலும் இயலும்.

ஒவ்வொரு பருவத்திலும் குழந்தைகள் வேறுபட்ட ஆர்வங்களையே வெளிப்படுத்துகின்றனர். அவர்கள் அறியாது அவர்களை நாம் உற்றுநோக்கினால் குழந்தைகளின் நாட்டமும் ஆர்வமும் எத்துறையில் எனப் புரிந்து கொள்ள இயலும். எந்த அறிவுத்துறையாயினும், கலை வடிவமாயினும் அதில் கட்டாயப்படுத்தி ஈடுபடுத்தக் கூடாது. அவர்கள் இரசிக்கும் அனுபவமாக, மகிழ்ச்சி அளிக்கும் முறையில் கற்க வைக்க வேண்டும் குழந்தைகளுக்காக வடிவமைத்துள்ள மழலையர் கலைகள் எந்த வடிவிலும் எந்த பாவனையில் இருந்தாலும் சரி அதனை முதலில் விரும்புகின்றவர்கள் குழந்தைகளாகத்தான் இருக்க வேண்டும். நடைமுறை அனுபவம் வாயிலாகவே கலைக்கல்வி நடைபெறவேண்டும். இதைப் போன்றே மழலையர் கலை வடிவங்கள் கற்பிப்பதையும் செயல்படுத்த வேண்டும். குழந்தைகளைச் சுயமாகச் செய்விப்பதன் வாயிலாக உடல்– உள்ளம் சார்ந்த வளர்ச்சியையே நோக்கமாகக் கொண்டுள்ளது. மழலையரின் கற்பனைகளுக்கு ஏற்ப நவீனக் கூறுகளையும் உட்படுத்த வாய்ப்பு அளிக்க வேண்டும்.

- ■ கலையின் சிறு வரலாறும் பண்பாடும் என்ற கற்றல் அடைவின் உள்ளடக்கக்கருத்தை நீங்கள் எவ்வாறு வகுப்பில் அறிந்து கொண்டீர்கள்? கருத்தரங்கச் செயல் வாயிலாக வெளியிடும் போதெனில் கட்டுரை தயாராக்குவதற்குக் கவனிக்க வேண்டியவை எவை? மேலும் குறிப்பெடுக்க பார்வை நூல்களைக் வாசிக்க வேண்டிய புத்தகம் **பாலகைரளி விஞ்ஞான கோசம்** - கலையும் பண்பாடும்

## கற்றல் அடைவு: 3

தேசிய பாட ஏற்பாடு சட்டகம் என்.சி.எப்., கேரளப் பாட ஏற்பாடு சட்டகம் கெ.சி.எப். என்பன பரிந்துரை செய்கின்ற கருத்துக்களை உட்கொள்வதுடன் சுய நிலைப்பாட்டைத் தீர்மானித்தல்.

பள்ளிக்கூடக் கலைவிழாக்களில் பங்குபெற வாய்ப்பு கிடைத்துள்ளது அல்லவா? எத்தகைய திறன்களை வெளியிட வாய்ப்புகள் கிடைத்தன? வகுப்பறைச் செயல்பாடுகள் வாயிலாக இத்திறன்களை மேம்படுத்த இயன்றதா- பள்ளிக்கூடக் காலகட்டத்தில் கலையார்வம் வளர்வதற்கு உரிய வலுவான அனுபவங்கள் கிடைக்கவேண்டும். தேசிய பாட ஏற்பாடு சட்டகத்திலும் கேரளப் பாட ஏற்பாடு சட்டகத்திலும் இதன் முக்கியத்துவமும் சிறப்புத்தன்மையும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. தொடக்கப்பள்ளி ஆசிரியை என்ற நிலையில் எவற்றையெல்லாம் உங்களால் உற்றுப்பார்க்க இயலும்?

- கல்வி முறையில் கலைக்கல்விக்குச் சிறப்பிடம் அளிக்க வேண்டும் எனப் பரிந்துரை செய்யப்படுகிறது எனினும் இதற்கு உரிய வளர்ச்சி ஏற்படவில்லை.
- கலைக் கல்வியைக் குழந்தைகளின் முறைசார் கல்வியில் உள்ளடக்குவதற்கு மிக கவனம் செலுத்த வேண்டும். அப்படியானால் மட்டுமே நம் அடிப்படைப் பண்பாட்டுத் தளத்தை அதன் பல்வகைமை வளத்துடன் நிலைநிறுத்த முடியும்.
- நம் கல்வி முறை கலைகள் கற்க ஊக்குவிப்பதற்குப் பதிலாகக் குழந்தைகளையும், கலைநாட்டம் உள்ள பிறரையும் கலைகளை கற்பதிலிருந்து பின்வாங்கவும் செய்கிறது.
- பள்ளிக் கூடத் தரத்தை உயர்த்தும் கருவியாகக் கலை கல்வியைச் சுருக்கிவிட்டனர். தின விழாக்கள், கலைவிழா, ஆண்டுவிழா எனும் வேளைகளின் வெளிப்பாடாக மாறிவிட்டது. குழந்தைகளின் பள்ளிக்கூட வாழ்க்கையின் பகுதியாக கலைக்கல்வி மாறவில்லை.
- அதனால் குழந்தைகளின் இடையில் மட்டுமல்ல பெற்றோர், ஆசிரியர், கல்வி வடிவமைப்பாளர், கல்விக் கண்ணோட்ட அறிஞர்கள் என்போரின் இடையில் கூட கலைகள் குறித்துள்ள பொதுப்பார்வை குறைந்து வருகிறது.
- பள்ளிக்கூட மேலாளர்களும் மேல்தட்டு கலைகளையே ஊக்குவிக்கின்றனர். கலையின் அழகை உட்கொண்டு கலைத்திறனை ஊக்குவிப்பதற்குரிய ஊட்டம் அளிக்க வேண்டியுள்ளது.
- இந்தியக் கலைகள் இத்தேசத்தின் மதசார்பின்மை பல வகைமையான பண்பாட்டுக்கும் உரிய உயிரோட்டம் மிக்கச் சான்றுகள் ஆகும். எல்லா இடங்களினுடையவும் இசை, நடனம், நாடகம், பொம்மலாட்டம், கண்நுகர் கலைகள், கைவினைக்கலைகள் எனும் நாட்டுப்புற, செவ்வியல் வடிவங்களின் மிகப்பெரிய ஒரு தொகுப்பும் ஆகும். இக்கலைகளில் எதைப்படித்தாலும் நம் குடிமக்களின் வாழ்க்கையை அவர்களின் பள்ளிக்கூடக் காலத்தில் மட்டுமல்ல ஆயுட்காலம் முழுவதும் வளப்படுத்த இயலும்.
- காட்சி சார்ந்ததும் செயல் சார்ந்ததும் ஆன கலைகள் பாட ஏற்பாட்டில் கற்றலின் முக்கியக் காரணிகளாக அமைய வேண்டும். இத்துறையில் வெறும் பொழுதுபோக்கிற்காக மட்டுமல்லாமல் திறன்களையும் வளரச் செய்யவேண்டியுள்ளது.

- கலைசார் பாட ஏற்பாடு வாயிலாகக் குழந்தைகளை நாட்டின் வளமான பல்வகைமை சார்ந்த மரபை நோக்கியும் அழைத்துச் செல்ல வேண்டும்.
- கலைக்கல்வியைப் பத்தாம் வகுப்பு வரை கட்டாயப் பாடமாக கற்பிக்க வேண்டும். ஒரு கருவியாகவும் பயன்படுத்தவேண்டும்.
- இசை, நடனம், கண்நுகர் கலை, நடிப்பு, அரங்கக் கலை எனக் கலைகள் என்ற சொல்லால் விளக்கப்படுகின்ற நான்கு முக்கிய பிரிவுகளையும் உட்படுத்த வேண்டும்.
- அணுகுமுறை கற்பித்தல் என்பதற்கு அப்பால் மிகப் பங்களிப்பு சார்ந்தும் ஒருவரோடொருவருக்கு அளிக்கும் பரிமாற்றத்தை மையப்படுத்தியும் அனுபவம் சார்ந்தும் அமைய வேண்டும். பள்ளிக்கூடக் கல்வியின் அனைத்துக் கட்டங்களிலும் கலையின் ஊடகங்களும் வடிவங்களும் விளையாட்டு வடிவத்திலும், விதிமுறை சார்ந்த வடிவங்களை வடிவமைப்பதை ஆராயவும் குழந்தைகளுக்கு வாய்ப்பு கிடைக்க வேண்டும்.
- இசை, நடனம், நாடகம், ஓவியம் என்பன அறிவார்ந்தவையும் சமூகம் சார்ந்தனவும் ஆன ஆளுமை வளர்ச்சிக்கு உதவுகின்றன. மழலையர் பள்ளி, தொடக்கப்பள்ளித் தலங்களில் அத்தகைய அனுபவங்களுக்கு உள்ள முக்கியத்துவம் மிகப் பெரிது.
- திறன்களில் ஏற்றக்குறைவு உள்ள மாணவர்களுக்கு அதை எதிர்கொண்டு ஒன்றாகப் பங்கேற்கும் வாய்ப்பு கிடைக்கிறது என்பது கலை வடிவங்களின் தனித்தன்மையாகும்.
- கலைகள், பரம்பரை சார் கைவினைகள் என்பன ஒருங்கிணைப்பதற்கு உரிய வளங்கள் ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் இருக்க வேண்டும். இவ்வாறு பல்வேறு கலைகள் செயல்பாடுகளுக்கு நேரம் ஒதுக்கும் முறையில் பாட ஏற்பாடு அமைதல் மிக அவசியம். பல பாடப் பொருளுக்கும் குறிப்பாக நடனம், நாடகம், களிமண் கைவினை என்பனவற்றுக்கு ஒன்றரை மணி நேரம் உள்ள தொடர்பிரிவேளைகள் அவசியமாகும்.

## கல்வியில் தியேட்டர் வாய்ப்புகள் என்.சி.எப். கண்ணோட்டம்

மிக வலுவானது எனினும் மிகக்குறைவாகவே கல்வியில் பயன்படுகின்ற கலைவடிவமே நாடக அரங்கம் பிறருடன் தொடர்பு கொண்டு சுயசோதனைக்கும் சுயபுரிதலுக்கும் என மனிதர்களோடு மட்டுமன்று இயற்கையுடனும் பௌதீக, சமூக உலகை விமரிசனப் பார்வையுடன் தன் வயப்படுத்திப் பார்ப்பதற்கும் நாடகம் போன்று வலுவான மற்றொரு ஊடகம் இல்லை. பாடங்கள் நாடக மயமாதல் என்பது நாடகத்தின் சிறு ஒரு பங்கே ஆகும். பாத்திர நாடகப் பயிற்சி, உடல் ஒலி கட்டுப்பாடுகளும் அசைவுகளும் சேர்ந்ததும் தனியான நடிப்பு என்பன மிகப் பொருளார்ந்த அனுபவங்கள் தருகின்றன. அத்தகைய அனுபவங்கள் சுய வளர்ச்சிக்கு ஆசிரியருக்கும் அவசியமாகும். குழந்தைகளுக்கு அளிக்கவும் அவசியமாகும் கேரளப் பாட ஏற்பாடு சட்டகம் – 2007 வடிவமைத்தமை தேசிய பாட ஏற்பாடு சட்டகத்தின் 2005 இன் கண்ணோட்டத்தில் ஆகும். எத்தகைய அறிவுரைகளைக் கலைக் கல்வியின் பிரிவாக கெ.ஸி.எப். முன் வைக்கிறது. ஏற்புள்ள கருத்துக்களும் வேறுபட்ட கருத்துக்களும் நம் சுய நிலைப்பாடுகளைத் தெளிவுறுத்த உதவிபுரியும் அல்லவா?

## கேரளப்பாட ஏற்பாடு சட்டகம் அறிவுறுத்தும் கருத்துக்கள்

- பன்முகப், பல்வகைப் பண்பாட்டுப் பின்னணிகளில் உள்ள குழந்தைகளிடம் பண்பாட்டு விழிப்புணர்வு தோற்றுவிக்க கலைக்கல்வி வழிகாட்டுகிறது. குழந்தையின் கற்பனை படைப்பாற்றலில் திறன்களில் தாக்கம் செலுத்துகின்ற காரணிகள் உட்சேர்வதால்

கலைக்கவில்வியின் பல்வேறு கூறுகளைப் பாட ஏற்பாடில் உட்படுத்த வேண்டும்.

- தன் சுற்றுப்புறத்துடன் ஆக்கத்திறனுடன் தொடர்பு கொள்ள வாய்ப்பு அளிக்கும் காட்சி சார்ந்ததும் நிகழ்த்துதல் ஆன கலைகளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். நடிப்பு நடனம், இசை, கண்நுகர்கலை என்பனவற்றைக் கட்டாயமாக உட்படுத்த வேண்டும். பல்வேறு அறிவு மண்டலங்களுடன் இணைந்தே இதை நடைமுறைப்படுத்த வேண்டும். மொழி, சுற்றுச்சூழல் கல்வியில் இதன் இயன்ற அளவிலான வாய்ப்புகளை எல்லா நிலைகளிலும் பயன்படுத்த வேண்டியுள்ளது.
- மதிப்புணர்வு, சமூகக் கண்ணோட்டம் என்பன தோற்றுவிக்கவும் வாழ்க்கையில் பயன்படுத்தவும் இயலும் முறையில் கற்றல் அனுபவங்கள் வேண்டும்.
- ஓவியம், சிற்பம், இசை, கண்நுகர் கலைகள், அரங்கக் கலைகள், ஆசாரம் சார் கலைகள் என்பனவற்றின் தொடர் கற்றலுக்குத் தயாராகின்ற கற்றல் அனுபவங்களையே அளிக்க வேண்டும். குழந்தைகளைப் போலச் செய்வதற்கும் பாவனையை வெளிப்படுத்தும் திறனை வளர்த்துவதற்கும் உதவுகின்ற நாடகக்கல்வியையும் அடிப்படைப் பண்பாட்டுத் தன்மையைப் பகுத்தறிய உதவுகின்ற நாட்டுப்புறக் கலைகள், பாடல்கள் எனபனவற்றையும் அறிமுகப்படுத்த வேண்டும். பல்வகைமை சார்ந்த இசைக் கருவிகள் அறிமுகமாவதுடன் இசை ஊற்றினை அனுபவிக்கவும் வாய்ப்புகள் அளிக்க வேண்டும். இயற்கை நிறங்கள் பயன்படுத்தியுள்ள ஓவியக்கலையும் நிறங்களின் பயன்பாட்டையும் அறிமுகப்படுத்த வேண்டும்.
- பல்லூடகம் பயன்படுத்தி கணினி அசைவூட்டம் கற்பதற்கான வாய்ப்பை உருவாக்க வேண்டும்.
- நவீன காட்சி ஊடகங்கள், நாட்டுப்புற நடனங்கள், பாரம்பரிய நடனங்கள், திரைப்பட செவ்வியல் நடனங்கள், ஆகியவை அறிமுகமாகவும் வாய்ப்பை உருவாக்க வேண்டும்.
- முன் தொடக்க நிலை தொடக்க நிலை பள்ளி அளவில் ஒருங்கணைந்த அணுகுமுறையும் உயர்நிலையில் ஒருங்கிணைந்த அணுகுமுறையுடன் சிறப்புப் பாடமாகக் கற்பதற்கான வாய்ப்பையும் உருவாக்க வேண்டும்.

## கற்றல் அடைவு : 4

## தொடக்கப்பள்ளி கலை பாட ஏற்பாடும் கலைக்கல்வி கண்ணோட்டமும்

கலைக்கல்வி பாட ஏற்பாடு உருவாக்கத்திற்குத் தேசீய பாட ஏற்பாடு சட்டகமும் கேரளப்பாட ஏற்பாடு சட்டகமும் முன்வைத்த கருத்துக்களையும் பரிந்துரைகளையும் பகுப்பாய்வு செய்து நீங்கள் முடிவுகளை அடைந்திருப்பீர்கள் அல்லவா.

நடைமுறையிலுள்ள தொடக்க நிலை கலை பாட ஏற்பாடில் என்.சி.எப். னுடையவும் கெ.சி.எப்.பினுடையவும் கருத்துக்களையும் அறிவுரைகளையும் எவ்வளவு உட்படுத்த இயன்றது? உங்கள் அறிவுரைகள் எவை?

### கலைக்கல்வி பாட ஏற்பாடு உள்ளடக்கம்

- கலைக்கல்வி – முக்கியத்துவம் இன்றியமையாமையும்
- கலைக்கல்வி – கற்றல் அணுகுமுறை
- கலைக்கல்வி – மதிப்பீடு
- கலைக்கல்வி – உதவி அமைப்பு

- ஓவியக்கலை
- இசை
- நடனக்கலை
- நாடகம்

ஆகிய பிரிவுகளாகக் கலைக்கல்வி பாட ஏற்பாடின் உள்ளடக்ககம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

## கலைக்கல்வி - முக்கியத்துவமும் இன்றியமையாமையும்

- கலைக்கல்வி தன்னம்பிக்கைக்கு வழி வகுக்கிறது.
- சுயமாகவும் குழுவாகவும் செயல்பாடுகள் வழியாகப் பல்வேறு சமூக வாழ்க்கைத் திறன்களை வளர்த்த கலைக்கல்வி உதவுகிறது.
- பண்பாட்டு உணர்வு, மதிப்புணர்வு, தன்னம்பிக்கை ஆகியவற்றை அளிப்பதற்கும் கலைக்கல்வி பயன்படுகிறது.
- பன்முகச் சிந்தனை கோட்பாட்டின் அறிவின் பல்வேறு தளங்கள் வளர்ச்சியடைவதற்கு மிக உறுதுணையான ஊடகமே கலை. இசை, இயற்கை பின்னணியோடியைந்த காட்சி, உடல், அசைவு சார்ந்த புறவளர்ச்சி, உள்வளர்ச்சி போன்ற சிந்தனைக் கூறுகளின் வளர்ச்சி வாய்ப்பாக கலைக்கல்வி விளங்குகிறது.
- குழந்தைகளைக் கடமையுணர்வு உள்ளவர்களாகவும், மிக ஊக்கம் உடையவர்களாகவும் உருப்பெறச் செய்கின்ற ஆற்றலுணர்வைச் சரியான திசை நோக்கி வழிநடத்தவில்லையெனில் அது அழிவை நோக்கிச் செல்ல வழிவகுக்கும். குழந்தைகளின் இத்தகைய மிகு ஆற்றலுணர்வைக் கலை ரசனை நோக்கியும், கலை வெளியீடுகளை நோக்கியும் செலுத்தினால் அது அவர்களுக்கும் சமூகத்துக்கும் பெரும் மூலதனமாக அமையும்.
- பாரதத்திற்கு மிகப்பரந்த கலைப்பண்பாட்டு பாரம்பரியம் உள்ளது. இசை, நடனம், சிற்பக்கலை, நாடகம் போன்றன பரதரின் வாழ்க்கையுடன் ஒருங்கிணைந்திருந்தன. நாட்டிய சாத்திரம் போன்ற அழியாப்புகழ்பெற்ற நூல்கள் உருவெடுத்ததே கலைஉணர்வு சிந்தனைக்கும் கலைக்கல்விக்கும் இருந்த முக்கியத்துவத்தை குறிக்கின்றது.
- நவீனக்கல்வி இந்தியாவில் நடைமுறைப்படுத்திய போதும் பாட ஏற்பாட்டில் கலைகளுக்கு இடம் கொடுக்கப்பட்டிருந்தது. காந்திஜியின் அடிப்படைக் கல்வியில் கைவினைக்கல்வியுடன் நுண்கலைக்கும் இடமளிக்கப்பட்டிருந்தது. கேரள சமூக வாழ்க்கையில் கலையுடன் உள்ள உயிர்த்தொடர்பைக் காண உதவும். விவசாயமும் மற்ற தொழில் மண்டலங்களும் சடங்காசாரங்களுடனும் தொடர்புடைய கலைகள் குருகுலக் கல்வி மூலம் கலைமுறைகளுக்கு கைமாறப்பட்டன.
- ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுபதின் ஆரம்பகட்டத்தில் வடிவமைத்த பாட ஏற்பாட்டில் ஒன்று முதல் எட்டுவரை வகுப்புகளிலுள்ள மாணவர்களுக்கு வண்ணம் தீட்டுதல், மாதிரிகள் தயாரித்தல் இசை போன்ற மண்டலங்களில் பயிற்சிகள் அளிக்க அறிவுறுத்தப்பட்டிருந்தன.
- தேசீய கல்விக்கொள்கையின் பகுதியாக உருப்பெற்ற பாட ஏற்பாட்டில் பல்வேறு வகுப்புகளுக்கான விளக்கமான பாடத்திட்டம் உட்படுத்தப்பட்டிருந்தது. பின்னர் உருவான பாட ஏற்பாடு சீரமைப்பில் எப்போதும் கலைக்கல்வி ஒரு தேவையான காரணி என்ற நிலையில் இணைக்கப்பட்டுள்ளது.

## கலைக்கல்வி பல்வேறு உற்றுநோக்கல்கள்

- குழந்தைகளிடம் தன்னம்பிக்கை, தன்னுணர்வு, பிறரை அங்கீகரித்தல் ஆகிய குணங்களை வளர்ப்பதில் கலையின் பங்கைப் பற்றி யுனெஸ்கோ எடுத்துக்கூறுகிறது. கலைக்கல்வி மூலமாக குழந்தைகளின் உணர்வு சார்ந்ததும் சமூகம் சார்ந்ததுமான வளர்ச்சிக்கு உதவும் என்று யுனெஸ்கோ எடுத்துரைக்கிறது.
- பாரதத்தில் பல்வேறு கல்விக்குழுக்கன் குழந்தைகளின் பன்முக வளர்ச்சியில் கலைக்கல்விக்கு ஒரு முக்கிய இடம் உண்டு என்று தெளிவுபடுத்தியுள்ளது.

முதலியார் அறிக்கை 1952-64

பள்ளிக்கூட பாட ஏற்பாட்டில் ஓவியம் வரைதல், கைவினைக்கல்வி, இசை, நடனம், நாடகம் போன்றவற்றுக்கு முக்கிய இடம் அளிக்க வேண்டும் என்று கூறுகிறது.

கோத்தாரிஅறிக்கை 1962-64

இசை ஆசிரியர்களுக்கும் காட்சிக்கலை ஆசிரியர்களுக்கும் பயிற்சி அளிப்பதற்கு பொருத்தமான வசதிகளும் வாய்ப்புகளும் நடைமுறையில் இல்லை. கலைக்கல்வியின் புறக்கணிப்பு.

கல்விச் செயல்பாட்டைப் பயனற்றதாக்குவதுடன் கலையார்வத்தையும் மதிப்புகளையும் அழிவை நோக்கி வழிநடத்தும்.

1986-இன் தேசியக் கல்வி கொள்கைக்காக 1992-இல் உருப்பெற்ற செயல்பாட்டுத்திட்டம் கலைக்கல்வியை மையப்படுத்தியுள்ளது.

An illustrated view on the culture perspective inter linking education and culture in order to promote the process of child personality development particularly interms of discovering the interest, potentialities of the child.

2009-இன் கல்வி உரிமைச்சட்டத்தின் விளைவாக முழுமையான வளர்ச்சி என்பது குழந்தையின் அடிப்படை உரிமையாக மாறியது. கலைக்கல்வி உறுதிப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் காலகட்டத்தின் தேவையாகும்.

## கலைக்கல்வி - கற்றல் அணுகுமுறை

- முற்காலங்களில் அறிவியல்சாரா மண்டலம் என்ற நிலையிலேயே கலைக்கல்வியை அணுகினர். தற்கால உளவியல் அறிவு ஒரு நபரின் முழுவளர்ச்சி என்பது அறிவின் வெவ்வேறு தலங்களின் வளர்ச்சியே ஆகும் என்று உணர்த்தியுள்ளது. அறிவியல்சார் வளர்ச்சியின் வேறுபட்ட தலங்களில் ஆழமாகச் செல்வாக்கு செலுத்துவதும் தொன்மைக்காலம் முதலே வேரோடிய கலைகள் தனிநபர் உருவாக்கத்தில் முக்கியப் பங்கு வகிக்கின்றது. முன் தொடக்கநிலைப் பள்ளி முதல் மேனிலைப்பள்ளி வரையிலான பள்ளிக்கூடக் கல்விக் கட்டங்களில் ஒரு முக்கியப் பாடப்பகுதி என்ற நிலையில் கலைக்கல்வியை அணுகவேண்டும்.
- பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்பட்ட அனைத்துக் குழந்தைகளையும் மையப்படுத்தியுள்ள கற்றல் அணுகுமுறையையே நடைமுறைப்படுத்த வேண்டும்.
- மழலையர் கலை என்பது பல சிறப்பியல்புகள் உள்ளடக்கிய ஒன்றாகும். குழந்தையின் கற்பனையில் பொருட்களின் எதார்த்தப் படங்களோ, பாவனைகளோ, உருவங்களோ, ஒலிகளோ அவ்வாறே தோன்ற வேண்டும் என்றில்லை. ஒவ்வொன்றையும் குழந்தையின் மனநிலையில் ஆசிரியை பார்க்க வேண்டும். குழுந்தைகள் கற்பனையைப் புரிந்துகொள்ள வேண்டும்

என்பதே மழலையர் மையக் கலைக் கல்வியின் நோக்கம். குழந்தையின் அனுபவச் சூழலிலிருந்தே கலைக்கல்வியின் ஆரம்பம் அமைதல் வேண்டும். அறிமுகமான நாட்டுப்புறப்பாடல்களோ, திரைப்படப் பாடல்களோ, சடங்குசார் பாடல்களோ மாணவரின் இசை சார் அனுபவச் சூழல் ஆகலாம். இத்தகைய பாடல்களுக்கோ, வாய்மொழி ஓசைகளுக்கோ ஏற்ப வரும் தாள அசைவுகளே குழந்தையின் நடன உணர்வுக்கு அடிப்படை. பிறரின் தூண்டுதல்கள் இல்லாமலே குழந்தை சுயமாக வழங்குகின்ற, காட்சிக்கு முழுமையற்றதும் வடிவமற்றதும் எனப் பெரியவர்களுக்குத் தோன்றுகின்ற படங்களே குழந்தையின் ஓவியக்கலைக்கு அடிப்படை.

- குழந்தையிடம் இயல்பாகத் தோன்றுகின்ற கலைஉணர்வுக்கு ஆசிரியர் தூண்டுதல்கள் அளித்து ஊக்குவித்து மேம்பாட்டை நோக்கிச் வழிநடத்த வேண்டும். அந்தந்த வட்டாரத்தின் பண்பாட்டு மரபு என்ற நிலையில் வளர்ச்சி அடைந்துள்ள இசை, நடனம், நாடகம் எனும் கலைகளும் கலைநயம் உடைய கைவினைகளும் குழந்தையின் அனுபவச் சூழலுடனேயே ஆசிரியர் புரிந்து கொள்ள வேண்டும். ஐம்புலன்கள் வாயிலாகவே குழந்தை உலகை அறிந்து கொள்கிறது. காணுதல், தொடுதல், கேட்டல் என்பன வாயிலாக இயற்கையின் முழுமையைப் புரிந்து கொள்ளும் போதே கலைவெளியீடுகள் மேன்மை பெறுகின்றன. பிற பாடங்களைக் கற்பதிலும் அன்றாட வாழ்க்கையிலும் கலைக்கல்வி வாயிலாகப் பெறுகின்ற உற்றுநோக்கும் திறன் பெரும் பயன்பாடுகளை அளிக்கின்றது.

- அழகியல் கூறுகளைப் பகுத்தறிவதுடன் இரசிக்கவும் செய்தல் என்பதே கலைக்கல்வியில் நடைமுறைப்படுத்தவேண்டிய அணுகுமுறை.

- ஒவ்வொரு நபரும் திறன்களில் வேறுபட்டிருப்பதைப் போன்று இரசனையிலும் வெளியீட்டிலும் வேறுபட்டிருப்பர் என்பது இயல்பே. ஒவ்வொரு குழந்தையும் சுயமாக உயர்வை நோக்கிச் செல்லும் போது வாய்ப்புகள் அளிப்பதில் கவனம் செலுத்த வேண்டும். குழந்தையின் படைப்பாற்றலை இயன்ற அளவில் வளரச் செய்தல் என்பதே கலைக்கல்வியில் கையாளவேண்டிய முறை ஆகும்.

- கற்றல் முறையே தொடக்கக்காலத்தில் பயனுடையது. பிற பாடங்களில் உள்ள ஒருங்கிணைத்தல் வாய்ப்புகளைப் பயன்படுத்துவதுடன் கலையின் வெவ்வேறு கூறுகளின் இடையிலுள்ளவற்றை ஒருங்கிணைத்தலும் இன்றியமையாதது.

- வட்டாரத்திலுள்ள பல்வகைமை வளங்களைக் கண்டுபிடிக்கவும் அதனைப் பயன்படுத்தி கலைக்கல்வியை கூடுதல் மேம்படுத்துவதற்கும் வாய்ப்பு அளிக்க வேண்டும்.

## கலைக்கல்வி - கற்றல் இலக்கு

- மாணவரின் கலையுணர்வு சார் ஆளுமை வளர்ச்சிக்கு அவசியமான ஊக்குவித்தல்களும், செயல்பாடுகளும், வழிக்காட்டுதல்களும், உதவிகளுமே கலைக்கல்வி வகுப்பில் குழந்தைக்குக் கிடைக்க வேண்டும். அதற்காக நிறம், வடிவம், உருவம், அசைவு, தாளம், ஒலி என்பனபற்றிய அழகை அறிவதுடன் அவற்றோடு எதிர்வினையாடுகின்ற இரசனைத்திறனை வளரச் செய்வதற்கு உரிய பல்வகை வாய்ப்புகளை உருவாக்க வேண்டும். இசை, நடனம், ஓவியக் கலை, சிற்பக் கலை, நாடகம், திரைப்படம் போன்ற கலைத்துறைகளைக் கற்றல் அனுபவங்களுக்காக நடைமுறைப் படுத்த வேண்டும்.

- மாணவரின் இயல்பான கலை ரசனைகளைப் பகுத்தறிந்து ஊக்குவிக்க வேண்டும்.

- பல்வேறு கலைகளை இரசிக்கவும் கலைகளின் அழகியலுணர்வை உட்கொள்ளவும்

- கலைரசனையை உட்கொள்ளவும் சமூக வாழ்க்கையில் மனிதம் சார் கண்ணோட்டங்களை உருவாக்குவதற்கும்.
- வேறுபட்ட பண்பாடுகளைப் பகுத்தறியவும் பண்பாட்டு விழிப்புணர்வை வளரச்செய்வதற்கும்.
- கலை ஆற்றலை உட்கொண்டு நவீனச் சிந்தனைகளில் ஈடுபடுபடுவதற்கும் சமச்சீருடன் சமூகச் செயல்பாடுகளில் பங்கு பெறவும்.
- கலை வாயிலாகப் பிற பாடங்களின் கற்றல் ஆக்கப் பூர்வமாக அமைவதற்கு
- பன்முக அறிவு வளர்ச்சியின் வாய்ப்புகளைப் பயன்படுத்துவதற்கு
- வெவ்வேறு தரத்தில் நிற்கின்ற மாணவர்கள் ஒன்றுபோல் கற்றல் செயல்பாடுகளில் ஆர்வம் காட்டுவதற்கு.
- நுண்காட்சி அனுபவங்களைக் காட்சிக்கு உரிய வடிவங்களாக மாற்றுவதன் வாயிலாக மனமகிழ்ச்சியைப் பெறுவதற்கு.
- பல்வேறு கற்றல் செயல்பாடுகளில் போலச் செய்தல் வாய்ப்புகளைக் கண்டுபிடிப்பதற்கும் பயன்படுத்துவதற்கும்
- குழந்தைகளின் இரசனைத்திறன் வளர்வதற்கு
- பல்வேறு கலைகளில் தனியார்வம் மிக்க குழந்தைகளின் படைப்பாற்றல் திறனைப் பெருக்குவதற்கு
- பல்வேறு கலைகளில் ஆர்வம் ஊட்டுவதற்கு
- கலைஞர்களை அறிந்து கொள்ளவும் அவர்களாது நன்கொடைகளை புரிந்துகொண்டு மதிப்பதற்கும்.
- பெற்றுள்ள கலை அறிவினைச் புதியச் சூழல்களில் நடைமுறைப்படுத்துவதற்கு
- பல்வேறு கலைகளைச் சமூக மாற்ற இலக்குடன் பயன்படுத்த இயல்வதற்கு
- பல்வேறு கலைகளின் தொழில்நுட்பக் கூறுகளைப் பகுத்தறியவும் பயன்படுத்துவதற்கும்.

## கலைக்கல்வியின் பல்வேறு மண்டலங்கள்

- ஐம்புலனுணர்வுகளுடன் காணுதல், கேட்டல், அசைதல், பழகுதல் என்பன வாயிலாகவும் ஏற்படுகின்ற மிகு எதிர் வினைகளே முறையே ஓவியக்கலை, இசைக்கலை, நடனக்கலை, நாடகக்கலை என உருப்பெற்றன. அதனாலேயே இக்கலைகளில் ஈடுபடவும், இரசிக்கவும் உள்ள திறன் வளரவேண்டியுள்ளது.

## ஓவியக்கலை

கோடுகளும், சாயங்களும் இணைந்து சேர்தலே ஓவியக்கலையில் உள்ளது.

- இரு பரிமாணப் பரப்பில் ஒளியையும் நிழலையும் உரிய முறையில் செலுத்திப் படைக்கப்படுகின்ற வடிவங்கள் உருவாக்கும் பாவனைத் தளமே இரசனையாளர்களுக்கு இங்கே அளிக்கப்படுகிறது. கோடுகளும், சாயங்களுமே ஓவியரின் கருவிகள். சுற்றிலும் காணப்படுகின்றவற்றை உற்றுப்பார்ப்பதன் வாயிலாக உள்ளத்தில் பதிவாகும் காட்சிகள் ஏற்படுத்துகின்ற எதிர்வினைகள் தனக்கே உரிய கண்ணோட்டத்தில் படைப்பதையே கலைஞர்கள் செய்கின்றனர்.

- ஓவியக்கலையின் வேறுபட்ட தளங்கள் ஒவ்வொன்றாக அறிமுகமாவதுடன் பயிற்சி செய்யவும் வேண்டும் என்பதே ஓவியக்கலைக் கல்வியின் முக்கிய இலக்கு.

## கற்றல் இலக்குகள்

- ஓவியக்கலையின் பல்வேறு கட்டங்களைப் புரிந்து கொள்ளவும் ஓவியக்கலையில் ஈடுபடுவதற்கும்.
- வெவ்வேறு ஓவியக்கலையின் முறைகள் அறிமுகமாவதற்கும் கருத்துகளை அடைவதற்கும்.
- ஓவியக்கலை வாயிலாக அறிவை ஊக்கமூட்டும் சூழல்களாக அமைப்பதற்கும் ஓவியக்கலை வாய்ப்புகளைப் பயன்படுத்தி அறிவுத் தேடல்களை இன்பமூட்டுவனவாக ஆக்குவதற்கும்.
- ஓவியர்களை அறிமுகமாகவும் வரலாற்றுக் கருத்துகளை உருவாக்குவதற்கும்.
- பிற பாடங்கள் கற்பதில் ஓவியக் கலைக்கு உரிய வாய்ப்புகளைப் பயன்படுத்துவதற்கும் கருத்துகள் பெறுவதற்கும்.
- படங்களை உற்றுப்பார்க்கவும் இரசனை உணர்வை வளரச் செய்வதற்கும்.
- பல்வேறு சிற்பங்களை உற்றுநோக்குவதற்கும் உருவாக்கத்தில் ஈடுபடுவதற்கும்.
- சிற்பக்கலைக் கூடங்களைச் பார்வையிடுவதற்கும் அவற்றின் பண்பாட்டு முக்கியத்துவத்தை உட்கொள்வதற்கும்.
- சிற்பக் கலையின் வரலாறு சார்ந்த விவரங்களைத் திரட்டுவதற்கும் புதுத்தேடல்களை நோக்கி வழிநடத்துவதற்கும்.

## பல்வேறு பிரிவுகள்

- பென்சில், ஓவியங்கள், நிறக்கட்டிகள், கேலிச்சித்திரங்கள், வண்ணப்பென்சில்கள், ஸ்கெட்ச் பேனாக்கள், என்பன பயன்படுத்தி வரைகின்ற வண்ணப்படங்கள், நிறத்தண்ணீர், எண்ணெய் வண்ணப்பூச்சு எனும் ஊடகங்கள் வாயிலாக வரைகின்ற ஓவியங்கள் எனப் பல்வகைப் படைப்புகள்.
- கோட்டுப் படங்கள், ஓவியங்கள், கருத்துப்படங்கள், கேலிப்படங்கள், எனப் பல்வகைப்படங்கள்
- பல்வேறு பரப்புகளில் பல்வேறு கருவிகள் உபயோகித்து படங்கள் வரைதல்

## இசை

குழந்தைகளின் உள்ளங்களைப் பண்படுத்தி நற்குணத் தன்மையை உறுதி செய்வதில் இசைக்கு மிகப் பெரிய பங்கு உண்டு. உள்ளத்தைத் தூய்மைப்படுத்துவதுடன் புத்திக் கூர்மையைத் தூண்டுவதற்கும் அதன் வழியே கற்பனை உணர்வை வளர்ப்பதற்கும் படைப்புத்திறனைப் பெறவும் இசைக் கற்றல் வாயிலாக இயலும்.

பல்வேறு கட்டங்கள் வாயிலாகவே ஒரு குழந்தையின் இசைக்கல்வி வளர்ச்சி அடைகிறது . நுட்பமான உற்றுநோக்கல், கருத்துப்பரிமாற்றம், உருவாக்கம், இரசனை, வெளியீடு என்பனவே அவை. தாளஉணர்வும், ஒலித்தாக்கமும், ஒழுங்கமைப்பும், இசைக்கல்விக்கு அவசியமாகும்.

- பிறபாடக் கற்றல் கல்விச் செயல்பாடுகளுடன் தொடர்புப்படுத்தி இசைக்கல்வி வாய்ப்புகளைப் பயன்படுத்தவும் கவனம் செலுத்த வேண்டும்.

## கற்றல் இலக்குகள்

- பல்வேறு இசை வடிவங்களை அறிமுகப்படுத்த
- குழந்தைகளுக்கு இசைப்பற்று வளர்க்க
- இசை வடிவங்கள் அறிமுகப்படுத்துவது மூலம் பண்பாட்டின் சிறப்பை பிரித்தறியவும் பண்பாட்டு உணர்வு வளர்க்கவும்.
- தேசபக்தி பாடல்கள் பாடுவதற்கும் தேசீய கண்ணோட்டம் உருவாக்குவதற்கும்.
- இசையமைப்பாளர்களை தெரிந்து கொள்ளவும் அவர்களின் அன்பளிப்புகளை அறிந்துகொள்ளவும்.
- இசை வரலாற்றை தெரிந்து கொள்ள
- இசைக்ககருவிகளை தெரிந்து கொள்வதும் அவற்றை பயன்படுத்துவதற்கான திறனை வளர்ப்பதற்கும்.
- தனியாகவோ குழுவாகவோ பல்வேறு இசைநிகழ்ச்சிகளில் பங்கெடுத்தல்.
- இசை துறைகளில் ராகங்களும் தாளங்களும் அறிமுகப்படுத்துவதற்கு.
- இசையின் வாய்ப்புகளை பயன்படுத்தி பிறப்பாடங்கள் கற்றலை கவர்ச்சிகரமாக்குதல்.

## பல்வேறு பிரிவுகள்

- வாய்த்தாரைகள்
- குழந்தைப்பாடல்கள், விடுகதைப்பாடல்கள், பழமொழிப்பாடல்கள்
- கதைப் பாடல்கள்
- நாட்டுப்புறப் பாடல்கள்
- மெல்லிசைகள்
- பல்வேறு கலை வடிவங்களுடன் தொடர்புடைய பாடல்கள்
- தேசீய கீதம், தேச பக்திபாடல்கள்
- வாத்திய இசை

## நடனக்கலை

உடலே நடனத்தின் ஊடகம். இது முகம், பிரதிமுகம், கருப்பம் முதலிய உறுப்புகளால் ஆன அழகியல் உணர்வு சார்ந்த உடல் அசைவுகளின் செயல்பாடுகளே ஆகும். அழகுணர்ச்சியை வளர்ப்பதற்கும் தனிநபர் மற்றும் பொதுவாழ்க்கையில் ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பதற்கும் அறிவியல் முறையிலான தாள உணர்வு ஏற்படுவதற்கும் இந்த நடனக் கல்வி உறுதுணைப் புரிகிறது. பல்வேறு வகையான நடன பாணிகளையும் நுட்பங்களையும் அறிந்து கொள்வதற்கும் பாரதீய மற்றும் கேரள நடன வடிவங்களை புரிந்துகொள்வதற்கும் இது உதவுகிறது.

## கற்றல் இலக்குகள்

- நால்வகை நடிப்புகள் பற்றிய அறிவு பெறுதல்
- பல்வேறு நடன வடிவங்களை அறிமுகப்படுதல்.

- நடனத்தை இரசிப்பதற்கும் நடனநிகழ்ச்சிகளில் பங்கேற்கவும்.
- பல்வேறு நடனவடிவங்களின் பண்பாட்டு முக்கியத்துவம் பிரித்தறிய
- நடனத்தின் வரலாறு சார்ந்த அறிவுகள் உருவாக்கவும் கலையுடன் தொடர்புடைய அதிக தேடல்களுக்கு வழிநடத்தவும்.
- காட்சிப்படுத்துதலில் ஈடுபடுவதன் வாயிலாக கற்றல் இரசனையுள்ளதாக்குதல்.

### பல்வேறு பிரிவுகள்

- நாட்டுப்புற நடனங்கள்
- செவ்வியல் நடனங்கள்

### நாடகம்

சைகைகளை மையப்படுத்திய கலையே நாடகம். காட்சிக்கு உரிய சைகைகளுடன் சில சிறப்பான அரங்க இயங்குதல்களையும் அசைவுகளையும் இன்றியமையாதனவாகக் கொண்டுள்ளன. கதைநோக்கம், கதாபாத்திரம், நாடகஅமைப்பு, வசனம் ஆகிய நான்கு அடிப்படைக் கூறுகளின் தொடர்பில் இருந்து நாடகம் உருவாகின்றது. ஓவிய- சிற்பக் கலைகள், இசை, நடிப்பு, நடனம் ஆகிய எல்லாக்கலைகளும் நாடகத்தில் உட்படுத்தப்பட்டுள்ளன.

### கற்றல் இலக்குகள்

- பல்வேறு நாடகங்கள் காண்பதற்கும் சமூக முக்கியத்துவம் உணர்ந்து கொள்வதற்கும்.
- குறுநடகங்களில் ஈடுபட்டு நடிப்புச் சார்ந்த அறிவை வளர்ப்பதற்கு.
- நாடகங்களை இரசிப்பதற்கும் நடிப்பில் ஈடுபடுவதற்குமான ஆவலை வளர்த்துதல்.
- நாடகத்தின் நுணுக்கங்களை பிரித்தறிவதுடன் நாடக நிகழ்ச்சிகள் நிகழ்த்துவதற்கும்.
- நாடகத்துடன் தொடர்புடைய கூறுகளான (திரை அமைப்பு, வசனம், நடிப்பு., இசை) பிரித்தறிவதற்கும் நாடக நடிப்பு மூலம் இரசனை உணர்வை உட்கொள்வதற்கும் கலை சார்ந்த அதிக தேடல்களுக்கும் கொண்டு செல்வதற்கு.
- பல்வேறு நாடக வடிவங்களை புரிந்து கொள்வதற்கும் அவற்றில் ஈடுபடுவதற்கும் நாடகத்தின் பண்பாட்டுத் தளத்தை புரிந்து கொள்ளவும்.
- பல்வேறு பாடக்கற்றலுக்கு நாடகத்தின் வாய்ப்புகளைப் பிரித்தறிந்து பயன்படுத்துவதற்கும் கற்றலை இரசனை உள்ளதாக மாற்றுவதற்கும்.

## பல்வேறு பிரிவுகள்

- ஓரங்க நாடகம்
- தனிநபர் நடிப்பு
- தெரு நாடகம்
- மைடை நாடகங்கள்

### கலைக்கல்வியின் மதிப்பிடல்

கற்றல் கற்பித்தல் செயலின் தவிர்க்க முடியாத கூறே மதிப்பீடு. கலையுடன் தொடர்புபடுத்தப் பட்டுள்ள கற்றல் அடைவுகளை திருப்திகரமாக நடத்த இயன்றுள்ளதா, கற்பவரின் விருப்பங்களைக்

கண்டறியவும். கற்றலை மகிழ்ச்சிகரமாக்கவும் இயன்றுள்ளதா போன்ற மதிப்பீடுகள் வழியாகக் கலைக்கல்வியின் மதிப்பீடு நடைபெறவேண்டும்.

### மதிப்பீடு என்ன?

கலையுடன் தொடர்புடைய கற்றல் அடைவை மாணவன் எந்த அளவு அடைந்திருக்கிறான்? பல்வேறு திறமைகளும் திறன்களும் எவ்வளவு நிறைவுடன் பெற முடிந்தது என்ற தேடலே மதிப்பீட்டு. கற்றல் அடைவுகளுக்கு முதலிடம் அளிக்கும் வகையில் உள்ள மதிப்பீடே தேவை. மதிப்பீட்டு கலைக்கல்வியின் முன்னேற்றத்தின் மதிப்பிடாக வேண்டும். சுயமான திருத்தங்கள் செய்து மாணவனுக்கு எவ்வாறு முன்னேற இயலும் என்று மதிப்பிட வேண்டும்.

### மதிப்பீடு எவ்வாறு?

தொடர்ச்சியர்னதும் முழுமையானதுமான மதிப்பீடு முறையை நடைமுறைப்படுத்த வேண்டும். இத்தகைய ஒரு மதிப்பீடு முறையை நடைமுறைப்படுத்தும் போது கலைக்கல்வியின் ஒவ்வொரு மண்டலத்துடனும் தொடர்புபடுத்தி இரண்டு முறைகளில் உள்ள மதிப்பீட்டுக்கு வாய்ப்பளிக்க வேண்டும்.

- வகுப்பறைகள் செயல்முறைகறுடன் இணைந்த மதிப்பீடு.
- நிகழ்த்துதல் மதிப்பீடும் (proformance) அறிவினை மதிப்பிடுதலும்.
- வகுப்பறையில் கற்றல் செயல் முறையுடன் மதிப் இணைந்த தொடர் மதிப்பீடு (CE)

### செயல்முறை மதிப்பீடு

கற்றல் செயல்முறை நடத்தும் வேளையில் ஆசிரியரின் உற்றுநோக்கல், வகுப்பறையில் மாணவனின் நிகழ்த்துதல் கலைக்கல்வியுடன் தொடர்புடைய தகவல் சேகரிப்புகள் (படைப்புத் தொகுப்பு) அலகு மதிப்பீடு போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு கற்றல் செயலுடன் இணைந்த மதிப்பீடு நடைபெற வேண்டும்.

### பயன்படுத்த வேண்டிய மதிப்பீட்டுக் குறிப்புகள்

- செயல்பாட்டில் பங்களிப்பு
- கருத்தை பற்றிய அறிவு
- திறன்கள் பெறுதல்
- நிகழ்த்துதல்/நடிப்பு
- பதிவு செய்தல்.

சமூக உணர்வு மண்டலங்களில் உள்ள திறன்களின் மதிப்பீடு செயல்முறை மதிப்பீட்டின் பகுதியாக நடைபெற வேண்டும்.

### மாணவனின் கலைக்கல்வி நாட்குறிப்பு

குறிப்பேடு/நாட்குறிப்பு இவற்றை செயலின் மதிப்பீட்டுச் சான்றாகப் பயன்படுத்தலாம்.

### படைப்புத்தொகுப்பு மதிப்பீடு

கற்றலுடன் தொடர்பு கொண்டு மாணவர்களுக்கும் பெற்றோருக்கும் ஆசிரியருக்கும் பின்னூட்டம் அளிக்கும் கடமையையே படைப்புத் தொகுப்பு செய்கிறது.

### படைப்புத் தொகுப்பின் உள்ளடக்கம்

- கலைக்கல்வி நாட்டுகுறிப்பு / குறிப்பேடு
- பிறப்படைப்புகள்
- ஓவியங்கள், சேகரிப்புகள்
- பயிற்சித்தாள்கள்

### கற்பித்தல் குறிப்பேடு

செயல்முறை மதிப்பீட்டிற்காகக் கற்பித்தல் குறிப்பேட்டையும் பயன்படுத்தலாம்.

### அலகு மதிப்பீடு

அலகுடன் தொடர்புடைய வாய்மொழிமதிப்பீடு நிகழ்த்துதல் மதிப்பீடு அலகின் பொதுக் கருத்துகளை மதிப்பிடும் வினாடிவினாப் போட்டிகள்

### பருவ மதிப்பீடு

நிகழ்த்துதல் மதிப்பீடும் அறிவு மதிப்பீடும்

- கலைக்கல்வியில் நிகழ்த்துதல் மதிப்பீட்டிற்கே முக்கியத்துவம் உள்ளது. ஒவ்வொரு மண்டலத்துடனும் தொடர்புபடுத்தி ஒவ்வொரு வகுப்புகளிலும் நிகழ்த்துதல் வாய்ப்புகளை, கற்றல் அடைவுக்கு முக்கியத்துவம் அளித்துக் கண்டுபிடிக்கவும். பாடத்துடன் தொடர்புபடுத்தித் தெரிந்து கொள்ள வேண்டிய அடிப்படை அறிவுகளையும் கருத்துக்களையும் இதனுடன் சேர்த்துச் சோதனை செய்யலாம்.

- மதிப்பீட்டிற்காக படிவம் பயன்படுத்த வேண்டும்.
- தரம் மதிப்பீட்டு முறையைப் பின்பற்ற வேண்டும்.
- மதிப்பீட்டில் வருடாந்திரத் தொகுப்பு நடைபெற வேண்டும்.
- CE TE தரங்களுடன் சமூக உணர்வு மண்டலங்களின் உள்ள சிறந்த பதிவீடுகளையும் வருடாந்தரப் படிவத்தில் உட்படுத்த வேண்டும்.

### கற்றல் அடைவு : 5

### கலைக்கல்வி வழியாக மாணவனின் பன்முக அறிவின் வளர்ச்சியை உறுதி செய்தல்.

மனித அறிவுக்கு பன்முகங்கள் உண்டு என்று ஹவார்டு கார்ட்னர் கூறி இருக்கிறார். இந்த கருத்துக்களை உளவியலுடன் தொடர்புபடுத்தி நீங்கள் புரிந்து கொண்டுள்ளீர்கள்.

நீங்கள் பெற்ற அறிவுகள் என்ன. கலையுடன் சிறப்புத்தொடர்புடைய மண்டலங்களே கலைக்கல்வியின் பாகமாக நாம் பரிசோதிக்கிறோம்.

### காட்சி – இடம் சார் அறிவு

பல்வேறு வடிவங்களை உருவாக்கவும் முப்பரிமாண வடிவங்களையும் உருவங்களையும் புரிந்து கொள்ள இயலுவதும் இந்த அறிவு இருப்பதனாலேயேயாகும். மூளையின் வலது பக்கத்தில் அரை வட்ட வடிவில் காட்சி இடம் சார், அறிவு மண்டலம் அமைந்துள்ளது.

நிலப்படம், சார்ட்டுகள், வரைபடம் (Diagram) ஆகியவற்றை வாசிக்கவும். குறிப்பீடுகள், படங்கள் இவற்றைக் குறித்து சிந்திக்கவும் சித்தரிப்பதற்குமான திறன். காட்சி இடம்சார் அறிவின்

அடிப்படையிலானது. கற்றல் முறையை வடிவமைக்கும் போது காட்சிக்கான குறிப்புகள், படங்கள், சுவரொட்டிகள், டயகிரம், கொளாஷ், வண்ணங்கள் பயன்படுத்திய பொருள்கள், மாதிரிகள் ஆகியவற்றைப் பயன்படுத்துவதற்கும் உருவாக்குவதற்கும் முக்கியத்துவம் அளிக்கவேண்டும்.

### இசை அறிவு

கற்றலில் இசைக்கான வாய்ப்பைப் பயன்படுத்த வேண்டும். இசையைக் கேட்பதற்கும் ரசிப்பதற்கும் ஆர்வமூட்ட வேண்டும். இசை நுணுக்கங்களை கவனிக்கும் வாய்ப்பை உருவாக்க வேண்டும். கவிதைகளின் தாளம் கண்டுபிடித்தல் இசையும் தாளமும் அமைத்தல், ஒரே ஓசையுடைய கவிதைகளைக் கண்டுபிடித்தல், தாள வேறுபாட்டை ஒப்பிடுதல், இசைக்கருவிகளின் பயன்பாடு, கேட்டலுக்கான வாய்ப்புகளைப் பயன்படுத்துதல், கலையை ரசிக்கும் செயல்பாடுகள் போன்றவற்றை உட்படுத்தி இசை அறிவினை மேம்படுத்த வேண்டும்.

### உடல் - இயக்கம் சார்ந்த அறிவு

இயல்பான அறிவின் அடிப்படையிலும் புதிய பௌதிகச் சூழலுக்குப் பொருந்தும் வகையிலும் உடல் இயக்கத்துடன் ஒவ்வொருவரும் எதிர் வினையாற்றுகிறார்கள். மூளையின் இடது வலது அரைவட்டங்கள் எதிர்ப்பகுதியிலுள்ள உடல் இயக்கங்களைக் கட்டுப்படுத்துகிறது. உடல் இயக்கங்களைக் கட்டுப்படுத்துவது முற்றிலும் அறிவு பூர்வமான ஒரு திறமையாகும். திறமையானவர்கள் உடல் இயக்கத் திறன்களுக்கு என முறையான பயிற்சி கிடைப்பதற்கு முன்னரே முறையாகச் செயல்படுகிறார்கள். செயல்பாட்டுக் கற்றல், ஆய்வுகள், கைவினை உருவாக்கச் செயல்பாடுகள் மாதிரிகளை உருவாக்குதல், போலச் செய்தல், நாடகமாக்குதல், மைமிங், உடல்மொழியைப் பயன்படுத்துதல், விளையாட்டு, உடல் இயக்க வாய்ப்புடைய செயல்பாடுகள், உடற்பயிற்சிக்கு முக்கியத்துவம் அளிக்கும் செயல்பாடுகள், விளையாட்டுகள் ஆகியவற்றை உடல் - இயக்க அறிவு வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு கல்வி அமைப்பில் உட்படுத்த வேண்டும்.

### கற்றல் செயல்பாட்டு வாய்ப்புகள்

### காட்சி - இடம்சார் அறிவு

- நிலப்படத்தில் பசுமைக்காடுகளின் இடத்தைக் கண்டுபிடித்தல்.
- படவில்லைக் காட்சி, வனப்படங்களின் காட்சி
- ஓவியம் வரைதல் (பசுமைக்காடுகளில் தாவரங்களின் அடுக்குகளை விளக்குவதாக அமைதல் வேண்டும்)
- பசுமைக்காடுகளின் வண்ணங்கள்
- சுவரொட்டி தயாரித்தல் (சுற்றுச்சூழல் பாதுகாப்பு)

### இசைசார்ந்த அறிவு

- அடவி - கவிதைகளை ரசித்தல்
- குழுவாக கவிதைகளை வெளியிடுதல்
- இசை அரங்குகள் தயாரிப்பு

### உடல் இயக்கம் சார்ந்த அறிவு

- கல்விச் சுற்றுலா - இயக்கங்களை போலச் செய்தல்.

- சுற்றுச் சூழல் பாதுகாப்பு - நாடகம் அமைத்தல்.
- இசை அரங்கம்

## கற்றல் அடைவுகள் : 6

### தனிக்கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கு அளிக்க வேண்டிய கலைகற்றல் செயல்பாடுகள்

தனிக்கவனம் தேவைப்படும் குழந்தைகளைக் குறித்து விரிவாகக் கற்கவும் இந்த மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை கலைக்கல்வியின் வழியாக எவ்வாறு தீர்வு செய்யலாம் என்பதைக் கலந்துரையாட வேண்டுமல்லவா? எந்தெந்த கருத்துக்களைக் கலந்துரையாடலுக்கு உட்படுத்த வேண்டும்/

### கற்றல் குறைபாடுடைய குழந்தைகளின் கல்வி சார்ந்த திறன்களிலுள்ள ஒழுங்கீனங்கள்

- **டிஸ்லக்சியா** (வாசித்தலில் ஏற்படும் பிழைகள். வாசிப்பதைப் புரிந்து கொள்வதில் ஏற்படும் சிக்கல்கள்
- **டிஸ்கிராபியா-** எழுதுவதிலுள்ள சிக்கல்களையோ, கையெழுத்தில் ஏற்படும் பிரச்சினைகள், எழுதுபவை பிறருக்கும் சுயமாகவும் புரிந்து கொள்ள இயலாமை, தனது கையெழுத்தையே சுயமாக வாசிக்க இயலாதிருத்தல் போன்றவை.
- **டிஸ்கால்குலியா** (கணிதச் செயல்பாடுகளிலுள்ள பிரச்சினைகள்) கணிதத்தில் கூட்டவும் சாதாரண அறிவை ஏற்படுத்தவும் செய்தல்

### கற்றல் குறைபாடுடைய குழந்தைகளின் பிரச்சினைகளைத் தீர்வு செய்வதற்கு அளிக்க வேண்டிய கலைக்கற்றல் தொடர்பான செயல்பாடுகள்

- குழந்தைகளிடம் படங்களில் வண்ணம் தீட்டச் செய்வதன் வாயிலாக அவர்கள் ஒருமுகத் தன்மையை அதிகரிக்கச் செய்யலாம்.
- வண்ணமிடுதல் - படங்களுக்கு வெளிக்கோடு அமைத்தல்.
- மாதிரிகள் உருவாக்குதல் - களிமண் - மெழுகு ஆகியவற்றைப் பயன்படுத்தி உருவாக்கும் பொருள்கள், சிற்பங்கள், (Block designs) உருவாக்குதல்.
- வண்ணங்களை வரிசைப்படுத்துதல்
- ICT வாய்ப்புகளைப் பயன்படுத்தி அசைவூட்டும் விளையாட்டுகளை அளித்தல்.
- திரை அரங்க விளையாட்டுகள் - உற்றுநோக்கல் கவனம், குழு உணர்வு ஆகியவற்றை வளரச் செய்வதற்கு.
- படவாசிப்பு, படம் வரைதல் - நுட்பத் திறனையும் கவனத்தையும் வளரச் செய்வதற்கு
- குழுவாகப் பாடுதல், வாய்த்தாரைகள்
- இசை அரங்குகள், நடிப்புப் பாடல்கள்
- குழு விளையாட்டுகள்/நடனம்
- தாளம் இடுதல் (சிறு இசைக்கருவிகளைப் பயன்படுத்தி)
- பாடல் கேட்டல்/ரசித்தல்
-

கற்றல் குறைபாடுகளைத் தீர்வு செய்வதற்கு என்னென்ன கலைக் கற்றல் செயல்பாடுகளை அளிக்க இயலும்? குழந்தைகளின் சிக்கல்களைத் தீர்வு செய்வதற்கு இச்செயல்பாடுகள் எந்த அளவு துணை செய்கின்றது என்பதைப் பகுப்பாய்வு செய்ய வேண்டுமல்லவா?

## கேட்டல் குறைபாடுகள் (HI) Hearing Impairment

கேட்டல் குறைபாடுகள் என்பது கேட்பதற்கும் ஒலிகளைப் புரிந்து கொள்வதற்கும் உள்ள திறன் குறைவதாகும். முழுமையாகவோ பகுதியாகவோ ஒலிகளைப் புரிந்து கொள்ள இயலாத நிலையைக் கேட்டல் குறைபாடு என்று கூறலாம். 60 டெசிபல் அல்லது அதற்குக் கூடுதலான கேள்வி சக்தி இல்லாத ஒருவரை கேள்விக் குறைபாடுடையவர் என்று கூறலாம்.

**கேட்டல் குறைபாடுடைய குழந்தைகளுக்கு அளிக்க வேண்டிய கலைக்கற்றல் செயல்பாடுகள்.**

- படம் வரைதல் – வண்ணம் தீட்டுதல் – கருத்துக்களை ஓவியமாக்குதல் – படம் பார்த்தல் – பட அரங்கம்.
- சிற்பங்கள் உருவாக்கம் – களிமண், மெழுகு பயன்படுத்துதல்.
- கொளாஷ் உருவாக்கம், – கருத்துகள் சூழல்கள் இவற்றின் அடிப்படையில்.
- நாடகம் – சூழல்களை நாடகமாக்குதல்.
- மைமிங் – அசையாக் காட்சிகள்
- நடனம் –நடனம் ஆடுதல் – தாளத்திற்கு ஏற்ற ஆட்டம்
- ICT வாய்ப்புகள் – அசைவூட்டும் படங்கள், கணினிப்படங்கள்

கேள்விக் கோளாறுகளை அனுபவிக்கும் குழந்தைகளுக்கு அளிக்க வேண்டிய பிற செயல்பாடுகள் எவை என்பதைக் கண்டுபிடிக்க இயலும். இந்தச் செயல்பாடுகள் எந்த அளவு பலனளிக்கும் என்பதைப் பகுப்பாய்வு செய்யவும்.

### பார்வைக் கோளாறு

- உலக சுகாதார மன்றத்தின் கூற்றுப்படி குருடு என்பது சரியான பார்வையின் 3/60ல் குறைவாக இருத்தல் அல்லது காட்சி நிலை 10 டிகிரியில் குறைவாக இருத்தல்.
- பார்வைக் கோளாறு ஒரு குழந்தையின் வளர்ச்சியை எவ்வாறு பாதிக்கின்றது என்பது பார்வைக் கோளாறின் தீவிரம், குறைபாடு ஏற்பட்ட பருவம், எவ்வித குறைபாடு, எல்லா துறைகளிலுமுள்ள குழந்தையின் செயல்பாடுகள் ஆகியவற்றின் அடிப்படையிலேயே அமைந்திருக்கும்.
- கோர்ட்டிக்கல் பார்வைக் கேளாறு (CVI) என்பது மூளையிலுள்ள பார்வையுடன் தொடர்புடைய பகுதிகளுக்கு ஏற்படும் பிரச்சினைகளால் தற்காலிகமாகவோ, நிலையாகவோ ஏற்படும் பார்வைக் கோளாறு ஆகும்.
- கவனத்தை மையப்படுத்துதல், கருத்துப்பரிமாற்றம், குறிக்கோள், அசைவுத் திறன், அன்றாடச் செயல்பாடுகள் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு பாட ஏற்பாட்டில் சில மாற்றங்களும் சில சிறந்த காட்சிக் கருவிகளையும் உட்படுத்தினால் பார்வைக் கோளாறுடைய குழந்தைகளின் கல்விக்குத் துணைபுரியும்.

இதுபோன்ற குழந்தைகளின் பிரச்சினைகளையும் இயலாமைகளையும் கடந்து செல்வதற்கு கலைக்கல்வியின் பகுதியாக என்னென்ன கற்றல் அனுபவங்களை அளிக்க இயலும்?

இசை தொடர்பான எல்லா செயல்பாடுகளையும் இவர்களுக்கு அளிக்கலாம்.

- நாட்டுப்புறப் பாடல்கள், வாய்த்தாரைகள் குழுப்பாடல்கள்
- திரைப்படப் பாடல்கள், மெல்லிசைப் பாடல்கள், நாடகப்பாடல்.
- கவிதை மொழிதல்
- இசைக்கருவிகளைப் பயன்படுத்தி இசை அமைத்தல்
- கர்நாடக இசை - இசை அரங்கம்
- மிமிக்றி - ஒலிகளைப் போலச் செய்தல்
- கதைப்பிரசங்கம்
- ICT வாய்ப்புகளைப் பயன்படுத்தி இசை அமைப்பு

**நாடகம் உருவாக்குதல்**

மோனோ ஆக்ட், ரோல் பிளே, வானொலி நாடகம், ஸ்கிட், ஆகியவையும் பார்வைக் குறைவுகளை எதிர்கொள்வதற்கான செயல்பாடுகளாகும்.

பார்வைக் கோளாறுடைய குழந்தைகளுக்கு அளிக்க வேண்டிய பிற கலைகற்றல் செயல்பாடுகளை பரிந்துரைக்கலாமல்லவா? இதுபோன்ற செயல்பாடுகளின் நன்மைகளைப் பகுப்பாய்வு செய்க.

## அலகு - 2

# நாடகம் - நடனம்

### முகவுரை

மொழியும் பண்பாடும் வளரச் தொடங்கிய காலகட்டத்திலேயே நாடகமும் தோன்றியது. நாடகம் நடிப்பதற்கே உரியதாகும், நடிப்பும் நாடகமும் பிறபாடக் கற்றலுக்கும் மிகவும் பயன்படுகின்ற ஒரு வழிமுறையாகும். குந்தைகள் நாடக நடிப்பு, வெளியீடு ஆகியவற்றின் அடிப்படை அறிவுகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். சுயமாக நாடகங்களை உருவாக்கி நடிக்க வேண்டும் என்பதே நோக்கமாகும்.

### கற்றல் அடைவு : 1

நாடகம் என்றால் என்னவென்றும் சமூகச் சூழலில் நாடகத்தினுடைய நிலை எதுவெனப் புரிந்துகொள்வதற்கும்.

- நாடகம் என்னும் சொல் நமக்குப் பழக்கமுடைய சொல்லாகும்.
- நாடகத்தோடு தொடர்புடையச் சொற்கள் எவை?

### பட்டியல் இடவும்

1. நடிப்பு
2. உரையாடல்
3. இயக்கம்
4. அரங்கமைப்பு
5. நாடக ரசிகன்/பார்வையாளர்/ நடிகர்.

எழுதப்பட்ட திரைகதையையோ, ரசித்த திரைக்கதையையோ, பள்ளிக்கூடத்தில் நீங்கள் பார்த்த/ நடித்த ஒரு நாடகத்தினையோ நினைவுகூரமுடிகிறதா?

### நாடகத்தின் பங்களிப்பு என்ன? கலந்துரையாடவும்.

நாடகம் என்றால் என்ன?

'நடித்துக்காட்டுவதே நாடகம்'

உரையாடலைவிட நடிப்பிற்கே முக்கியத்துவம் - ஓவியக்கலையை பொதுவாக உருவகம் எனக் கூறுகின்றனர்.

ஏராளமான உருவகங்களில் ஒன்றே நாடகம். ஆங்கில மொழியில் உள்ள 'drama' என்ற சொல்லுக்கு நடித்துக்காட்டுதல் என்பதே பொருள். Do என்ற வினைச் சொல்லிலிருந்து உருவான சொல்லே Drama. கூத்து, கரகாட்டம், கதைகளி என்பவற்றிற்கு நடிப்புக் கலையுமாக நெருங்கியத் தொடர்பு உண்டு.

கலந்துரையாடவும்.

### தொகுத்தல்:

எந்த மொழியாக இருந்தாலும் நாடகத்தினைக் குறிப்பிடும் சொல் எல்லா இடத்திலுமே நடித்துக் காண்பித்தல் என்ற பொருளிலேயே பயன்படுத்தப்படுகின்றது.

நாடகத்தினைக் காட்சிக்கலை எனக் குறிப்பிடுவதாக இருந்தாலும் அது ஒரு கலவைகளுடைய கலை ஆகும். நடிப்பு, நடனம், ஆடை அலங்காரம், சிற்பங்கள், சித்திரங்கள், மேடை, மேடை அலங்காரம் போன்றவையும் காட்சி, உரை, இசை என்றிவ்வாறு பல்வேறு கலைகளின் ஒருங்கிணைப்பினுடையவும் வழியாக நாடகம் உருக்கொள்கிறது.

**நடிப்புக்கலை குறித்த மேற்கத்திய கிழக்கத்தியச் சிந்தனைகள் எவை?**

மிகவும் சிறப்புடையது கலையாகும். நாடகம் எனப் பரதமுனிவர் குறிப்பிடுகின்றார். நடிப்பினுடைய பல்வேறுபட்ட காரணிகளைக் குறித்துப் பரதமுனிவர் நாட்டிய சாஸ்திரத்தில் விளக்கமாகக் கூறியுள்ளார். காரணிகளுடைய மனதிலுள்ள தீய எண்ணங்களிலிருந்து விடுதலை அடையச் செய்து அவர்களை நல்ல எண்ணங்களுக்கு வழிநடத்துவதின் வழி நாடகத்தினுடைய லட்சியம் மகத்துவம் அடைகிறது என அரிஸ்டாட்டில் குறிப்பிடுகின்றார்.

**நாடகத்தின் தோற்றம் :**

நாடகம் என்று தோன்றியது? இதைப் பற்றிச் சரியாகச் சொல்ல உதவுகிற வரலாற்று ஆதாரங்கள் இல்லை எனலாம். பண்டைக் காலங்களில் குகைச் சுவர்களில் வரையப்பட்டிருந்த நடன வடிவங்களே நாடகத்தினுடைய மிகவும் பழைய அடையாளங்களாக எண்ணப்படுகின்றன. நடிப்போடு கூடிய உரையாடல் மனிதனுடைய உடன் பிறந்த குணமாகும். அது உலகளவில் எல்லா இடங்களிலும் ஒன்றுபோலவே உள்ளது. இயற்கையான சூழ்நிலை இல்லாதபோதும் இதுபோன்ற இயற்கையான செயல்களைப் போலச் செய்து இன்னொருவரிடம் காட்டும்போதுதான் அது கலையா கின்றது. அவ்வாறு நாட்டியம், நடிப்பு போன்ற காட்சிகள் மனிதனின் கூடவே உலகெங்கும் தோன்றின.

சமூக வாழ்வும், கொண்டாட்டங்களும் ஆரம்பித்தபோது இதுபோன்ற செயல்கள் மேலும் மேம்பட்ட முறையில் நடைபெற்றிருக்கலாம். உலகெங்கும் விழாக்கள், கொண்டாட்டங்கள், நிகழும் இடங்களில் எல்லாம் நாடகம் நடிக்கப்பட்டிருந்தன. முதல், இரண்டாம் உலகப்போர்கள், தேசியப் போராட்டங்கள் ஆகியவற்றின் விளைவுகளைச் சமூகத்திற்கு எடுத்துக்கூற கலையும் இலக்கியமும் முக்கியப் பங்கு வகிக்கின்றன. நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் பண்பாட்டு முன்னேற்றங்களுக்காக கலகங்களும், போராட்டங்களும் நடத்துவதற்குப் பதிலாக நாடக இயக்கங்கள் உருவாயின.

மறுமலர்ச்சிச் சிந்தனைகள் இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்திற்கு வழிவகுத்தது. சுதந்திரம் சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவை இங்கிலாந்தின் அடிமைத் தனத்திலிருந்து இந்தியாவை மீட்பதற்கு உதவின. சுதந்திரம் என்ற எண்ணத்தை இந்தியா முழுவதும் விளம்பரப்படுத்துவதற்கான முயற்சிகளும் நடைபெற்றன. பல்வேறு போராட்டத் தந்திரங்களாக கலை வடிவங்களையும் பயன்படுத்தினர். அவற்றுள் சிறந்த கருத்துப்பரிமாற்றக் கலைவடிவமே நாடகம். தேசிய அளவிலும் தமிழிலும் நாடக இலக்கியங்களும் இயக்கங்களும் வளரத் தொடங்கின. சமூக, சமுதாய மூட நம்பிக்கைகளுக்கும் சமத்துவம் இன்மைக்கும் எதிரான கலையாக நாடகங்கள் நடிக்கப்பட்டன. வீதி நாடகங்கள், சமூக நாடகங்கள் வட்டாரம் சார்ந்த நாடகங்கள் என்றிவ்வாறு பல்வேறு நாடக வடிவங்கள் நடிக்கப்பட்டன.

**கருத்தரங்கம் :**

இந்தியாவில் சுதந்திரத்திற்கும் கேரளத்தின் மறுமலர்ச்சிக்கும் பின்புலமாக இருந்த சிறந்த கலைவடிவமே நாடகம்.

## பார்வை நூல்

பரிதிமார்கலைஞர், நாடகவியல்

ஏ. என். பெருமாள், தமிழ் நாடகம் ஓர் ஆய்வு

## கற்றல் அடைவு ; 2

நாடகத்தின் கல்வி வாய்ப்புகளைப் புரிந்துகொண்டு குறிப்பு தயாரித்தல், பரிமாற்றத்திற்கான திரைக் கதை தயாரித்தல்.

எதிர்கால ஆசிரியை என்ற நிலையில் நாடகம் என்ற ஊடகத்தின் கல்வி வாய்ப்புகளைக் குறித்து கலந்துரையாடும் வேளையில் என்னென்ன கருத்துகளை வெளியிட இயலும்.

கல்வியில் நாடகமயமாக்குதலின் வாய்ப்புகள், கலந்துரையாடல் – தொகுத்தல்.

ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும், சீனாவிலும் பள்ளிக்கூட வகுப்பறைகளில் படைப்பாற்றல் செயல்பாடுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகின்றன. இது தொடர்பாக இந்தியாவிலும் பல்வேறு ஆய்வுச் செயல்பாடுகள் நடக்கின்றன. கேரளத்தில் முறை சார்ந்த கல்வித் துறையில் நடைமுறைப்படுத்தும் புனரமைப்புச் செயல்பாடுகள், ஆசிரியையான ஏகாதிபதியை வகுப்பறையில் இருந்து ஓரளவு மாற்றி நிறுத்த முடிகிறது.

படைப்பாற்றலுடைய சூழலை அளிப்பதன் வழி வகுப்பறை குழந்தைக்கே உரியது என்பதை உறுதி செய்யமுடியும். இதற்கான சான்றுகளை எடுத்துரைக்க உலகின் பல்வேறு பகுதிகளில் நடைபெற்ற ஆய்வுகளுக்கு முடிந்தது.

கற்பனைக்கு உள்ளான விளக்கமான கருத்துப்பரிமாற்றத்திலிருந்து கருத்துச் செறிவான பரிமாற்றத்திற்கு வகுப்பறை மாறும் போது குழந்தைகளுக்குக் கிடைக்கும் வாய்ப்பு என்பது எல்லையற்ற கற்பனை உலகம் ஆகும். இதுபோன்ற சூழலில் வகுப்பறையில் கருத்துகளுக்குப் பதிலாக, பொருள்களும் செயல்களும் இடம் பெறுகின்றன.

உலகம் எங்கும் மாணவர் மையக் கல்வி என்னும் பாட ஏற்பாட்டிற்கு ஏற்ப வகுப்பறையின் முறைசார்ந்த கல்வியில் இயல்பான மாற்றம் ஏற்பட்ட போது பல்வேறு மேடைக் கலைகளும் பிறகலை வடிவங்களும் கற்றல் செயல்முறையின் பகுதியாக மாறின. நாடகம், தனிநபர் நடிப்பு, பயணம் போன்றவை கற்றல் ஊடகங்களாக மாறின. கற்றல் என்பது படைப்பாற்றல் சார்ந்த ஒரு செயல்பாடாக மாறியது.

இதுபோன்று வகுப்பறையில் மிகுந்த ஈடுபாடுடைய கலைவடிவமே நாடகம். நாடகம் நிகழ்த்துதல் வாயிலாக என்னென்ன கல்வி வாய்ப்புகளைக் கண்டுகொள்ள இயலும்.

- வகுப்பறை நாடக அரங்கு
- குழந்தைகளின் நாடக அரங்கு
- வானொலி மன்றம்
- ..............................................

வகுப்பறை நாடக அரங்கின் பகுதியாகப் பாடப் பகுதிகளை நாடகங்களாக நிகழ்த்தி, பரிமாற்றம் செய்யும்போது அனுபவக் கற்றலை உறுதி செய்யமுடியும். குழந்தை மையக் கல்வி முறையை நடைமுறைப்படுத்துவதற்கான அணுகுமுறையாக நாடகம் நிகழ்த்துதலைப் பின்பற்றலாம்.

குழந்தைகளின் நாடக அரங்கு வாயிலாகப் பன்முக அறிவின் பகுதியான உடல் இயக்கம் சார்ந்த அறிவிற்கு வாய்ப்பளிக்க இயலும். குழந்தைகளுக்கான கலைவாய்ப்புக்களைக் கருத்தில்கொண்டு பாட ஏற்பாட்டினைப் பரிமாற்றம் செய்வதில் நாடக முறையிலான அணுகுமுறை முக்கியத்துவம் அளிக்கிறது.

வானொலி மன்றங்கள் வழியாக மொழிக் கற்றலில் நாடகங்களை நடைமுறைப்படுத்துவதற்கான வாய்ப்புகள் உள்ளன.

### செயல்பாடு

கற்றலில் நாடகம் தொடர்பாக வேறு என்னென்ன செயல்பாடுகளைச் செய்யும் வாய்ப்புகள் உள்ளன. கலநந்துரையாடவும்.

## கற்றல் அடைவு : 3

நாடகம் எழுதுதல், நடிப்பு, இயக்கம், நிகழ்த்துதல் ஆகியவற்றில் அறிவு பெற்ற நாடகத்தின் தொடக்கநிலை, பள்ளிப் பாட ஏற்பாட்டைப் பரிமாற்றம் செய்வதற்கான திறன் பெறுவதற்கு.

### செயல்பாடு

வகுப்பறையில் எந்தெந்த பாடங்களுக்கான கற்றல் செயல்பாடுகளுக்காக இந்த நடிப்பு வாய்ப்புகளைச் செயல்படுத்துவர்?

மாணவர்களின் நாடகம் என்ன? எப்படி? அணுகு முறையைப் புரிந்து கொள்வதற்கு. முதியவர்களுடைய நாடகத்தைப் போன்று மாணவர்களுடைய நாடகத்தையும் நிகழ்த்த வேண்டியது உள்ளதா? மாணவர்களின் நாடகம் என்றக் கருத்து முதியவர்களின் நாடகம் என்றக் கற்பனையிலிருந்து எவ்வாறு மாறுபடுகிறது? மாணவர்களுக்கு நாடக அனுபவத்தை உருவாக்குவது எந்தெந்த கருத்துகளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

- அரங்கம், வசனம், இரசிகர் என்ற மூன்று நிலைகளில் மாணவர்களுடைய நாடகத்தில் இரசிகரே (அடையோர்) மிகவும் குறிப்பிடத்தக்கவர். யார் நாடகத்தை எழுதுகிறார் என்றோ நடிக்கிறார். என்றோ பார்க்கத் தேவையில்லை. மாணவர்களுடைய அரங்கில் புரிந்து கொள்ளக் கூடியதும் விரும்பக் கூடியுதுமான நாடகங்கள் எல்லாம் மாணவர்களின் நாடகங்களே. மாணவர்களின் மனநிலை, தரம், வயது இவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும்.
- மனிதரில் உணர்வுக் காரணிகளில் ஒன்றே நாடக வழிப்புணர்வு. குழந்தைப் பருவம் முதலே மாணவர்கள் பல்வேறுபட்ட நாடக விளையாட்டுகளில் பிறருடைய தூண்டுதல் இன்றியே இவற்றில் ஈடுபடுதல் இதற்கு எடுத்துக்காட்டாகும். பன்முக அறிவின் எல்லா அறிவையும் வளரச் செய்ய நாடகம் உதவும்.

படைப்பாற்றல் நாடகம் என்றால் என்ன? அணுகுமுறை, வெளியீட்டு முறை இவற்றை அறிவதற்கு.

மாணவர்களிடம் நாடக எண்ணங்களை வளர்த்தி எடுக்ககூடியதா? மாணவர்களிடையே படைப்பற்றலை நாடகச் செயல்பாட்டின் வழியாக வளர்ச்சியடையச் செய்வதா சிறந்தது? கலைக் கல்வியின் பகுதியாக படைப்பாற்றல் நாடகத்தின் வாய்ப்புகளை வகுப்பறையில் செய்லபடுத்துவதற்கு செயல்படுத்த வேண்டாமா? அதற்காக உங்களுக்குத் எந்தெந்த கருத்துகள் தேவைப்படுகின்றன?

- படைப்பாற்றல் நாடகம் இன்று பல கல்வி நிலையங்களிலும் பாட ஏற்பாட்டினுடைய பகுதியாகும். சொந்தக் கருத்துகளுக்கு கற்பனை வடிவம் அளிப்பதற்கான திறனே படைப்பாற்றல்

மாணவர்களில் மறைந்து இருக்கும் ஆற்றல்களை உணர்த்துவதே படைப்பாற்றல் நாடகங்களின் நோக்கமாகும்.

சொந்தமாக வெளியிட சுதந்திரம் அளிக்கும் மன தர்ம நிலையில் ஊன்றிய நாடக வெளியீடே படைப்பாற்றல் நாடகம் அதாவது விரைவில் எழுதி உருவாக்கும் நாடக உருவாக்கம் என அழைக்கலாம் ஒரு வழிகாட்டியின் தூண்டுதலில் நேரடியாக வளரும் நாடக உருவாக்கமே இது. மாணவர்களின் இயல்பான விளையாட்டுகளிலிருந்து படைப்பாற்றல் நாடகம் உருவாகிறது.

- முன்னரே தயாராக்கிய ஸ்கிரிப்டோ, தொழில் நுட்பமோ இல்லாமல், உருவாக்கிய அரங்க அமைப்போ, ஒப்பனைகளோ வேடங்களோ இல்லாமலே நாடகத்தின் தனிமை குன்றாமல் வெளியிடும் நாடகங்களே படைப்பாற்றல் நாடகங்களின் தனித்தன்மையாகும்.

படைப்பாக்க நாடகத்தின் அடிப்படைக் காரணிகள்.

- குழந்தைகளின் குழு
- அறிவுரைகள்
- நாடக மேடை

- படைப்பாக்க நாடகத்தின் நோக்கங்களும், மேன்மைகளும்.
- குழந்தைகளின் தன்னம்பிக்கை உறுதி செய்கின்றது.
- கற்பவரின் /நடிப்பவரின் திறன்/திறமை கண்டறிந்து உதவும், ஏற்றுக் கொள்ளும் மனநிலை வளர்கிறது.
- விரும்பத்தகாத போட்டிகளை தவிர்க்கிறது.
- உளப்பாதுகாப்பு/வளர்ச்சி, மேம்பாடு ஆகியவற்றை உருவாக்குகிறது.
- அழகுணர்ச்சி, கலை அழகை ரசிக்கும் திறனை ஊக்குவிக்கிறது.

- செயல்பாட்டு கட்டங்கள்

- முன்னேற்பாட்டிற்கான, தாளத்தோடு அமைந்த நாடகப் பகுதிகள்.
- ஒலி கட்டுப் பாட்டிற்கான ஒலி அமைப்புகள்.
- நாடக நடிப்பிற்கான கருத்துகளின் வெளியீடு
- வாழ்க்கை அனுபவங்களோடு இணைத்து வடிவத்தை வளரச் செய்தல்
- வசனங்கள் உருவாக்குதல்.
- எளிமையானதும், சுற்றுப்புறத்திலிருந்து பெற்றுக் கொள்ளக்கூடியதுமான பொருட்களும் ஒப்பனையும் கண்டுபிடித்தல்.
- ஆயத்தம்
- வெளியீடு
- மதிப்பிடுதலும் மேம்படுத்தலும்.

## செயல்பாடு

- உங்கள் வகுப்பில் படைப்பாற்றல் நாடக பணிமனை நடத்துவதற்கான ஒரு செயல்பாட்டு திட்டத்தை உருவாக்க தேவையான கருத்துக்களும் திறன்களும் வேண்டும்? இக் கருத்துகளின் அடிப்படையில் ஒரு செயல்பாட்டு திட்டத்தை உருவாக்குவீர்களல்லவா?

உங்கள் வகுப்புக் குழந்தைகள் பள்ளிக்கலை விழாவில் ஒரு நாடகம் நிகழ்த்த வேண்டும். என்ற ஆர்வத்தை வெளியிட்டனர். குந்தைகளுக்கு உங்களால் எவ்வாறு உதவ இயலும்? நாடகத்தினை எழுதும் போது கவனிக்க வேண்டியை எவை?

1. **திரையரங்கம்** காட்சிகள், எழுத்து, ரசிகன் ஆகிவற்றின் கூட்டுறவு. என திரையரங்க நாடக ஆசிரியரான Pro. ஜி. சங்கரப் பிள்ளை குறிப்பிட்டுள்ளார். நாடகத்தின் பல்வேறு காரணிகள் சேர்ந்து உருவாவதே திரையரங்கின் முழுமையுமாகும்.

2. **நாடகம் எழுதுதல்** : நாடக அரங்கின் இன்றியமையான கூறுகளில் ஒன்றே நாடகம் எழுதுதல். நாடகம் எழுதுபவரின் சிந்தனை, கற்பனை ஆகியவை சுற்றுப்புறத்திலிருந்து பெற்றுக்கொள்ளும் அனுபவங்கள் இவற்றின் வழியாக உருவாகும் படைப்பே நாடகம். நாடக ஆசிரியர் எழுதுவதற்குப் பயன்படுத்தும் கருக்கள் சமகாலச் சிறப்புகள், தனித்தன்மைகள் ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளிக்கின்றார்.

3. **நடிப்பு,** நாட்டிய சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட நான்கு வகையான நடிப்பில் (அம்கீகம், வாஜீகம், சாதிகம், ஆஹாரியம்) நான்கினுடையவும் மிகவும் இயல்பான ஒருங்கிணைப்புத் தேவைப்படுவதுண்டு. நாடக நடிப்பு இயல்பான நடிப்பு, மிகைப் பாணியிலான நடிப்பு என இருவகைப்படும். உலக தர்மத்தினை உள்வாங்கி நடிக்கும் நடிப்பே (இயல்பான) நடிப்பு. மிகைப்பாணியிலான நடிப்பு மனித இயல்பிற்கு மிகையான கதாபாத்திரங்களைத் தோற்றுவிக்க இவ்வகையிலான நடிப்பு உதவும். கதாபாத்திரத்தினுடைய அங்க அசைவுகள், சரியான உரையாடல், மெய்ப்பாடுகள் வெளியிடும் நடிப்பு, கதாபாத்திரங்களின் பண்பிற்கு ஏற்ற ஆடை அலங்காரம் போன்றவை பயன்படுகின்றன. கதைமாந்தராக நடிப்பதற்கு அவர் உடல் உள அளவில் பல்வேறு பயிற்சிகளில் ஈடுபடுகின்றார்.

4. **நாடக இயக்கம்**, நாடகத்திற்குத் தேவையான அரங்க மொழியை உருவாக்குவதே இயக்கம் எனப்படும். இயக்குநர் நாடகத்தைத் தெளிவாகப் புரிந்துகொண்டு நடிக்கும் இடம், காலம், மேடையின் தனித்தன்மைகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு மட்டுமே அரங்க மொழியினை உருவாக்குவார். எழுத்து வடிவிலுள்ள நாடகத்தை ஒவ்வொரு காட்சியாக மாற்றுதல், கதை மாந்தர்களின் மேடை இயக்கங்களை முறைப்படுத்தல், மேடை அலங்காரங்களைத் தீர்மானித்தல், உரையாடல்களில் உணர்வுகளைத் தீர்மானித்தல் ஆகிய பொறுப்புகளை இவர் நடைமுறைப்படுத்த வேண்டும். ஒவ்வொரு காட்சிக்கும் உரையாடலைத் தயாரிக்கும் போது தேவையான இசைக் கருவிகள், காட்சி அமைப்பு, அரங்க அசைவுகள், கதை மாந்தரின் நான்கு வகையான நடிப்பிற்கு உரிய வாய்ப்புகள் ஆகியவற்றை இயக்குநர் முன்னரே தீர்மானிக்கிறார். தொடர்ந்து நாடகப் பயிற்சி ஆரம்பிக்கிறது.

6. **ஆடல் கலை : (Choreography)** நடிகை, நடிகர், மேடை அலங்காரப் பொருட்கள், ஒளி ஆகியவற்றின் அமைப்பும் மேடை அசைவுகளையும் முறையாக அமைப்பதே கோரியோகிராபி (——). காட்சி, கேள்விக் கலையான நாடகத்தின் காட்சிப்பகுதியை முக்கியமாக கோரியோகிராபரே தீர்மானிக்கின்றார்.

7. **மேடை அரங்கேற்றம்** : ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் நல்ல பயிற்சிக்குப் பின் அனைத்துக் கலைகளின் ஒருங்கிணைப்புடன் நிறைந்த அவையினருக்கு முன் ஆர்வத்துடன் நடிகை நடிகர்கள் நடித்துக்காட்டும் செயல்முறையே மேடை அரங்கேற்றம்.

## செயல்பாடு

- ஒரு நிகழ்வு நாடகமாக மேடையில் அரங்கேற்றப்படுவது எவ்வாறு என்பதைப் பார்த்தீர்கள்

அல்லவா? அப்படியானால் தொடக்க நிலை வகுப்புகளில் கலைக் கல்வியின் ஒரு பகுதியான நாடகக் கலையை வகுப்பறையில் பரிமாற்றம் செய்வதற்கு நீங்கள் என்னென்ன நடவடிக்கைகளைக் கைக்கொள்வீர்கள்? பிற பாடங்களைப் பரிமாற்றம் செய்வதற்குத் தொடக்க நிலை வகுப்புகளில் நாடக முறையில் கலைக் கல்வியின் பகுதியாகக் கற்பிப்பதற்கான வாய்ப்புகள் எவை?

## கற்றல் அடைவு : 4

நாடகக் கலையின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் தேவையான பயிற்சிகளைக்குறித்த அறிவினையும் திறனையும் பெறுவதற்கு.

பள்ளிக்கூடத்தில் ஒரு நாடகக் குழுவினை நடைமுறைப்படுத்துவதன் வாயிலாக பல்வேறு நடிப்புத் திறன்களை வளரச் செய்வதற்கு எவ்வித நடிப்புச் சூழல்களை உருவாக்க வேண்டும்.

**ரோல்பிளே,** மைமிங், தனிநபர் நடிப்பு, ஒலிகளைப் போலச் செய்தல் ஆகியவற்றின் காணொளியாக வெளியிடுதல். குழந்தைகளே அவற்றை வெளியிடுவதற்கு வாய்ப்பளித்தல். கலந்துரையாடல், தொகுத்தல்.

**ரோல்பிளே** : ஒரு கதைமாந்தர் உடல் மொழி வாயிலாக நல்ல கருத்துகளை நடித்துக் காட்டுவது ரோல்பிளே எனப்படும்.

**முக நடிப்பு (மைமிங்)** : பேச்சு, அங்க அசைவுகள் போன்ற நடிப்புக்காரணிகள் இன்றி உடல் அசைவுகளால் அட்டும் வெளியிடும் நாடக வடிவமே முகநடிப்பு (மைமிங்) எனப்படும்.

**தனிநபர் நடிப்பு** : ஒரு நடிகர் பல்வேறு கதாபாத்திரங்களாக ஒரு சூழலையோ நிகழ்வையோ ஒரு நாடகம் முழுமையிலும் நடிப்பது தனிநபர் நடிப்பு எனப்படும். அங்க அசைவுகள், பேச்ச, நற்கருத்துகள் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்து நடிக்கப்படுகிறது.

**ஒலிகளைப் போலச் செய்தல் (மிமிக்கிரி):** பல்வேறு சூழல்களையோ உயிரினங்களையோ ஒலி அல்லது உரையாடல் வாயிலாக போலச் செய்தலே மிமிக்கிரி எனப்படும். ஒலித்தலுக்கே முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

**வானொலி நாடகம் :** காட்சி, கேள்வி கலையான நாடகத்தை உரையாடல் வழியாகக் கேட்பவர் உணரும்படிச் செய்தலே வானொலி நாடகம்.

வகுப்பறையில் எந்தெந்த பாடங்களின் கற்றல் செயல்பாடுகளுக்கு இந்த நடிப்புச் செயல்பாடுகளைப் பயன்படுத்தலாம்?

## கற்றல் அடைவு : 5

- பாடப் பகுதிகளை அடிப்படையாகக் கொண்டு திரைவசனம் தயாரித்து பாவைக்கூத்து வெளியிடுதல்.
- சிறு பருவத்தில் உங்களுக்கு மிகவும் விருப்பமான விளையாட்டுப் பொருள்கள் பொம்மைகளாக இருந்தன அல்லவா? இவற்றை வைத்து நீங்கள் என்னென்ன விளையாட்டுகளை விளையாடினீர்கள்?
- கல்விச் செயல்பாடுகளில் பொம்மைகளுக்கான வாய்ப்புகள், குறிப்பாகத் தொடக்கநிலை வகுப்புகளில் எந்த அளவு பயன்படுத்த இயலும்?
- அதற்காக எந்தெந்த கருத்துகளையும் திறன்களையும் பெறவேண்டும்?

ஒரு பொம்மை விளையாட்டு காணொளியாகக் காட்டப்படுகிறது. தொடர்ந்து கலந்துரையாடல்.

- மிகப் பழமையான திரை அரங்கக் கலையே பாவை நாடகம். இந்தியாவில் பெரும்பாலான மாநிலங்களிலும் பாவை நாடக வடிவங்கள் உள்ளன. கேரளாவில் சில பகுதிகளில் காணப்படும் தோற்பாவைக் கூத்து இதற்கு ஒரு சான்றாகும். பல்வேறு பாடங்களின் கற்றலுக்கு இதனைப் பயன்படுத்தலாம்.
- குழந்தைகளின் மனதினையும் கவனத்தையும் ஈர்க்கும் திறன் பாவை நாடகத்திற்கு உண்டு. எனவே கல்வித் துறையிலும் கருத்துப் பிரச்சாரத்திற்கு பாவை நாடகத்தினைப் பயன்படுத்துகின்றனர்.

பாவை நாடகத்தை உருவாக்குவதற்கு கீழ்வரும் நிலைகள் தேவையாகும்.

1. கருத்துத் தேர்வு
2. கதைமாந்தர்களும் கதை உருவாக்கமும்
3. வசனம் எழுதுதல்
4. பாவை உருவாக்கம்
5. ஒத்திகை

1. **கருத்து:** நாடகத்தில் என்பது போன்றே பாவை நாடகத்திலும் பரிமாற்றம் செய்வதற்கு ஒன்றோ ஒன்றிற்கு மேற்பட்ட கருத்துகளோ இருக்கலாம். கருத்துகளை உருவாக்குவதற்கு பாடநூல், கற்றல் அடைவுகளை நேரடியாகவோ அதனுடன் தொடர்புடைய சமூகப் பிரச்சினைகளையோ எடுத்துக்கொள்ளலாம். தேர்ந்தெடுத்த கருத்துகள் நாடகத்திற்குப் பொருத்தமாக அமையவேண்டும். நாடகம் நடத்தின பின்னர் கலந்துரையாடலுக்கு வாய்ப்பளிக்க வேண்டும். சில சிந்தனைகளைத் தூண்டும் வண்ணம் கருத்துகளை வெளியிடவும் செய்யலாம். பாவை நாடகத்திற்கான கருத்தினைத் தேர்வு செய்யும் போது குழந்தையின் தேவைக்கும் பருவத்திற்கும் ஏற்ப பொருத்தமானதாக இருக்கவேண்டும்.
2. **கதைமாந்தர்களும் கதை உருவாக்கமும் :** பாவை நாடகத்திற்கான கதை உருவாக்கம் படைப்பாற்றல் செயலாகும். பாடநூல்களிலிருந்து கிடைக்கின்ற கற்றல் அடைவுகளை அல்லது அதனுடன் தொடர்புடைய கருத்துகள் அடங்கிய நாடகங்களே படைக்கப்படுகிறது. கதை மாந்தர்களைத் தேர்வு செய்வது, கதை உருவாக்கும் வேளையில் நடைபெற வேண்டிய செயலாகும். கதை மாந்தர்களின் அமைப்புகள், தோற்றம், பருவம், ஆடை அணிகலன் ஆகியவற்றை நினைவில் கொள்ளவேண்டும்.
3. **வசனம் எழுதுதல் :** இது பாவை நாடகத்தின் முக்கிய பகுதியாகும். நாடகத்திற்கான காலத்தை மனதில் கொண்டு எழுதவேண்டும். இவற்றில் பாடநூல்களில் உள்ள கருத்துகளை முன்னரே தீர்மானம் செய்யவேண்டும். இயல்பாகத் தொடங்கி முறையே கதை வழியாக கருத்துகளின் ஆழங்களுக்குச் செல்வதாக இருக்கவேண்டும்.
4. **பாவை உருவாக்கம்:** பாவை உருவாக்கத்தில் ஈடுபடும் போது எந்தெந்த பாவைகளை உருவாக்க வேண்டும் அவற்றின் தனித்தன்மைகள் எவை? பருவம், ஆடை, இயல்பு இவற்றைக் கருத்தில் கொள்ளவேண்டும். பாவைகள் கவர்ச்சியாகவும் தேவைக்கேற்ற அளவுடையதாகவும் அமையவேண்டும். மேலும் பாவை உருவாக்கும் முறையைப் பற்றி யோசனை செய்ய வேண்டும். பாவை உருவாக்கத்திற்குப் பலமுறைகள் உள்ளன.

1. நூற்பாவை (String Puppet)
2. கை உறைப் பாவை (Glove puppet)
3. கம்பிப் பாவை (Rod puppet)
4. விரல் பாவை (Finger puppet)

**செயல்பாடு**

புத்தகங்களைத் தேர்வு செய்து பாவை உருவாக்குவது தொடர்பான செய்திகளைச் சேகரிக்கவும்.

5. **ஒத்திகை**: நிகழ்த்துதலுக்கு முன்னர் நடத்தும் பயிற்சியே ரிகேள்சல். நிகழ்த்துதலுக்குரிய ஒருங்கிணைப்பு இந்நேரம் தான் நடைபெறுகிறது. தேவையான பின்புல வசதிகளை அமைக்கவேண்டும். (ஒலி, ஒளி)

- நிகழ்த்துதல் மிகவும் முக்கியமான கட்டமாகும். நிகழ்த்துதலுக்கு தேவையான இடவசதி, ஒளி, ஒலி, திரை என்பனவற்றை இந்த காலகட்டத்தில் கவனிக்கவேண்டும். மதிப்பீடு செய்தலும் இந்த காலகட்டத்தில் நிகழவேண்டும்.

**செயல்பாடு**

தொடக்க வகுப்புகளுக்குத் தேவையான பாவைகள் எவையாகும்? ஒரு பாவை உருவாக்கப் பணிமனை வழி பாவை நாடகம் நிகழ்த்துவதற்கான ஆயத்தங்கள் நடத்தலாம் அல்லவா? இதற்காக என்னென்ன விஷயங்களுக்கு நீங்கள் முன்னுரிமை அளிப்பீர்கள்?

திட்டமிடல் - ஆயத்தம், தேவையான பொருட்கள் வல்லுநரின் மேற்பார்வை - வேறு என்னென்ன செய்யலாம்?

பருவம் - 1

தாள் –108

பகுதி - 2

செயல்வழிக் கல்வி

# செயல்வழிக் கல்வி

## பருவம் – 1 செயல்வழித் தேர்வு

முதல் பருவத்தில் இந்த தாளினுடைய பரிமாற்றத்துடன் தொடர்பு கொண்டு மூன்று அலகுள் உள்ளன. மூன்று அலகுகளிலும் கற்றல் அடைவுகளும் முக்கியக் கருத்துகளும் உருப்பெறுவது வகுப்பறைகளிலும் வெளியேயும் நடைபெறுகிற பல்வேறு பரிமாற்ற உத்திகள் வழியாகும். ஆதலால் செயல்முறை (process) மதிப்பீடு செய்ய வேண்டியுள்ளது. இவை அனைத்தும் செய்முறை வாரியத்தின் மதிப்பீட்டிற்கு உள்ளாவது என்பது நடைமுறையில் சிரமமானது. ஆனால் படைப்புகளை மதிப்பீட்டிற்கு உட்படுத்தலாம். நான்கு மண்டலங்கள் தொடர் மதிப்பீட்டு வகைகளாக கருத்தில் கொள்ளப்பட்டுள்ளன.

1. செயல்பாட்டு நாட் குறிப்பு
2. நிகழ்த்துதலை மதிப்பீடு செய்தல்
3. படைப்புகளை மதிப்பீடு செய்தல்
4. அலகுத் தேர்வு.

### மண்டலம் 1: செயல்பாட்டு நாட்குறிப்பு (எனது செயல்பாட்டு கல்விப்புத்தகம்)

**அலகு 1:** உழைப்பிற்கும் மனித முன்னேற்றத்திற்கும் இடையே உள்ள தொடர்பைப் புரிந்து கொள்வதற்குத் தேவையான பதிவுகள்.

உணவுப்பொருள் உற்பத்தி தொடங்கியதோடு சமூக வாழ்க்கையிலும் தொழில் துறையிலும் வந்த மாற்றங்களின் விளக்கங்கள். பாரம்பரியத் துறைகளில் இன்று நடந்து கொண்டிருக்கிற தன்மைகள், தொழில் வாய்ப்புகள், சவால்கள் இவை பற்றிய விளக்கங்கள்.

அலகு 2: செயல்வழிக் கல்வியினுடைய தேசிய குறிக்கோள் பற்றிய குறிப்புகள், செயல் வழிக்க கல்வியினுடைய வரலாறு தொடர்பான வளர்ச்சி.

அலகு 3: செயல்வழிக் கல்வியினுடைய ஆறு மண்டலங்களும் அவற்றினுடைய விளக்கங்களும், கற்றல் செயல்பாடுகளை மண்டலங்களின் அடிப்படையில் வகைப் படுத்திய அட்டவணை.

### மண்டலம் 2 : நிகழ்த்துதல்

**அலகு 1: கருத்தரங்கு**

தொழில் துறையில் இன்று நடைமுறையில் உள்ள தன்மைகள், தொழில் வாய்ப்புகள், களப்பயணம், ஒருங்கமைத்தல், அறிக்கை தயாரித்தல் (பல்வேறு தொழில் நிறுவனங்கள்)

**அலகு 2: சிறப்புக் குழு கலந்துரையாடல்**

(செயல் வழிக் கல்வி, வரலாற்று அடிப்படையான வளர்ச்சி).

**அலகு 3: கலந்துரையாடல்** (செயல்வழிக் கல்வி மண்டலங்கள் பகுப்பாய்வு குறிப்பின் அடிப்படையில்)

### மண்டலம் 3: படைப்புகள்

அலகு 1 : கருத்தரங்க அறிக்கை

அலகு 2: கலந்துரையாடல் குறிப்பு

அலகு 3 : பகுப்பாய்வு குறிப்பு

### மண்டலம் 4: அலகுத் தேர்வு

ஒவ்வொரு அலகினோடும் தொடர்புடைய கருத்துகளை உட்படுத்தி அலகுத்தேர்வுகள் நடத்த வேண்டும். (கலந்துரையாடல்கள், கருத்தரங்குகள், விவாதம், எழுத்துத்தேர்வு, வாய்மொழித் தேர்வு, நேர் காணல் போன்றவைகளை இதற்காகப் பயன் படுத்த வேண்டும். இதனோடு திறந்த புத்தகத்தேர்வு வாய்ப்பும் அலகு – 1 இல் உட்படுத்தல் பட வேண்டும்.

## முன்னுரை

ஆதி மனிதனில் இருந்து கிரகங்களுக்கு பயணம் செல்லும் நவீன மனிதன் வரை முன்னேற்றத்தை நுட்பமாக நோக்கும் எவரும், புரிந்துகொள்ள கூடிய உண்மையே உழைப்பின் மகத்துவம். அலைந்து திரிந்து நடந்த மனிதன் வேளாண்மை மூலம் பண்பாட்டின் சொந்தகாரர்களானதும் கலையும், அறிவியலும் வளர்ந்து இன்றைய நிலையை அடைந்ததும் உழைப்பின் மூலமாகும். ஆகவே உழைப்பின் மகத்துவம் மாணவர்கள் புரிந்துகொள்ளவும் உற்பத்தி, சேவை சார்ந்த செயல்பாடுகளில் ஈடுபடவும் வேண்டும் என்பது முழுவளர்ச்சி அடைதலில் தவிர்க்க முடியாத ஒன்றாகும். அதாவது மாணவனின் சமசீரான, முழுமையான வளர்ச்சியை நோக்கமாக கொண்ட எந்த ஒரு பாடத்திட்டத்திலும் செயல்வழிக் கற்றல் தேவையான ஒன்றாகும். ஒரு காலத்தில் சமூகத்தில் தொழிலும் அதோடு தொடர்புடைய நற்பண்புகளுமே கல்வியின் உள்ளடக்கமாக இருந்தன. பின்னர் அறிவுபெறுவதற்கான பாடங்களின் கற்றலில் பள்ளிகள் அதிக முக்கியத்தும் அளித்தன. ஆனால் காந்திஜி, ஜோண்டூயி போன்ற கல்விச் சிந்தனையாளர்கள் செயல்வழிக் கல்விக்கு முக்கியத்துவம் அளித்துள்ளனர். இப்போதைய கல்வித்திட்டத்தில் செயல்வழிக்கல்வி செயல்பாட்டிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. செய்து கற்றல் என்பதிலும் (Learning to do) ஒன்று சேர்ந்து வாழ்வதற்காக கற்றல் (Learning to live together) என்பதிலும் செயல்வழிக் கற்றலின் கருத்துகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

தொழிலின் மகத்துவத்தை புரிந்துகொள்ளவும் பல்வேறு தொழில் செய்பவர்களை மதிக்கவும் சொந்தமாக தொழில் செய்தவதன் மூலம் தொழிலின் முக்கியத்துவம் அறியவும் செயல்வழிக் கல்வி மூலம் இயலவேண்டும். செயல் வழிக்கற்றலின் கற்பித்தல் முறையை புரிந்து கொண்டு சுதந்திரமாகவும். பிறபாடங்களோடு ஒருங்கிணைத்தும் கற்றல் செயல்பாடுகளை திட்டமிடவும், நடைமுறைப்படுத்தவும் அறிவும். திறனும் ஆசிரியர் பயற்சி மாணவன் பெற வேண்டும். இதோடு Primary பாடத்திட்டம் அறிவுறுத்தும் எல்லா உருவாக்க செயல்பாடுகளையும் சிறந்த முறையில் செய்யவும் வகுப்பறையில் மாணவர்களை கொண்டு செய்வற்கான திறன் D.El.Ed மாணவர்களுக்கு இயல வேண்டும். செயல்வழி கற்றல் விழாக்களின் உள்ளடக்கம், அமைப்பு, மதிப்பீடு எண்பவை பற்றி கருத்துருவாக்கவும், நடைமுறைப் படுத்தவும் இயலவேண்டும். இதற்கு தேவையான செயல்பாட்டில் ஊன்றிய முறையை கடைபிடிக்க வேண்டும்.

## அலகு - 1

# உழைப்பும் மனித முன்னேற்றமும்

## முன்னுரை

மனித முன்னேற்றத்திற்கு அடிப்படையானது உழைப்பு என்று உறுதியாகக் கூறலாம். பிற உயிர் இனங்கள் பயணம் செய்வதற்கு கைகளைப் பயன்படுத்தின. ஆனால் மனிதனோ பல்வேறு வேலைகளைச் செய்வதற்குத் தன் கைகளைப் பயன்படுத்தினான். அறிவையும் சுதந்திரமான கைகளையும் பயன்படுத்தி மனிதன் பல்வேறு கருவிகளை உருவாக்கினான். இவை இரண்டும் மனிதனை பிற உயிரினங்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது.மனிதன் சுயமாக உருவாக்குகிறான் என்ற நூலில் இருந்து கோல்டன் சைல்டு என்பவர் இதனை ரசிக்கும்படியாகவும் அறிவுபூர்வமாகவும் எடுத்துரைத்துள்ளார். அவற்றுள் ஒரு சிறு பகுதி சுருக்கமாகத் தரப்பட்டுள்ளது.

**L.O. உழைப்பு, மனித முன்னேற்றம் இவற்றிற்கிடையே உள்ள தொடர்பை விளக்குகிறார்கள்.**

## முக்கிய கருத்துகள்

- உழைப்பும் மனித முன்னேற்றமும்
- சமூக வாழ்க்கையின் ஆரம்ப நிலைகளில் உழைப்பு என்பது உணவுப் பொருட்களின் சேமிப்பு மட்டுமாக இருந்தது.
- உணவு உற்பத்தி ஆரம்பித்ததுடன் சமூக வாழ்க்கையின் தன்மைக்கு ஏற்ப தொழில் மண்டலங்கள் தோன்றின. எ.கா. விவசாயம், கருவிகள் தயாரித்தல்.

பிற விலங்குகளைப் போன்று மனிதன் உலகில் செயல்படுவதும், இனப்பெருக்கம் செய்வதும் முக்கியமாக அவனது இயற்கையான உடல் அமைப்பினால் ஆகும். மட்டுமன்றி மனிதன் தனது சுற்றுச்சூழலுடன் இணைந்து வாழ்கிறான். மேலும் சுற்றுப்புறத்தை தேவைக்கு ஏற்ப முறைப்படுத்தவும் செய்கிறான். ஆனால் மனிதனின் உடல் அமைப்பு பிற விலங்குகளிலிருந்து முற்றிலும் வேறுபாடுடையதாகும். பிற விலங்குகள் அவற்றின் உணவுத் தேவைக்கான இரைகளைப் பிடிக்கவும் உண்ணவும் நகங்களையும் பற்களையும் பயன்படுத்துகின்றன. முயலுக்கு வளையைத் தோண்டுவதற்கு வசதியாக கைப்பத்தி உண்டு. பெரும்பாலான விலங்குகளுக்கும் உடல் வெப்பத்தினைப் பாதுகாக்க உரோமங்கள் உண்டு. இதுபோன்ற அமைப்புகள் மனிதனுக்கு மிகவும் குறைவாகும். ஒருவேளை முன்னால் இருந்தவையும் தற்போது இல்லாமலாயிற்று.

நாம் வீட்டைக் கட்டியும் ஆடை நெய்தும் இயற்கைச் சக்தியை எதிர்கொள்கிறோம். பழங்கால மனிதர்களுக்குக் கடித்துப் பிளப்பதற்குப் பயன்பட்ட பற்கள் பிற்காலத்தில் இல்லாமல் ஆகிவிட்டது. மனிதனுக்கு அவனது கருவிகள் எந்தச் சூழல்களிலும் வாழ்வதற்கு உதவுகிறது. பிற உயிர் இனங்கள் அவற்றின் உடலிலுள்ள உறுப்புகளின் தனித்தன்மையினால் அதன் அதனிடத்தில் இணங்கி வாழ்கிறது. மனிதனுக்கு வெப்ப காலங்களில் கம்பளி ஆடைகளை அணியாமலும் குளிர் காலங்களில் அணியவும் செய்யலாம். காலின் வலிமையை விட எத்தனையோ மடங்கு வேகத்தில் பயணம் செய்யலாம். . . . ஆனால் பிற உயிர் இனங்களுக்கு கற்றுக் கொள்வது என்பது மிக எளிதாகும். உடலில் இயற்கையாக அமைந்த தனித்தன்மைகளைப் பயன்படுத்துவதற்கு தாயிலிருந்தோ பிற உயிரினங்களிடமிருந்தோ கற்றுக் கொள்ளவேண்டும். ஆனால் மனிதனுக்கு அவனுக்குத் தேவையான அனைத்தையும் உருவாக்கினால் மட்டுமே இயலும். கூர்மையான கல்லைக் கத்தியாக

மாற்றுதல் விலங்குகளின் தோல், உரோமங்களை ஆடையாக மாற்றுதல் என்றிவ்வாறு தற்கால மனிதன் எல்லா கண்டுபிடிப்புகளையும் தொழில் நுட்பங்களையும் வாழ்க்கை மேம்பாட்டிற்காக உருவாக்குகின்றான்.

உழைப்பும் மனித முன்னேற்றமும் மிக நெருங்கிய தொடர்புடையது. பழங்கால மனிதன் தற்கால மனிதனாக மாறிய வரலாற்றை நீங்கள் பள்ளிக்கூடப் பாடஏற்பாட்டில் படித்துள்ளீர்களல்லவா. மீண்டும் நினைவுகூருவோம்.

பழங்கால மனிதன் எவ்வாறு உணவைத் தேடினான்? காய்கனிகளை தேடியும் விலங்குகளை வேட்டையாடியுமல்லவா உணவைப் பெற்றான். பழைய கற்காலம் என அழைக்கப்படும் காலகட்டத்திலா? அவர்களுக்குக் கிடைத்த கற்களை ஆயுதமாக மாற்றி எறியவும் இடித்துக் கொலை செய்வதற்கும் பயன்படுத்தினர். நவீன கற்காலத்தில் நிலை மேலும் மேம்பாடடைந்தது. கல்லை தேய்த்தும் கூர்மை செய்தும் மழு, கத்தி ஆகியவற்றை உண்டுபண்ணினர். விலங்குகள் அவற்றின் உடல் பகுதிகளையே இரை தேடுவதற்கு பயன்படுத்தின என்பதை முன்னர் குறிப்பிட்டோம் அல்லவா? இயற்கைப் பொருட்களை உழைப்புடன் தொடர்புபடுத்தி உழைப்புத்திறன் அதிகரிக்கச் செய்வது முன்னேற்றத்திற்கான பாதையாகும்.

உலோக காலத்தினைப் பார்ப்போம். முதலில் செம்பும், கலவை உலோகங்களும் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றிற்கும் கற்களுக்கும் பெரும் அளவிலான வேறுபாடு உண்டு. இவற்றை தகடுகளாக்கவும் கூர்மைப்படுத்தவும் உருக்கி பழைய நிலைக்குக் கொண்டு வரவும் இயலும். உலோகங்களைப் பெரும் அளவில் வெப்பம் ஏற்றுவதற்கு ஆலைகளையும் தொழிற்சாலைகளையும் உண்டுபண்ணும் திறம் படைத்தனர். ஆனால் இந்தத் திறனை ஒரு சிலர் மட்டுமே பெற்றிருந்தனர். அவர்களின் திறனைப் பயன்படுத்தும் சமூகம், அவர்களுக்கு உணவும் பிற வசதிகளும் செய்து கொடுத்தனர்.

அம்பும் வில்லும் பயன்படுத்துவது குறித்து வேறுபட்ட பல்வேறு கருத்துகள் நிலவுகின்றன. ஆனால், இது எந்தக் காலத்தில் நிலவி இருந்தது என்பதில் பல்வேறு கருத்துகள் உள்ளன. ஐரோப்பாவிலிருந்தும் தென்னாப்பிரிக்காவிலிருந்தும் சில குறிப்புகள் கிடைத்துள்ளன. அம்பைப் பயன்படுத்துவதால் தொலைவில் உள்ள விலங்குகளை வேட்டையாட முடிந்தது. பழைய கற்காலத்தின் முடிவில் வேட்டைப் பொருட்கள் வளம் மிக்கதாயிற்று எனக் கோல்டன் சைல்டு எடுத்துரைக்கின்றார்.

உலோக காலத்தில் கருவிகள் பதின் மடங்காகப் பெருகின. அகழ்வதற்கும் வெட்டுவதற்கும் பயன்படுகின்ற கருவிகள் வடிவமைக்கப்பட்டதால் வேலைகள் மிக எளிமை ஆக்கப்பட்டன. வேளாண்மை செய்யத் தொடங்கிய மனிதன், வசதியான இடங்களில் வாழத் தொடங்கினான் என்பதை நதிக்கரையோர நாகரீகத்திலிருந்து அறிந்துகொள்ள முடியும்.

வேளாண்மை மனித வாழ்வில் புரட்சிகரமான மாற்றங்களை உருவாக்கியது. அன்றாட உணவை ஒவ்வொரு நாளும் தேடுவதற்குப் பதிலாக பல நாட்களுக்கான உணவைச் சேமித்து வைக்கும் நிலை உருவானது. அதற்காக தானிய சேமிப்புக் கிடங்குகளை உருவாக்கினர். தானியங்களைக் கொள்ளை அடிப்போர் இருந்ததால் அதனைப் பாதுகாக்கும் முறை உருவானது. தானியங்களை அறுவடை செய்து முடியும் வரை அங்கேயே தங்க வேண்டிய நிலை உருவானதால் பிற்காலத்தில் அவ்விடங்கள் கிராமங்களாக மாறின.

வேளாண்மை பரவலான போது சமூகமாகச் சேர்ந்து வாழ்வதற்கான வீடுகள், வீட்டுச் சாமான்கள் போன்றவற்றை உருவாக்குவதற்கான தொழில் வாய்ப்புகள் பெருகின. வளர்ப்பு மிருகங்களின் பாதுகாப்பு, சிகிட்சை போன்றவையும் இசை, நடனம் போன்ற பொழுதுபோக்குகளும் பழங்கால மனிதரின் வாழ்வில் தோன்றின.

வேளாண்மைக் கருவிகளின் உருவாக்கம் - உலோகவேலை, வீடுகட்டுதல் - தச்சு வேலை - ஆடை தயாரித்தல் - நெசவாளர் , காவலாளர் - போர் வீரர்கள், தெய்வங்களைச் சிறப்பிக்கும் வழிபாடு - புரோகிதர் - இவ்வாறு பல்வேறு தொழில்களும் சேவைகளும் வளர்ந்ததுடன் சிறு நகரங்களும் தோன்றின. இதிலிருந்து நாகரீகமும் உருவாயிற்று. சிந்து நதிக்கரை நாகரீகமும் யூப்பிரட்டீஸ், டைகிரீஸ் நதிக்கரைகளிலும் தோன்றிய பண்டைய நாகரீகத்தைக் குறித்துப் படித்தீர்கள் அல்லவா?

காலம் செல்லச் செல்ல மனிதனின் உழைப்புத் திறன் வள்ந்து வாகனங்களும் பயண வேகமும் அதிகரித்தன. கப்பலோட்ட அறிந்துகொண்டனர். புதிய இயந்திரங்கள் வேலைகளை எளிமைப்படுத்தின. அவ்வாறு 21-ஆம் நூற்றாண்டு மனிதன் உடல் உழைப்புகளை விட அறிவுபூர்வமாக உழைப்பவர்கள் என்பது உங்களுக்குத் தெரியுமல்லவா? பல்வேறு இயந்திரங்கள், கணினி போன்ற தொழில் நுட்பங்கள் இவையாவும் ஒவ்வொரு நபரின் உழைப்புத் திறனை பழங்கால மனிதரிலிருந்து ஆயிரம் மடங்காக உயரச் செய்தது. இவ்வாறு உழைப்புத் திறனில் ஏற்பட்ட முன்னேற்றம் மனித முன்னேற்றம் என்பதை தெளிவுபடுத்துகிறதல்லவா?

## உழைப்பும் நாட்டு முன்னேற்றமும்

எல்லா வளங்களிலும் அடிப்படையானது மனித உழைப்பாகும். மனித வளத்தைச் சிறந்த முறையில் பயன்படுத்தினால் உற்பத்திப் பெருகவும் நாடு வளம் பெற்றுத் திகழவும் செய்யும் இயற்கையில் இருந்து கிடைக்கும் பொருட்களைச் சமூகத்தின் நன்மைக்காகவும் உழைப்புத் திறனை நல்ல முறையிலும் பயன்படுத்தினால் நாடு வளம் பெற்று முன்னேறும். ஒரு சமூகத்தின் நிலையான நிலைபேற்றிற்கு இன்றியமையாதது உணவுப் பாதுகாப்பாகும். தேவையான ஊட்டச்சத்துக்கள் தேவையான அளவில் கிடைக்கிறது என்பதை உறுதி செய்தால் மட்டுமே அச் சமூகம் உணவு, பாதுகாப்புடைய சமூகம் என மதிப்பிட முடியும். தானிய உற்பத்தியில் நமது நாடு மிகவும் முன்னேறியுள்ளது. ஆனால் எல்லா ஊட்டச் சத்துக்களும் எல்லோருக்கும் கிடைக்கும் விதத்தில் பகிர்ந்தளிக்கும் முறையை உறுதி செய்யவேண்டும். உணவுக்குப் பிறகு வசிக்கும் இடத்திற்கே முக்கியத்துவம் எனலாம். இயற்கையில் இருந்து தம்மை பாதுகாக்கவும் உழைப்பிலிருந்து கிடைக்கும் பொருட்களைப் பாதுகாத்து வைக்கவும் உறைவிடம் தேவையல்லவா? ஆனால் இந்தியர்கள் கிராமங்களில் வேளாண்மை செய்யும் மக்களுக்கு மேன்மையான உறையுள் வசதி பெற முடியவில்லை. முன்னர் குறிப்பிட்டதுபோன்று காலநிலைக்கு ஏற்ப ஆடை அணிதல் என்பது மனிதனின் தனித் தன்மையாகும். ஆடை நெய்யும் தொழிலைப் பரம்பரையாகக் கொண்ட நாடு இந்தியாவாகும். இதனை மனதில் கொண்டே காந்தியடிகள் அன்னிய நாட்டு ஆடைகளை அணியக் கூடாதெனவும் சுதேச ஆடைகளை அணிய வேண்டும் எனவும் ஊக்குவிக்கவும் செய்தார். அடிப்படைத் தேவைகள் மட்டுமன்றி மனிதனுக்குப் பொழுதுபோக்கும் அழகியல் ரசனையும் தேவையாகும். கலை, இலக்கியம், சிற்பக்கலை போன்று பல்வேறு வடிவமைப்புகளிலும் ரசனை செயல்பாடுகளிலும் ஈடுபட்டால் மட்டுமே நவீன சமூகத்தில் முன்னேற முடியும். மனிதனின் அன்றாட வாழ்வு என்பது அடிப்படைத் தேவைகளும் பொழுதுபோக்கும் அடங்கியது ஆகும்.

அதிகத் தகவல்களை உயர்நிலைப் பள்ளி சமூக அறிவியல் நூலில் இருந்தும் பிற பார்வை நூல்களிலிருந்தும் சேகரித்துப் பகுப்பாய்வு செய்வீர்கள் அல்லவா?

**பார்வை நூல் - 1**

அறிவியல் கல்வியின் வரலாறு, டாக்டர். ஆர்.வி.ஜி. மேனோன், கெ.எஸ்.எஸ்.பி 2017

**பார்வை நூல் - 2**

'Ancient Indian History and Civilization' by Sailendra Sarma

### செயல்பாடு

உழைப்புத்திறனின் வளர்ச்சியே மனித முன்னேற்றின் அடிப்படை என்பதை நிறுவுக.

**L.O. 2 : கல்விச் செயல்முறையில் இருந்து தொழில் அகன்று போன சூழ்நிலைகளை அலசி ஆராய்ந்து குறிப்பு தயாரிக்கவும்.**

### முக்கிய கருத்துகள்

- ஆரம்ப காலத்தில் தொழிலே கல்வியாக இருந்தது.
- தொழில் வகைப்படுத்தப்பட்டபோது பாடங்கள் பாட ஏற்பாட்டிலிருந்து வேறுபட்டது
- தனிப் பாட முக்கியத்துவம் தேவைப்பட்டது.
- கல்வி என்பது அக்காதமிக கல்வி மட்டுமாக மாறியது.

### ஓரம் கட்டப்பட்ட தொழில் கல்வி

கேரளத்தில் பெருந்தச்சனின் கதையைக் கேட்காதவர்கள் இல்லை. பெருந்தச்சன் சிற்பக்கலையில் நிபுணரும் தந்திர வேலைகளில் ஈடு இணையற்ற திறனும் உடையவராக இருந்தார். அவருக்கும் அவர் மகனுக்கும் தொடர்புடைய ஒரு கதை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

ஒரு தடவை பெருந்தச்சன் வடிவமைத்த ஒரு பாலத்தின் கட்டுமான வேலை முடிந்தது. தச்சன் நேரடியாக வந்து பார்த்து வேலை முடிந்ததை உறுதி செய்தார். அத்துடன் ஒரு குறும்பு வேலைப்பாடையும் செய்தார். பயணிகள் பாலத்தின் ஒரு கரையில் ஏறும்போது ஒரு பொம்மை கயிறுவழி வாய்க்காலில் இறங்கும். பயணி பாலத்தின் மறு கரையை அடையும் போது வாயில் தண்ணீரை நிறைத்துக்கொண்டு மேலே எழும்பும். பாலத்திலிருந்து கீழே இறங்கியதும் பயணியின் மேல் தண்ணீரைக் கொப்பளிக்கும். இந்தச் செய்தி ஊர் முழுவதும் பரவியது. அனைவரும் பெருந்தச்சனைப் புகழ்ந்தனர். இந்தச் செய்தி பெருந்தச்சனின் மகனின் காதிற்கு எட்டியது. அவர் பாலத்தின் அருகில் சென்றார். தந்தையின் தந்திர வேலைப்பாட்டை ஆய்வு செய்து வேறொரு பொம்மையை நிறுவினார். தந்தையின் பொம்மை தண்ணீரைக் கொப்பளிக்கும் போது மகனின் பொம்மை அதன் கன்னத்தில் அறையும். தண்ணீர் தூரத்திற்குச் செல்லாமல் அங்கே சிதறி விழும். அப்போது தண்ணீர் பயணியின் மீது விழாது. ஆச்சரியமான இந்த வித்தை ஊர் முழுவதும் பரவியது. தந்தை மகனை அணைத்துக் கொண்டு இவ்வாறு கூறினார். என்னிடம் வித்தையைக் கற்ற நீ அதை மேலும் அதிகரித்தாய். திரியில் இருந்து உருவாகும் தீப்பந்தத்தைப் போல் அதை மேலும் அதிகரிக்கச் செய்தாய். தந்தைக்குரிய காணிக்கையாக இதைக் கருத வேண்டும் என மகன் கூறினான்.

நீங்கள் கதையைப் படித்தீர்களல்லவா? பெருந்தச்சனின் கதையை ஒரு குறியீடாக எடுக்கலாம். பெருந்தச்சனிடமிருந்து கலை மகனுக்கு பகிரப்பட்டது. ஒரு தலைமுறையிலிருந்து கலை அடுத்த தலைமுறைக்கு செல்லும்போது தொழில்நுட்பத்தில் முன்னேற்றம் ஏற்படும் என்ற குறிப்பும் அதில் உள்ளது. இவ்வாறு கட்டுமானத் தொழில்நுட்பம் தலைமுறை தலைமுறையாக பகிரப்பட்டு வளர்ந்து வந்ததாகும். உண்மையாகக் கூறினால் கல்வி என்பது தொழில்திறனும் அதோடு தொடர்புடைய

பொருட்களும் என்ற முறையிலேயே முற்காலத்தில் பரிமாற்றம் செய்யப்பட்டது. விவசாயியின் பிள்ளைகள் அந்தத் தொழிலையே கற்பார்கள். மருத்துவரிடம் வேலை செய்து மருத்துவம் கற்பார்கள். தச்சனிடம் வேலை செய்து தச்சு வேலையைக் கற்பார்கள். இதுவே கற்றல் முறையாக இருந்தது.

நீங்கள் தொடக்க வகுப்புகளில் அடிப்படை அறிவியல் என்ற பெயரில் படிக்கும் பொருள் உயர்நிலை வகுப்புகளை அடையும் போது அது இயற்பியல், வேதியியல், உயிரியல் எனப் பிரித்து கற்கப்படுகிறது. கல்லூரியில் உயிரியல் தாவரவியல், விலங்கியல் என இரண்டாகப் பிரிகிறது. இயற்பியல் புவி இயற்பியல், உயிர் இயற்பியல், வான் இயற்பியல் எனப் பிரிக்கப்படுகிறது. இவ்வாறு பொருட்கள் பல்வேறாகப் பிரியும் போது சிறப்புப் பிரிவுகளாகின்றன. இதைப்போல ஒரு மாற்றம் தொழில் துறையிலும் உருவாகியுள்ளது. அது எவ்வாறு என்று பார்க்கலாம்.

வேட்டையாடியும் காய் கிழங்குகள் போன்றவற்றைச் சேகரித்தும் வாழ்ந்த மனிதர்கள் அனைவரும் அந்தத் தொழிலையே செய்துவந்தார்கள். வேளாண்மைத் தொழில் தொடங்கிய காலத்தில் எல்லோரும் எல்லா வேலைகளையும் செய்தனர். வேளாண்மை விரிவடைந்தபோது ஒரே இடத்தில் நிலையாக வாழ்ந்த மனிதனுக்கு வீடுகட்டுதல், உழவுத் தொழில், விதை விதைத்தல், வேளாண்மைக் கருவிகளை உருவாக்குதல் என்றிவ்வாறு தொழிலை வகைப்படுத்துதலுக்கான தேவை இயற்கையாகவே உருவாகியது. விலங்குகளை வளர்த்தல், விலங்குகளுக்கு சிகிட்சை அளித்தல் போன்ற வேலைகளும் சேர்ந்து வந்தது. விவசாயியின் விளைபொருட்களை விற்பதற்கான (முதற்கட்டத்தில் பண்டமாற்றுமுறை) அவசியம் ஏற்பட்டது. விவசாயத்திற்கு காலநிலை முன்னறிவிப்புகள், கடவுளைத் திருப்திப்படுத்துவதற்கான வழிபாடு இதுபோன்றவைகளும் தொழில் பிரிவுகளுக்கான அடிப்படையாக இருந்தது. விவசாயத்தில் இருந்து கருவிகள் உருவாக்குதல், விதை விதைத்தல், அறுவடை செய்தல், சேகரித்தல், கழிவுப் பொருட்களை அகற்றுதல் என்றிவ்வாறு தொழில்களை பிரித்து வகைப்படுத்தும் போது ஒவ்வொருவரும் ஒவ்வொரு பிரிவுகளில் நிபுணர்களாக மாறுகிறார்கள். இத்துடன் மற்றொரு மாற்றமும் உண்டாயிற்று. வழிபாட்டுச் செயல்பாடுகள், ஆட்சி நிர்வாகம், மருத்துவம் போன்ற உடலுழைப்பு குறைந்த தொழில் பிரிவுகளுக்கு அதிக ஓய்வு கிடைத்தது. அவர்கள் சமூகத்தின் உயர்மட்டத்திற்கு மெதுவாக பரிணமித்தனர். அவர்களே சான்றோர்களாகவும் கற்பிப்போர்களாகவும் மாறினர். இனக்குழுக்களைப் பாதுகாக்கும் போராளிகள் காலப்போக்கில் ஆட்சியாளர்களாக மாறினார்கள். அவர்களுக்கும் கல்வி அளித்தது பல்வேறு மண்டலங்களில் நிபுணர்களான குருக்கள் ஆகும். இவ்வாறு கல்வி மற்று தொழில்களிலிருந்து வேறுபட்டது.

குருவோடு சேர்ந்து வாழ்ந்து கற்பவர்கள் குருவிற்கு வேண்டிய உதவிகள் செய்வார்கள். ஆட்சியாளர்கள் குருக்களுக்கு வேண்டியவற்றைக் கொடுப்பர். இவ்வாறு கல்வி வீட்டிலிருந்து (முதிர் தலைமுறையிலிருந்து இளம் தலைமுறைக்கு) என்பதற்குப் பதிலாக ஓர் அமைப்பாக வளர்ந்தது. வேதப் புராணங்களில் புலமை அடைவதே கல்வி. அம்பு வில் பயிற்சிகளையும் குருக்கள் கற்பித்தனர். ஆனால் சாதாரணத் தொழில்கள் இந்தக் கல்வி முறையிலிருந்து அகன்று நின்றன. ஏட்டுக் கல்வி மட்டுமே கல்வியாகக் கருதப்பட்டது. நவீன காலத்தில் பொதுக் கல்வி நிறுவனங்கள் ஏராளம் உருவாயின. அங்கு ஆரம்ப காலத்தில் எல்லோருக்கும் நுழைவு அனுமதிக்கப்படவில்லை. மொழியும், கணிதமும் அறிவியலும் அல்லாமல் தொழில் திறன்களின் வளர்ச்சி ஏற்படவில்லை.

கேரளத்தில் பொதுக்கல்வி நிறுவனங்களில் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு நுழைவு அனுமதிக்க ஐயங்காளியின் தலைமையில் நடந்த போராட்டத்தைப் பற்றி விசாரிக்கவும். இதைப் பற்றி கலந்துரையாடவும்.

இந்தியாவில் மட்டுமல்ல, உலகம் முழுவதும் பொதுக்கல்வி என்பது ஏட்டுக் கல்விக்கு முக்கியத்துவம் அளிப்பதாக மாறியது. அவ்வாறு மாறிய போதுதான் கலை, உடற்கல்வி, செயல் கல்வி ஆகிய பாடங்களும் பள்ளிப் பாட ஏற்பாட்டின் பகுதியாக அமையவேண்டும் என்ற கருத்தை சிலர் கூறியதோடு படிப்படியாக அங்கீகரிக்கப்பட்டு அவையும் பாட ஏற்பாட்டில் உட்படுத்தப்பட்டன.

> கல்வியின் உளவியல் கோட்பாடுகளுடன் தொடர்புபடுத்தி பெற்ற அறிவுகள் இங்கு வெளியிடப்பட்ட கருத்துகளோடு தொடர்புடைய வகுப்புகளில் கலந்துரையாடலுக்கு உட்படுத்தவேண்டும். காந்திஜியின் அடிப்படைக் கல்வித் திட்டம், ஜாண் டூயியின் புராஜக்ட் முறை இவை தொழிலின் முக்கியத்துவத்தை தெளிவுபடுத்துவது உங்களுக்குத் தெரியுமல்லவா.

**L.O. 3 - தொழில் நிறுவனங்களைப் பார்வையிட்டு தொழில்கள் அவற்றிற்கிடையேயுள்ள தொடர்பு, விற்பனை போன்றவற்றைப் பற்றி அறிக்கை தயாரிக்கப்படுகிறது.**

## முக்கிய கருத்துகள்

- பல்வேறு விதமான தொழில்களுக்கிடையே தொடர்பு உண்டு
- செய்யும் தொழிலுக்கு வாழ்க்கை முறையோடுள்ள தொடர்பைக் கண்டறிய இயலும்
- பாரம்பரிய தொழில் துறைகளில் சில தன்மைகள் காணப்படுகிறது.
- தொழில் துறைகள் – வாய்ப்புகளும் சவால்களும்

நம்முடைய ஒருநாள் துவங்குவது முதல் பள்ளிக்கூடம் சென்றடைவது வரை உள்ள செயல்பாடுகளைச் சிந்தித்துப் பார்ப்போம். இந்தச் செயல்பாடுகளில் எந்தெந்த தொழில்களுடன் தொடர்புடையவை உட்படுகின்றன.

எடுத்துக்காட்டாக காலையில் பல் விளக்குவதற்கு பற்பசை / பல்பொடி / உமிக்கரி வேண்டுமல்லவா. பற்பசை உருவாக்குவதற்கான கச்சாப் பொருட்கள் அதன் உறை, மூடி, கூட்டில் அடைத்தல், கூட்டில் அச்சடி, தூரிகை, தூரிகை செய்வதற்கான கருவிகள், கூட்டில் அடைத்தல், இவற்றின் விற்பனை என்ற தொடரைப் பார்க்கவும். எவ்வளவோ மனிதர்களின் உழைப்பின் பலனாக நம்முடைய பல் ஒளிர்கிறது!

இதுபோல பள்ளிக்கூடத்தில் சென்றடைவது வரையுள்ள பிறச் செயல்பாடுகளை அட்டவணைப்படுத்தி பகுப்பாய்விற்கு உட்படுத்தவும். நமக்கு ஒவ்வொருவருக்கும் ஒரு நாளைச் செலவிட நூற்றுக்கணக்கான மனிதர்களின் வேறுபட்ட உழைப்புத் திறன் இன்றியமையாதது எனப்பார்க்கலாம்.

சில தொழில் மண்டலங்கள், அவற்றின் தொடர்புகள் என்பவற்றை ஒரு முறை கூடப் பரிசோதிக்கலாம்.

சர்க்கரை உற்பத்தி செய்யும் தொழிலைப் பார்ப்போம். சர்க்கரை உற்பத்தி செய்ய முதலில் வேண்டியது கரும்பு விவசாயம் ஆகும். உயர் ரக கரும்பினங்கள் கிடைத்தால் மட்டுமே நல்ல முறையில் விவசாயம் செய்ய முடியும். விதையைப் போன்றே உரமும் முக்கியமானது. விவசாயத்துடன் தொடர்புடைய ஒரு முக்கிய தொழில் மண்டலம் உரம் தயாரித்தல் ஆகும். கரும்பு விவசாயத்திற்கு அதிக உழைப்பு தேவை, அறுவடை தேவை, சர்க்கரை ஆலைகள் வேண்டும், உற்பத்தி செய்தபின் அதனை பொட்டலங்களாக்குவதும், விற்பனை செய்வதும் முக்கியமானதாகும். இவ்வாறு ஒவ்வொரு தொழில் மண்டலமும் வேறுபல மண்டலங்களோடும் தொடர்பு கொண்டுள்ளது. ஆடைகள்

தயாரிப்பினுடையவும் உணவு பதப்படுத்தலினுடையவும் எடுத்துக்காட்டுகளை கலந்துரையாடி குறிப்பு தயாரிக்கவும்.

தொழில் மண்டலங்களில் நாளுக்கு நாள் வளர்ச்சி வந்துகொண்டிருக்கும். நவீனக் கருவிகள் கண்டுபிடிக்கப்படுகின்றன. பழைய தொழில்நுட்பங்கள் முக்கியத்துவம் இல்லாமல் மாறுகின்றன. ஆனாலும் சில பாரம்பரிய தொழில் மண்டலங்கள் இன்றும் நடைமுறையில் உள்ளன. நமது வாழ்வை எளிதாக்குவதற்கு செயல்படுகின்ற தொழிலாளர்களின் வாழ்க்கை எவ்வளவு வளமுடன் உள்ளது எனத் தெரிந்துகொள்ள வேண்டுமல்லவா? அதற்குரிய வழி என்ன? ஒரு தொழில் நிறுவனம் பார்வையிடலாமா?

தொழிற்சாலை/தொழில் நிறுவனம் பார்வையிடும் போது யாரை எல்லாம் அணுக வேண்டும், என்னென்ன தகவல்கள் சேகரிக்கவேண்டும் எவ்வாறு பகுப்பாய்வு செய்ய வேண்டும் போன்றவற்றை வகுப்பில் கலந்துரையாடி தேவையான வினாத் தொகுப்பும் தயாரிக்க வேண்டும். பார்வையிடும் போது பார்வையிடுவதற்கான அனுமதி பெற வேண்டியிருக்கும். அதைக் கவனமாகச் செய்யவேண்டும். பொறுப்புகள் ஒப்படைத்தல் சரியாகச் செய்யவேண்டுமல்லவா.

வேளாண்மை/தொழில் வளர்ச்சியுடன் தொடர்புடைய அறிஞர்களின் கருத்துகளும் பெறவேண்டுமல்லவா? தகவல் சேகரிப்பு முழுமையடைந்தால் பகுப்பாய்வும், அறிக்கை தயாரித்தலும் உண்டு. அவையெல்லாம் கருத்தரங்கத்தில் வெளியிட்டு கலந்துரையாடலுக்கு உட்படுத்தினால் அதிக தெளிவு ஏற்படும்.

| |
|---|
| தொழிலாளிகளோடும் தொழில் அதிபரோடும் தொழில் அறிஞர்களோடும் நேர்காணல் நடத்துவதற்கான வினாத்தொகுப்பு தயாரிக்கவும். |

பரம்பரைத் தொழில் மண்டலங்களில் (கயிறு, முந்திரிப்பருப்பு, நெசவு . . . ) காணப்படும் பிரச்சினைகளும் தன்மைகளும் பற்றி அதிக தகவல்கள் திரட்டி குறிப்பு தயாரிக்கவும்.

நவீனத் தொழில் மண்டலங்களை கணினி அடிப்படையிலான தொழில் மண்டலம், வணிகவளாகங்கள், பெரிய வணிக வலையமைப்புகள், அழகுக் கலைஞர், வேளாண்மை கருவிகளின் வினியோகம் போன்றவற்றின் வாய்ப்புகள், அந்தந்த மண்டலங்களில் நிலை நிற்கும் பிரச்சினைகள் போன்றவற்றை கற்றலுக்கு உட்படுத்தி வகுப்பில் கலந்துரையாட வேண்டும்.

| | |
|---|---|
| Port folio | தொழில் மையத்தை பார்வையிடுவதற்கான வினா நிரல் |
| | பார்வையிடல் அறிக்கை |
| | குருகுலக் கல்வி பற்றிய குறிப்பு |
| Evaluation | வினாநிரல், குறிப்புகள், அறிக்கை, தயாரித்த முறை, திறன் |


1. NCERT Hand Book - (Training meterial) for Work Education
2. வித்யாபியாசம் நூற்றாண்டுகளிலூடெ தாயாட்டு சங்கரன் (KSTA வெளியீடு)

அலகு - 2

# செயற்கல்வி - நோக்கங்களும் கண்ணோட்டங்களும்

## முன்னுரை

செயற்கல்விக்குத் தெளிவான நோக்கங்களும் கண்ணோட்டங்களும் வரையறுக்கப்பட்டுள்ளன. கோத்தாரி குழு அறிக்கை, தேசிய கல்விக் கொள்கை (NPE 1986, NCF, KCF போன்றவைகளை ஆய்வு செய்தால் இது தெளிவாகும். திறன் வளர்ச்சி மட்டுமல்லாது அத்துடன் தொடர்புடைய அறிவு மண்டலங்களையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும். தொழிலோடு தொடர்புடைய செயல்பாடுகளில் ஈடுபடும்போது தொழில் ஆர்வம் ஏற்படுகிறது. தொழில் செய்வோருக்கு மதிப்புக்கொடுக்கவும் சுயமாக தொழில் செய்யவும் குழந்தைகளைத் தயார் படுத்த செயற்கல்விக்கு இயலவேண்டும். கேரள பாட ஏற்பாட்டில் பிற பாடங்களின் அணுகுமுறையோடு தொடர்பு கொண்டுள்ள முறையே செயற்கல்வியிலும் பின்பற்றப் படுகிறது. சுயமாக சிந்திப்பதற்கும் படைப்பாற்றலுக்கு வாய்ப்புகள் உள்ளதுமான சேவையையோ உற்பத்தியையோ அடையும் விதமாக ஒவ்வொரு செயல்முறையும் அமைய வேண்டும்.

## முக்கிய கருத்துகள்

1. கல்வி நோக்கங்கள்
2. செயற்கல்வி வரலாறு சார்ந்த வளர்ச்சி
   - குருகுலக் கல்வி
   - அடிப்படைக் கல்வி
   - பல்வேறு குழு அறிக்கைகள் NCF, KCF
3. செயற்கல்வியும் அறிவு வளர்ச்சியும்
4. செயற்கல்வி - அணுகுமுறை

**L.O பார்வை நூல்களை ஆய்வு செய்தும் நிபுணர்களுடன் கலந்துரையாடியும் செயற்கல்வியின் முக்கிய நோக்கங்கள், வரலாறு, கண்ணோட்டங்கள், உளவியல் போன்றவற்றைப் பற்றி குறிப்பு தயார் செய்யலாம்.**

செயற்கல்வி பாடஏற்பாட்டின் மிகவும் தேவையான ஒன்றாக தீர்மானிக்கப்பட்டுள்ளது என முன்னர் கூறினோம் அல்லவா? தேசிய கல்விக் கொள்கை அதற்கான முக்கியமான சான்றாகும்.

தேசிய கல்விக் கொள்கை (NPE 1986) செயற்கல்வியை எவ்வாறு அறிமுகப்படுத்துகிறது எனப் பார்ப்போம்.

"Work Experience is viewed as purposive and meaningful manual work organised as an integral part of the learning process and resulting in either goods or services useful to the communtiy is considered as an essential component at all stages of education, to be provided through well structured and graded programmes. It would comprise activities in accordance with the interests abilities and needs of students. The levels of skills and knowledge to be upgraded with the stages of Education."

கொள்கை வெளியீட்டு அறிக்கையின் இந்தக் கண்ணோட்டம் தேசிய பாட ஏற்பாட்டிலும் பிரதிபலிக்கிறது. அதை ஏறத்தாழ அதைப்போன்றே கே.சி.எப் ஏற்றுக்கொண்டுள்ளது.

சுயநோக்கமும் நன்றியுணர்வும் உடல் உழைப்பும் தேவைப்படுகின்ற செயல்பாட்டை பாட ஏற்பாடு நோக்கமாகக் கொண்டுள்ளது என்பது தெளிவாகிறது. இது பாட ஏற்பாட்டின் தேவையானப் பகுதியாக பள்ளிக் கல்வி இருக்குமளவும் தொடர வேண்டுமென்றும் மேல் வகுப்புகளுக்கு செல்வதற்கு ஏற்ப செயல்பாடுகளுடன் சேர்ந்து வருகின்ற திறன்கள், அறிவு ஆகியவற்றின் தரம் உயர வேண்டுமென்றும் தெளிவுபடுத்துகிறது.

திறன் வளர்ச்சி மட்டுமல்லாமல் அதனுடன் தொடர்புள்ளவற்றையும் பல்வேறு வகையான அறிவு மண்டலங்களையும் கருத்தில் கொள்ளவேண்டும் என்றும் சந்தேகத்திற்கு இடமின்றி தெளிவாக்க வேண்டும் என்பதே கொள்கை வெளியீடு ஆகும். திறன்களில் உடல் அசைவுகள் மட்டுமன்றி வெளிப்பாடு என்ற உளச் செயல்பாடும் உள்ளது என்று நினைவுகூர வேண்டும்.

உடல் உழைப்பு இல்லாத ஏராளமான சேவைகள் வளர்ச்சியடைந்த இந்தக் காலத்தில் கணினி மற்றும் நவீன தொழில்நுட்பக் கல்வியும் பயன்படுத்தி உருவாக்குகின்ற அறிவியல் சார்ந்த உற்பத்திப் பொருட்கள் - நிரல்கள், மென்பொருட்கள் போன்றவற்றை செயல் கல்வியில் உட்படுத்த வேண்டும் என்று கூறவேண்டும்.

கொள்கை அறிக்கை "The experience would be helpful on his entry into the work force" என்று தொடர்ந்து கூறப்படுகிறது. அதாவது வருங்காலத்தில் சமூகத்திற்கும் தனக்கும் பயனுள்ள முறையில் நாட்டின் உழைக்கும் திறனின் பகுதியாக ஒவ்வொரு குழந்தையும் தகுதியடைய வேண்டும் என்பதே நோக்கமாகும்.

செயற்கல்விக்கு தேசிய பாட ஏற்பாடு வலைச்சட்டமும் அதைத் தொடர்ந்து நமது மாநிலப் பாட ஏற்பாடும் மிகப் பெரும் முக்கியத்துவத்தை அளிக்கிறது. குழந்தைகள் உழைப்பின் வழியாக சமூகத்திற்கு பயன்தரும் முறையில் ஏதேனும் உற்பத்திப் பொருட்களை உருவாக்கவோ அல்லது சேவைச் செயல்பாடுகளை நடத்தவோ வேண்டும். இதன் வழியாக குழந்தைக்கும் சமூகத்திற்கும் பயன்கிடைக்கும் என்று தெளிவாகிறது அல்லவா.

## செயற்கல்வியின் நோக்கங்கள்

செயற் கல்வியின் நோக்கங்கள் சுருக்கமாகக் கொடுக்கப்பட்டன மேலும் விளக்கமாக பரிசோதிக்கலாம்.

- மனித வள மேம்பாடு
- தொழில் வாய்ப்பு
- தொழிலுடனும் தொழிலாளர்களுடனும் உள்ள முக்கியத்துவம்
- நடுநிலையான தனிநபர் வளர்ச்சி
- உற்பத்தி துறையில் வளர்ச்சியும் தனியார் பங்களிப்பும்
- மதிப்புகளும் மனநிலைகளும்.

இவ்வாறு நோக்கங்களை ஒருங்கிணைத்துக் கூறலாம். இவை ஒவ்வொன்றையும் வளரச் செய்ய உங்களுக்கு இயலும் அல்லவா? சிலவற்றை மட்டும் இங்கு குறிப்பிடலாம்.

அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான ஏராளம் திறன்களை பள்ளிக்கூட மாணவர்கள் அடைந்து கொள்ள வேண்டும் அல்லவா? உடலையும் ஆடையையும் சுத்தமாக பாதுகாக்க வேண்டியது முதல்

கருவிகளை கையாள்வது வரையுள்ளவற்றை அன்றாடம் செய்யவேண்டும். வேகமாகவும் திறமையுடனும் வேலை செய்ய தகுதிபெற வேண்டும். அடிப்படைத் தேவைகள், பொழுது போக்குகள், சேவைகள் இவற்றைக் கருத்தில் கொள்ளாமல் எவருக்கும் நன்றாக வாழ்க்கையை நடத்த இயலாது. இவ்வாறு மிகச் சிறப்பாக தனது வேலைகளை செய்வதற்குத் தேவையான அறிவுகளையும் கருத்துகளையும் திறன்களையும் பெற்றுக் கொள்வதே மனித வள மேம்பாடு.

தொழில் வாய்ப்பு உருவாவது தொழில் செய்வதற்கான தன்னம்பிக்கையை அடையும் போதாகும். அதற்குத் தேவையானப் பயிற்சி வேண்டும். எளிதாகவும் வேகமாகவும் திறமையாகவும் வேலை செய்யத் தேவையான பயிற்சி வேண்டும். தொழிலின் முக்கியத்துவமும் தொழில் செய்பவர்களும் நாட்டின் செல்வத்தை உற்பத்தி செய்வதற்கான பகுத்தறிவும் இருந்தால் தொழில் வாய்ப்பு ஏற்படும். வேலை செய்து வருமானத்தைப் பெறுவதே பெருமை என்பதைப் புரிந்து கொள்ளும் முறையில் தொழில் மண்டலத்தைக் குறித்தக் கற்றல்களும் குழந்தைகளில் உருவாக வேண்டும்.

தொழிலோடும் தொழில் செய்பவர்களோடும் – உடல் உழைப்பினோடும் தனிப்பட்ட மரியாதை இல்லாதவர்கள் சமூகத்தில் ஏராளம் உள்ளனர். அலுவலக வேலைகள் மட்டுமே வேலை என்று நினைப்பவர்களும் உள்ளனர். அனைத்துத் தொழில்களும் அன்றாட வாழ்க்கையில் குழந்தைகள் புரிந்துகொள்ளும் போது தொழிலாளர்களின் திறமையை வேறுபடுத்தி அறிந்துகொள்ளும் போது தானாகவே மதிப்பு ஏற்படும். தொழில் செய்வதும் தொழில் செய்பவரை ஆதரிப்பதும் தேவையை அறிந்து செயல்படுவதும் ஒரு தொழில் பண்பாடு உருவாகவும் வேண்டும்.

தனியார் மயம் தனிநபருக்கும் நாட்டிற்கும் தவிர்க்க இயலாததாகும். மகாத்மா காந்திஜியின் கிராம சுயராஜ்யம் கொள்கையை நினைவுகூரவும். தொழில்களுடன் தொடர்புடைய மதிப்புகளையும் மனநிலைகளையும் செயல்பாடுகள் வழியாக பெற்றுக்கொள்வதை நோக்கமாகக் கொள்ளவேண்டும்.

நடுநிலையானத் தனிநபர் வளர்ச்சிக்கும் செயற்கல்விக்கும் இடையேயானத் தொடர்பு என்னவென்று பார்க்கலாம். கல்வியின் குறிக்கோள் நடுநிலையான தனிநபர் வளர்ச்சி என்று தெரியும் அல்லவா? வளர்ச்சியை நடுநிலையாக்க 3 H-ஐ கருத்தில் கொள்ள வேண்டும் என்று கூறுவது உண்டு. Head, Heart, Hand இவையே 3H. உடல் வளர்ச்சி, திறன்களின் வளர்ச்சி, சமூக பண்பாட்டு வளர்ச்சி இவை 34 இல் குறிப்பிடப்படுகிறது. அறிவுகளும் திறமைகளும் மனநிலைகளும் முதல் 4 இல் அடங்கும். இரண்டாவது H இல் இவற்றுடன் இரசித்தலும் உட்படும். பன்முக அறிவின் அடிப்படையில் நடுநிலையான வளர்ச்சியை உங்களால் விளக்க இயலும் அல்லவா.

உருவாக்கச் செயல்பாடுகளிலும் சேவைச் செயல்பாடுகளிலும் பன்முக அறிவு வளர்ச்சியில் பயனுள்ளதாக்குவது எவ்வாறு என்று விளக்க உங்களுக்கு இயலும் என்றாலும் ஒரு எடுத்துக்காட்டைப் பார்ப்போம்.

பள்ளிக்கூட வளாகத்தில் காய்கறித்தோட்டம் அமைக்கின்ற செயல்திட்டத்தில் ஈடுபடுகின்ற குழந்தைகளுக்கு மொழி சார்ந்த அறிவு வளர்ச்சிக்கு பல வாய்ப்புகள் கிடைக்கும், கலந்துரையாடலும் செயல்திட்டத்தின் முன்னறிக்கையும் நிபுணர்களுடன் நேர்காணலும் புத்தக வாசிப்பும் மொழி சார்ந்த அறிவு வளர்ச்சிக்குத் துணைபுரியும். இடத்தை பல தட்டுகளாகப் பிரித்தலும் அளத்தலும் அதன் அடிப்படையிலான திட்டமிடுதலும் வளர்ந்து நிற்கும் செடிகளுடன் தொட்டுத் தழுவுதலும்.

வயலுக்கு அக்கரையில் நீண்ட நீல நிறத்துடன் வேலியோடு
ஆடி அசைந்து அசைந்து உறவுகொண்டிருக்கும்
பாகற் கொடியே!

பாகற்கொடி கிடப்பது கவிஞருக்கு மட்டுமின்றி மனதுக்கும் குளிர்ச்சி தரும் என்பதை சொல்ல

வேண்டியத் தேவை இல்லை அல்லவா! தெரியாமலே கவியாக மாறும் நிகழ்வே இது. இயற்கை சார்ந்த அறிவு உறுதியானது அல்லவா? கூட்டுச் செயல்பாடும் பலனை எடுக்கும் போது கிடைக்கும் தன்மான உணர்ச்சியும் தனிநபர் வளர்ச்சியை விரிவடையச் செய்யும் என்பதைக் கூற உங்களால் நிச்சயமாக இயலும்.

இப்படிப்பட்ட சிலச் செயல்பாடுகளை எடுத்துப் பார்க்கவும். எதை எடுத்துக் கொண்டாலும் அதில் அறிவு, திறன் ஆகியவற்றின் காரணிகள் இருக்கும். பகுப்பாய்வு செய்து குறிப்புகள் தயாரித்து வகுப்பறையில் பங்குவைக்கலாம்.

Port folio செயல்திட்டம், அறிக்கை

Evaluction: பல்வேறு குறிப்புகளை ஆய்வு செய்து செயற்கல்வியின் வரலாறு சார்ந்த வளர்ச்சி (செயல் திட்டம்)

**மேற்கோள்**


1. NPE 1986, NCF 2005, KCF 2007 முக்கிய பகுதிகள்.
2. NCERT Hand Book (Training Material) For Work Experience.

## செயற்கல்வி - வரலாற்று ஆய்வு

ஸ்ரீகிருஷ்ணனும் அவரின் நண்பனாக இருந்த சுதர்மாவினுடையவும் கதையைக் கேட்டதில்லையா! காட்டில் விறகு சேகரிக்க சென்றபோது பொழுது அடைந்ததும் காட்டில் பயந்து மரத்தில் ஏறி இருந்ததுமானக் கதை. குருவின் மனைவி தேடி வந்ததும் கதையின் தொடர்ச்சியாகும். குருகுலத்தில் வசிக்கும் போது அங்குள்ள சின்ன வேலைகளையும் மாணவர்கள் செய்திருந்தார்கள் என்பதை இந்தக் கதையில் இருந்து புரிந்துகொள்ளலாம் அல்லவா! இது கற்றல் செயல்பாட்டின் பகுதி என்று கூற இயலாது. ஆனால் வாழ்க்கைத் திறன்களை அடைவதற்கு இது துணைபுரியும்.

வேலையினால் கிடைக்கின்ற கல்வியைத் தான் காந்திஜி முன்மொழிந்தார். ஒரு கைத்தொழிலை மையப்படுத்தி தான் குழந்தை தனதுக் கல்வியை அடைய வேண்டும். அவ்வாறு செய்யும் போது அறிவுக்கும் திறமைக்கும் இடையேயும் பகைக்கும் தலைக்கும் இடையேயும் தொடர்பு உருவாகும். அது மட்டுமல்லாமல் இந்தியாவைப் போன்ற ஏழ்மையான நாட்டில் ஒவ்வொரு குழந்தைக்கும் தனது கல்வியின் செலவிற்கான ஒரு பகுதியை கண்டடைய கைத் தொழிலினால் இயலும். முற்றிலும் தனியார் மய தத்துவத்தில் அடிப்படையிலான காந்தியின் கண்ணோட்டத்தை அவர் விளக்குகிறார். எழுத்தறிவும் பாடக்கற்றலும் மாணவர்களுக்கு நன்மை அளிக்காது என அவர் சுட்டிக்காட்டினார்.

நாம் உழைப்பின் மேன்மையை சற்றேனும் புரிந்துகொள்ள வேண்டும். ஒரு சவரத் தொழிலாளரோ செருப்பு தைப்பவரோ கல்லூரிக்கு செல்வதுடன் அவர்களின் தொழிலை விட்டுவிடக் கூடாது. சவரத் தொழிலாளரின் தொழில் மருத்துவரின் தொழிலைப் போன்று புனிதமானது என நான் நம்புகிறேன்.

அவர் மேலும் தொடர்கிறார்.

கல்வி கட்டாயமாக விரும்பக்கூடிய அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்றால் நமது பள்ளிக்கூடங்களும் கல்லூரிகளும் தன்னிறைவு அடைய வேண்டும். மாணவர்கள் மேற்கொள்கின்ற இலாபம் தரக்கூடியச் செயல்பாடுகள் வழியாக அடைய வேண்டும்.

**(காந்தி இலக்கியம், கல்வி)**

சுதந்திர இந்தியாவின் இடங்களிலும் அடிப்படைக் கல்வித் திட்டத்தை நடைமுறைப்படுத்த முயற்சி மேற்கொண்டாலும் தெளிவான திட்டமிடுதலின் குறைபாட்டினால் அது வெற்றிபெறவில்லை. ஆனால், கைவினைப் படிப்பு ஒரு பாடமாக நமது பாடஏற்பாட்டில் இடம்பெற்றது. ஆனால் இதன் முக்கியத்துவத்தை சமூகமும் கல்வித்துறையும் ஏற்றுக்கொள்ளவில்லை.

இந்தியக் கல்வி வரலாற்றில் முக்கியமான மைல்கல்லாகும் 1964 – 66 இல் நடைமுறைக்கு வந்த கோத்தாரிக் குழுவும் அதன் தொடர்ச்சியாக வந்த 1968 இல் ஒன்றாம் தேசியக் கல்விக் கொள்கையும் பொதுக் கல்வியின் முக்கியக் காரணியாக வேண்டும். இதில் செயற்பாட்டுக் கல்வி, வீடு, தொழிற்சாலை, விளைநிலங்கள் போன்ற இடங்களில் உற்பத்தி சார்ந்த செயல்பாடுகளில் ஈடுபடுவதற்கு செயற்பாட்டுக் கல்வி என்றும் கூறலாம். உற்பத்தி சார்ந்த தொழில் மட்டுமல்லாமல் சேவையையும் செயற்பாட்டுக் கல்வியாக கருத்தில் கொள்ளலாம் என்று கோத்தாரிக்குழு தெளிவுபடுத்துகிறது.

NCERT 1977 - இவ்விடங்களில் உற்பத்தி செய்யும் விதமான செயல்பாடுகளில் ஈடுபடுவதனை நாம் செயல்பாட்டுக் கல்வி என்று கூறுவோம். இதுமட்டுமன்றி சேவையையும் இச் செயல்பாட்டுக் கல்வியில் அடக்கலாம் என்று கோத்தாரிக் கமிஷன் விளக்கமளிக்கிறது.

1977 ஆம் ஆண்டு NCERT தயார் செய்த தேசியக் கல்வித் திட்டத்தில் செயல்பாட்டுக் கல்வி அனைத்து வகுப்புகளிலும் ஒரு பாடமாக வைக்கப்பட்டது. அதற்குப்பின் ஈஸ்வர்பாய் பட்டேல்

குழு இதனை SUPW (Socially Unsful Productive Work) சமூகத் தேவைகளுக்கான பொருட்களை தயார் செய்தல் எனும் பெயரில் மேம்படுத்தி அனைத்து பள்ளிக்கூடங்களிலும் செயல்முறைப்படுத்தத் தீர்மானித்தது. அது அனைத்து பள்ளிக்கூடங்களிலும் நடந்து வந்தது.

இரண்டாம் தேசிய கல்விக் கொள்கை (New Education Policy ) 1986 அமல்படுத்தப்பட்டபோது செயல்பாட்டுக் கல்வி என்ற பெயர் செயல்வழி அனுபவமாக மாற்றியமைக்கப்பட்டது. தேசிய கல்விக் கொள்கை செயல்வழி அனுபவத்திற்கு அளித்த விளக்கம் முதல் பாடத்திலேயே கொடுக்கப்பட்டுள்ளதல்லவா? கல்வி கற்பதன் மூலம் ஒரு தனிநபரும் சமூகமும் நாடும் தன்னிறைவு பெற வேண்டுமென்று இக்கொள்கை கூறுவதன் மூலம் இச்செயல்வழி அனுபவத்திற்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்துள்ளது என்று நாம் அறியலாம்.

2005 ஆம் ஆண்டு வெளிவந்த தேசிய கல்வித்திட்ட வலைச்சட்டம் கீழ்க்காணும் முறையில் இதன் முக்கியத்துவத்தை விளக்குகிறது. ஏதேனும் ஒரு பொருளை தயார் செய்யவோ அதன்மூலம் சமூகத்தின் நிலைப்பாட்டிற்கு ஏதேனும் ஓர் உதவி புரியவோ செய்வதன் மூலம் இச்செயல்வழி அனுபவக் கல்வி சமூகத்திற்குச் சில நன்கொடைகளை அளிக்கிறது. இரசனை மற்றும் மகிழ்ச்சியின் ஒரு நிலை கூட இச்செயல்வழி அனுபவத்தில் அடங்கியுள்ளது. எனவே தொழில் அனைத்து விதத்திலும் மனித வாழ்க்கையை செழிப்படையச் செய்கிறது எனலாம். கேரளக் கல்வித் திட்ட வலைச்சட்டம் 2007 இன் படி சிறந்த கல்வி என்பது ஒரு குழந்தையின் பிறப்புரிமையாக அறிவிக்கும் ஒரு பதிவாகும். இந்தக் கல்வித் திட்ட வலைச்சட்டத்தில் தொழிற்கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. வேலை அனுபவம் கற்றல் செயல்பாடுகளின் இன்றியமையாத கூறாக அமையவேண்டும். அனுபவ அறிவும் கைவினைத் திறனும் பெறுவதற்குரிய செயல்பாடுகள் இடம்பெற வேண்டும். கேரளத்தின் முன்னேற்றத்திற்குத் தேவையான மனித வளங்களுடைய உற்பத்தி மையமாக கல்வி நிலையங்கள் மாற வேண்டும். வயல்வெளிகளுக்கும் தொழிற்சாலைகளுக்கும் உபயோகப்படும் விதம் பொதுக்கல்வியில் மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும். கற்பவர்களுக்கு மனதைரியமும் வேலை அனுபவமும் தன்னிறைவு பெறுவதற்கு உதவும் முறையில் அமைந்த செயல்வழிக் கல்வித் திட்டத்தையே KCFபரிந்துரை செய்தது.

கேரளா கல்வி திட்டவரைவு 2013 – ம் செயல்கல்விக்கு முக்கியத்துவம் வழங்கியது.

## NSQF (National Skill Qualification frame work)

பொதுக்கல்வியும் தொழிற்கல்வியும் முற்றிலும் வேறுபட்ட நிலையில் இயங்கிக் கொண்டிருக்கும் காரணத்தினாலேயே நேஷணல் ஸ்கில் குவாலிபிகேஷன் பிரேம் வாக் (NSQF) என்ற இந்த திறன்சார் பொதுக்கல்வி உருவாக்கப்பட்டது.

இதன் வழி உயர்நிலையின் கல்வியை தொழில் திறனுமாக தொடர்புபடுத்துகிறது. இதற்குத் தேவையான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

பன்முக அறிவுத்திறன் (Multiple Intelligence Theroy) குறித்த பார்வை செயல்வழிக் கல்விக்கு மேலும் ஒரு சிறப்பையும் அளித்துள்ளது. முழுமையான வளர்ச்சி என்பது அறிவின் பன்முக வளர்ச்சியுடன் தொடர்புபடுத்துவோமானால் அதற்கு ஏராளமான அனுபவங்களைப் பெறுவதற்கு இச்செயல்வழிக் கல்வி உதவுகிறது.

ஒரு காலகட்டத்தில் செயல்வழிக் கற்றல் மட்டுமே கல்வி என்ற நிலையிலிருந்து செயல்முறை இல்லாத கல்வி என்ற நிலைக்கு மாறிய கல்வி இன்று செயல்வழிக் கல்வியாக மாறுவதற்கு பல்வேறு வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளதாக நாம் அறிவோமல்லவா?

சுருக்கமாக மிகத் தெளிவான பார்வையுடனும் தீர்க்கதரிசனத்துடனும் இச்செயல்வழிக் கல்வி பள்ளிக்கூட பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் பல காரணங்களால் அது லட்சியத்தை இன்னும் அடையவில்லை. இதற்கான காரணங்கள் என்ன? எவ்வாறு இதிலிருந்து வெளிவரலாம் போன்ற வினாக்களை வல்லுனர்களின் நேர்காணல் மூலமும் மேலும் விவரங்கள் சேகரித்தும் தெளிவான கலந்துரையாடல் நடத்தவேண்டும்.

உடலுழைப்போடுள்ள நமது சமூகத்தின் மனநிலை.

பாடத்திட்டத்தின் சுமை

தேர்வுமுறை

அரசும் கல்வி அதிகாரிகளுக்கிடையே கருத்துருவாக்க பிரச்சினைகள்.

பல வளரந்த நாடுகளிலும் மேல்நிலையில் நற்பண்புகள் சார்ந்த பாடங்களை தேர்ந்தெடுத்து படிக்க வாய்ப்புண்டு. சில பாடங்களை படித்தே ஆக வேண்டும். என்ற நிலையுள்ளது. இது நமது நாட்டில் பயன்பட்டில் இல்லை, எனில் NSQP புதிய வாய்ப்புகளை திறந்து தரும்.

இவற்றையெல்லாம் மனதில் வைத்து விவாதிக்கவும்.

| |
|---|
| செயல்வழிக் கல்வியே தனிநபருக்கும் சமூகத்திற்கும் என்ற கருத்தை மையமாகக்கொண்டு முழுமையான கட்டுரை ஒன்று தயார் செய்க. |

**Port folio:** அறிக்கை (காந்திஜியின் கல்விக்கண்ணோட்டம்)

**Evaluation:** காந்திஜியின் கல்விக் கண்ணோட்டம், காந்தி இலக்கியம், கல்வி என்ற புத்தகத்தின் அடிப்படையில் தயாராக்கிய அறிக்கை.

**மேற்கோள்**

1. காந்தீய இலக்கியம் கல்வி (மாத்ருபூமி வெளியீடு)
2. NSQF Document (MHRD)

# செயல்வழிக் கல்வி - கற்றல் அணுகுமுறை

**L.O: செயல்பாடுகளை உற்றுநோக்கி செயல்வழிக் கல்வியின் அணுகுமுறையைக் குறிப்பிடுகின்றனர்.**

## முக்கிய கருத்துகள்

செயல்வழிக்கல்வி அணுகுமுறை

கேரளத்தின் பாடஏற்பாட்டில் பிற விஷயங்களின் அணுகுமுறையோடு பொருத்தப்படுகின்ற அறிவியல் முறையே செயல்வழிக் கல்விக்கும் உள்ளது என்று கூறலாம். ஆசிரிய மாணவன் இந்த அணுகுமுறையை உட்கொண்டுதான் பாடஏற்பாடு பரிமாற்றம் செய்யவேண்டும். எனவே இதைக்குறித்து நுட்பமாக ஆராய்வோம். படைப்பாற்றலுக்கு வாய்ப்பு உடையதும் படைப்புகளின் உருவாக்கத்தையும் சேவையையும் சென்றடையும் விதம் செயல்வழிக் கற்றல் அமையவேண்டும் என்பதை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும்.

ஆறாம் வகுப்பில் அல்லது ஏழாம் வகுப்பில் குழந்தைகள் வாழ்த்து அட்டை உருவாக்கும் செயல்பாட்டை செய்வதை சிந்தித்துப் பாருங்கள். செலவு குறைவானதும் எளிதில் கிடைக்கக் கூடியதுமான பொருட்களைப் பயன்படுத்தவேண்டும் என்பதை மறக்கக் கூடாது.

வகுப்பைத் தொடங்குவது எப்படி? சிறப்பு தினங்களில் வாழ்த்து அட்டை அனுப்புவதை நினைவில் கொண்டு வந்து, சொந்தமாக உருவாக்கக்கூடிய அட்டையாக இருந்தால் அதன்வழி ஏற்படுகின்ற மகிழ்ச்சி ஆகியவற்றை கலந்துரையாடல் வழியாக உருவாக்கி வகுப்பைத் தொடங்கலாம் அல்லவா? கிடைக்கப்பெற்ற வாழ்த்து அட்டைகள், அதை உருவாக்கிய மகிழ்ச்சி இவற்றையெல்லாம் குழந்தைகள் வாய்மொழியாகக் கூறுவார்கள் அல்லவா? படைப்புகளை உருவாக்குவதற்குத் தேவையானப் பொருட்கள் குறித்தும் கலந்துரையாடவேண்டும். அட்டையை அழகுபடுத்துவதற்கு அழகான ஒரு படத்தை ஒட்டி வைக்கலாம். இலை போன்றவற்றை நேரடியாக பயன்படுத்துவதற்கான வாய்ப்பு உண்டல்லவா? இலை அச்சு / மார்பிள் அச்சு / நூல் பயன்படுத்தியுள்ள படம் / வடிவமைப்பு . . . என எத்தனை வாய்ப்புகள் உள்ளன.

அட்டையின் அளவு, எத்தனை மடிப்புகள், போன்றவை ஆலோசிக்க வேண்டுமல்லவா? அட்டையில் மனதைக் கவருகின்ற வாழ்த்துச் செய்தி வேண்டும் அல்லவா?

இதைச் செய்வதற்கு அட்டை வேண்டும். அதற்கு உறை வேண்டும். இந்தச் செயல்பாட்டை இரு பிரிவேளைகளில் முழுமையாக்குவதற்கு இயலும்.

திட்டமிட்டுச் செயல்களைச் செய்யும்போது அதில் அறிவு பெறுதலும் திறன் வளர்ச்சியும் இரசிப்புத் தன்மையும் அமைகிறது. வாழ்க்கைச் சூழலுக்கு உதவவும் செய்கிறது.

இனி வேறொரு செயல்பாட்டைப் பார்ப்போம்.

இரண்டாம் வகுப்பு குழந்தைகள் ஓலைக்கீற்று பயன்படுத்தி விளையாட்டுப் பொருட்கள் செய்வதை கற்பனை செய்து பாருங்கள். ஈர்க்கில் குச்சியைப் பயன்படுத்தி கண்ணாடி, ஓலைக்கீற்று பயன்படுத்தி கைக்கடிகாரம், ஓலைக்கீற்று பயன்படுத்தி பந்து, ஓலைப்பாம்பு, ஓலைவண்டு, முதலியவை ஒரு செயல்பாட்டில் ஈடுபடவேண்டுமெனில் அதன் தேவையுணர்வு குழந்தைக்கு இருக்கவேண்டும்.

எளிதில் கிடைக்கின்ற பொருட்களாக இருப்பது நல்லது. செலவு அதிகமானால் நடைமுறைபடுத்துவது கடினம். ஒரு செயல்பாடு பிறபாடங்களின் கற்றல் வாய்ப்புக்கு உதவுவதாக இருந்தால் மிக நல்லது. இங்கே குறிப்பிடப்பட்ட இரு செயல்பாடுகளின் அடிப்படையில்

அணுகுமுறையை விளக்குவதற்கு உங்களால் இயலுமல்லவா? அதனை எவ்வாறு தொகுக்கலாம்.

- அனுபவம் அடிப்படையானது
- தேவை அடிப்படையானது
- செயல்முறைக்கு இணைந்தது
- சூழலுக்கு இணைந்தது
- ஒருங்கிணைந்தது
- படைப்பாற்றல்
- படைப்புகள் சார்ந்தது
- பன்முக அறிவு வளர்ச்சிக்கு உதவுவது

என்பதாக இருக்கும் தலைப்புகள். தொகுக்கவும்.

இந்த சிறப்பியல்புகளுக்கு ஏற்ப ஒவ்வொன்றும் மேற்குறிப்பிட்ட செயல்பாடுகளின் அடிப்படையில் விளக்கவேண்டும்.

செயல்பாட்டை சுயமாகச் செய்யும் அனுபவம் குழந்தைக்கு இருக்கவேண்டும். முன்னறிவுகளைப் பகுப்பாய்வு செய்தும், புதிய செயல்பாடுகளை உற்றுநோக்கியும் தன்னம்பிக்கையுடன் முன்னோக்கிச் செல்வதற்கு இயலவேண்டும். அதற்கான வாய்ப்பை உருவாக்குவது தான் ஆசிரியரின் கடமை. செயல்பாட்டைச் செய்யவேண்டியதன் தேவை குழந்தைக்கா? அல்லது ஆசிரியருக்கா? தேவையுணர்வை உருவாக்காமல் செயல்பாட்டில் ஈடுபடும்போது குழந்தைகள் அதில் ஆர்வமுடையவர்களாக இருப்பதில்லை என்பதை ஆசிரியர் உணர்ந்துகொள்ள வேண்டும்.

பிற பாடங்களைப் போன்று செயல்முறை அடிப்படையான அணுகுமுறையைத் தான் செயல்வழிக்கற்றலிலும் கையாள வேண்டும். குழந்தையின் உளச் செயல்முறையும் வகுப்பறைச் செயல்முறையும் இங்கே வெளிப்படுகிறது. தேவையுணர்வை உருவாக்கி முன்னறிவுகளை நினைவுகூர்ந்தும் அதைப் பகுப்பாய்வு செய்தும் செயல்பாட்டைத் தொடங்க வேண்டும். வகுப்பில் கலந்துரையாடல் வாயிலாக கருத்துகள் உருவாகிறது. படைப்புகள், செயல்பாட்டுநிலைகள், உபகரணங்களைக் கையாளும்போது எடுக்கவேண்டிய முன்னெச்சரிக்கைகள் ஆகியவற்றை இவ்வாறு புரிந்துகொள்ளலாம். வாழ்த்து அட்டை அனுப்பவேண்டிய ஒரு சூழலில், நாம் செயல்பாட்டிற்கு நேராக குழந்தைகளை வழிநடத்துவதாக இருந்தால் தேவையுணர்வு உருவாகிறது. அதில் தொடங்கி படைப்புகள் உருவாக்குவது வரை நடைபெறுகின்ற, நடைபெற வேண்டிய வகுப்பறைச் செயல்முறையை ஆசிரியர் திட்டமிடவேண்டும். படைப்புகள் உருவாக்குவது மட்டுமல்ல அந்தச் செயல்முறை வழியாகக் கடந்து செல்வது என்பதுதான் முக்கியம். இதுதான் செயல்முறை அடிப்படையிலான அணுகுமுறையின் முக்கிய அம்சம்.

செயல்வழிக் கல்வியைப் பொறுத்தவரையில் மூலப்பொருட்கள் சுற்றுப்புறத்திலிருந்து கிடைப்பது, செலவு குறைந்தது போன்ற விஷயங்களைக் கருத்திற்கொள்ள வேண்டும். பாழ்பொருட்களை (உபயோகமற்ற) பயன்படுத்துவதற்கு ஊக்குவிக்க வேண்டும். சுற்றுச் சூழலுக்கு இயைந்ததாக அமைய வேண்டும். சுற்றுச்சூழலுக்கு இணைந்த அணுகுமுறை என்பதன் பொருள் இதுவாகும். ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ஏற்ற செயல்பாடுகளைத் தேர்வு செய்யவும் பொருட்களின் கிடைக்கும் தன்மை - (மனிதவளம் - மூலப்பொருட்கள்) ஆகியவற்றைக் கருத்திற்கொள்ளவும் வேண்டும்.

பல்வேறு பாடங்களின் கற்றல்களோடு இணைத்து கற்பிக்கும் வாய்ப்பு கிடைக்கும்போது, அதற்கு முக்கியத்துவத்தை அளிக்கவேண்டும். அறிவு பெறுதலும், திறன் வளர்ச்சியும் ஒன்றுபோல பார்க்கவேண்டும் என முன்பு கூறினோம் அல்லவா? வேறுபட்ட திறன்களின் வளர்ச்சிக்கு வாய்ப்பை அளித்துக்கொண்டு செயல்பாட்டைச் செய்யவேண்டும். இத்தகைய உள்ளார்ந்த, புறம்பான ஒருங்கிணைப்பு நடைபெறுவதற்கான வாய்ப்பை உருவாக்குவதற்கு ஆசிரியை கவனம் செலுத்த வேண்டும்.

செயல்வழிக் கல்வியின் இலக்கு என்பது போலச் செய்தல் மட்டுமல்ல. ஒவ்வொரு செய்லபாட்டிலும் புதுமையும், தனித்துவமும் உருவாக்குவதற்கு ஊக்குவிக்க வேண்டும். செயல்பாடு இயந்திரத்தன்மையுடையதாகும்போது இரசிப்புத் தன்மை இருப்பதில்லை. ஈடுபடுகின்ற வேலையில் தன்னுடைய பங்கை சேர்க்கும்போது அது படைப்பாற்றலாக மாறுகிறது. அத்தகைய செயல்பாடு குழந்தைக்கு மகிழ்ச்சியான அனுபவமாக இருக்கும்.

செயல்பாடு வழியாக படைப்புகளோ சேவையோ கிடைக்கவேண்டும் என்ற கண்ணோட்டமே படைப்புகள் சார்ந்தது என்பதன் பொருள். செயல்பாடு நாட்டிற்கும் தனக்கும் சமூகத்திற்கும் பயன்படுவதாக அமையவேண்டும் என்பது பொருள். புதிய கண்டுபிடிப்புகள், நுட்பமான திட்டங்கள் ஆகியவற்றை ஊக்குவித்தல் என்பதும் இதோடு சேர்ந்து பார்க்க வேண்டும்.

பன்முக அறிவு வளர்ச்சி கற்றல் செயல்பாடு முழுவதும் கருத்திற்கொள்ள வேண்டும் எனக் கற்றோம் அல்லவா? இயலுகின்ற சூழல்களில் இதை மனதிற்கொண்டு வாய்ப்புகளை உருவாக்குவதற்கு ஆசிரியர் கவனம் செலுத்த வேண்டும். புறக்காட்சி அறிவும் காரண காரியச் சிந்தனை சார்ந்த அறிவும் சரியாகப் பயன்படுத்தும் போது படைப்புகள் அழகாகவும் வடிவமைப்புடனும் அமைகிறது. வாழ்த்து அட்டை உருவாக்கும்போது வாங்கிய அட்டை வீணாகாமல் இயன்றஅளவு துண்டுகள் வெட்டி எடுப்பதற்கு ஊக்குவிக்கவேண்டும். பலமுறைகளில் ஆராய்ந்து பார்த்தால் தான் சரியான வழியைக் கண்டுபிடிக்க இயலும். இதை ஆசிரியரே சொல்லிக்கொடுத்தால் குழந்தையின் அறிவு வளர்ச்சியடையுமா? குழுவாகச் செய்யும் செயல்பாடுகள், படைப்புகளின் பங்கீடு, காரணகாரியத் தொடர்புடன் கூடிய பயன்பாடு இவற்றையெல்லாம் குறிப்பிடுவதாக இருந்தால் தனிநபர் அறிவில் உயர்ந்தவர்களாக மாணவர்கள் வளர்ச்சியடைவார்கள் அல்லவா? சுய மதிப்பீட்டிற்கும் பரஸ்பர மதிப்பீட்டிற்குமான வாய்ப்பையும் முக்கியத்துவத்தையும் நினைவுகூரவும். இயற்கையுடன் ஈடுபடுகின்ற வாய்ப்பு இல்லாததன் காரணமாக சில தனிநபர் ஊனங்கள் வருவதாக அண்மைக்கால ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. இயற்கையுடன் ஈடுபடுவதற்கான ஏராளம் வாய்ப்புகளை உருவாக்குவது இயற்கை சார்ந்த அறிவு வளர்ச்சிக்கு உதவும் என்பது புரிகிறது அல்லவா? பிற விஷயங்களை நீங்களே சிந்தியுங்கள்.

**Portfolio** அணுகுமுறையை விளக்குவதற்காக உருவாக்கியவற்றின் Work Diary

**Evaluation** NCF, KCF இன் அடிப்படையில் செயல்வழிக்கல்விகற்றல் அணுகுமுறை குறிப்பு தயாராக்கவும்.

**Reference**

செயல்வழிக்கற்றல் - Hand Book (LP, UP, HS) SCERT கேரளா.

## அலகு - 3

# செயல்வழிக் கல்வி - கருத்துமண்டலங்கள்

## முன்னுரை

தேசிய பாட ஏற்பாடு சட்டகம் (NCF 2005) கேரள பாடத்திட்ட அணுகுமுறை போன்றவற்றில் செயல்வழிக் கல்வியின் முக்கியத்துவம் விளக்கப்பட்டுள்ளது. எனினும் இதோடு தொடர்புடைய செயல்பாடுகளுக்கு வகுப்பறையில் முக்கியத்துவம் அளிக்க இயலவில்லை. பள்ளிப் பாடத்திட்டத்தில் பிற பாடங்களின் பரிமாற்றத்தோடு சேர்த்து செயல்வழிக் கல்வியின் பல்வேறு மண்டலங்களை இணைக்க வேண்டி உள்ளது. என்றால் மட்டுமே செயல்வழிக் கல்வியில் மாணவர்களுக்கு ஆர்வத்தை வளரக்க் இயலும். NCERT 1981 -இல் வெளியிட்ட கைடுலைனில் செயல் வழிக்கல்வியின் 6 மண்டலங்களைப் பற்றி சரியாக குறிப்பிடப்பட்டுள்ளது. பாடத்தின் அடிப்படையில் வகுப்பறை செயல்பாடுகளை இந்த மண்டலங்களோடு தொடர்பு படுத்தி செயல்பாடுகளை திட்டமிட ஆசிரியர் பயிற்சி மாணவனுக்கு இயல வேண்டும்.

## முக்கிய கருத்துகள்

செயல்வழிக் கல்வி மண்டலங்கள்

**L.O. கற்றல் செயல்பாடுகளை மண்டலங்களாகப் பிரித்து அட்டவணை தயார் செய்தல்.**

செயல் அதாவது தொழில் மனிதனின் அடிப்படை வாழ்க்கைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கோ வாழ்க்கையை மனதிருப்தியும் இன்பமுடையதாகவும் மாற்றும் நோக்கம் உடையதாகும். நமது சுற்றுப்புறத்திலுள்ள எந்தச் செயல்பாட்டை பரிசோதித்தாலும் இது தெளிவாகும். தேசிய அளவில் கருத்து மண்டலங்களை தேர்ந்தெடுக்கும்பொழுது அடிப்படை தேவைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் அத்துடன் நின்றுவிடுவதில்லை. மிகவும் நெகிழ்வுத் தன்மையுள்ள அணுகுமுறை பாடஏற்பாடு உள்ளடக்கத்தைத் தேர்வுசெய்யும் பொழுது வேண்டும் என NCERT வரைவு கூறுகிறது.

"The Content of Work Experience Programme is to be based on the needs of the child on the one hand, and the resources available in the communtiy and the facilities  available in the school on the other."

Work Experience in School Education – Guide lines NCERT, New Delhi 1987.

உங்களுடைய சுற்றுப்புறத்திலுள்ள தொழில்களைப் பட்டியலிடவும். அவற்றை மேலே குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படையில் வாழ்க்கைத் தேவைகள், பொழுதுபோக்கிற்குத் தேவைகள், சமூகத் தேவைகள் என்ற முறையில் கண்டறிந்து வேறுபட்ட முறையில் வகைப்படுத்த முயற்சி செய்யவும்.

வகைப்படுத்தும்பொழுது - உணவு, இருப்பிடம், ஆடை, உடல்நலப் பாதுகாப்பு, சுற்றுலா, சமூக சேவை என்று கிடைத்ததல்லவா. இதே முறையிலேயே தேசிய அளவிலும் மண்டலங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. கேரள பாட ஏற்பாடும் இதையே குறிப்பிடுகிறது. இவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

- உணவும் வேளாண்மையும் (Food and agriculture)
- உடல்நலமும் சுகாதாரமும் (Health and Hygiene)
- ஆடை அணிதல் (Clothing)
- இருப்பிடம் (Shelter)

- பொழுதுபோக்கு (Recreation)
- சமூக சேவையும் பொருட்களின் உற்பத்தியும் (Social Service and Productive work).

**NCERT 1987 - இல் வெளியிட்ட வழிகாட்டுதலில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது**

The Work Experience programme cetnres around six areas of human needs, namely, food, health and hygiene, clothing, shelter, Culture and recreation and social service. "A balanced selection of activities in each of these areas may be made according to the educational potential of each activtiy and the facilities – materials tools, space, teacher expertise etc and the time available for it."

**கேரளாவிலுள்ள Work Education பாடஏற்பாடு மண்டலங்களுக்குள் செயல்பாடுகளை அட்டவணைப்படுத்தலாம்.**

பள்ளிக்கூட மாணவர்களுக்கு செய்வதற்கு இயலுவதும் அணுகுமுறைக்கு பொருத்தமானதுமான செயல்பாடுகளே அட்டவணையில் வரவேண்டும். முதலாவது அட்டவணைப்படுத்துவதும் தரத்திற்கு ஏற்றவாறு ஒழுங்குபடுத்தி கட்டங்களில் சேர்ப்பதே சிறந்ததாகும். ஆசிரியரின் உதவியோடு இறுதிவடிவம் உருவாக்கலாம். ஒரு செயல்பாடு சில வேளைகளில் ஒன்றுக்கு மேற்பட்ட மண்டலங்களோடு தொடர்புடையதாக இருக்கலாம். அப்போது எது முக்கியமானது என்பதை தீர்மானிக்க வேண்டும்.

**செயல்வழிக் கற்றல் : மண்டலங்களாகப் பிரித்து அட்டவணைப்படுத்துதல்**

**வகுப்பு : ................................ பொருள் : ............................ அலகு : ..............................**

| பொழுது போக்கு | இருப்பிடம் | ஆடை அணிதல் | உடல் நலமும் சுகாதாரமும் | உணவும் வேளாண்மையும் | சேவை உபயோகிக்கப்படும் பொருட்களின் உற்பத்தி |
|---|---|---|---|---|---|
| | | | | | |

**Portfolio** வகுப்பு பாட அடிப்படையில் செயல்வழிக் கற்றலின் ஆறுமண்டலங்களாக பிரித்து அலகு பகுப்பாய்வு செய்து தயாராக்கிய அட்டவணை.

**Evluation** அலகு பகுப்பாய்வு செய்து ஆறு மண்டலங்களின் அடிப்பையில் அட்டவணை தயாராக்குதல்.

செயல்வழிக் கற்றல் செயல்பாடுகள் அதற்கேற்ற மண்டலத்தில் என நிர்ணயம் செய்ததின் யுக்தியை பகுப்பாய்வு செய்து குறிப்பு தயாராக்கவும்.

**Reference**

செயல்வழிகற்றல் Hand book ( LP, UP, HS) SCERT KERALA